Registered as a Newspaper
பக்கம் -20 விலை 12/=

# தமிழ் அலை

TAMILALAI

வாரமலர்

அலை - 01 ஞாயிற்றுக்கிழமை, 16-11-2003 ஓசை -33

## ஆட்சிப் புரளிக்குள் சமாதானத் தூது




தமிழ் பேசும் மக்களின் உணர்வலை

தமிழ் அலை
வாரமலர் Tamilalai
பிரதான வீதி,
கொக்கட்டிச்சோலை.
தொ. பே, தொலைநகல் 065.2226110
E-MAIL. tamilalai32@yahoo.com.
www.tamilalai.net
16.11.2003

## சமாதானத்திற்கு சாவுமணியா?

என்னதான் பகீரத முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டாலும் சிங்கள தேசம் தமிழினத்தின் உரிமைகளை வழங்குவதற்கு ஒரு காலமும் இணக்கம் தெரிவிக்காது என்பது வரலாற்று உண்மை.

தற்போது ஜனாதிபதி சந்திரிக்கா மேற் கொண்டுள்ள அதிரடி ஆட்டத்தால் சமாதான பேச்சு வார்த்தைகள் முடக்கப்பட்டுள்ளன. அத்துடன் அதன் செயற்பாடுகள் நாளுக்கு நாள் பலவீனப்பட்டுக்கொண்டு செல்வதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

சிறிலங்கா அரசுக்கும், தமிழீழ விடுதலைப்புலிகளுக்குமிடையில் நிரந்தரச் சமாதானத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதில் முழுமூச்சாக செயற்பட்ட நோர்வே தமது பணிகளைத் தற்காலிகமாக இடை நிறுத்தியிருப்பது சமாதான நடவடிக்கைகளை மேலும் பலவீனப் படுத்தியிருக்கிறது.

சமாதானப் பேச்சுக்கள் மூலம் தீர்வு காணும் வகையில் விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்ட தன்னாட்சி அதிகார சபை வரைபை எதிர்த்து நிற்கும் ஜனாதிபதியும் அவரது சகபாடிகளும் இறுதியில் ஜனாதிபதி மூலமாக மேற்கொண்ட அரசியல் குழப்பங்களால் அதிகாரப் பறிப்புக் களால் சமாதானம் முடக்கமடைந்துள்ளது.

இன்னுமொரு போர் வெடிக்குமோ விடுதலைப் புலிகள் சண்டையைத் தொடங்கி விடுவார்கள் என்றெல்லாம் தென்னிலங்கையில் இனவாத சக்திகளால் விசமத்தனமான பிரசாரங்களும் மேற்கொள்ளப்பட்டன.

எனினும் விடுதலைப் புலிகளின் தலைமைத்துவம் மீண்டும் ஒரு முறை ஆணித்தரமாக உறுதியாக நாங்கள் சமாதானத்திற் காக பேச்சுக்கள் நடத்த தயாராக இருக்கிறோம். என்பதைச் சர்வ தேச சமூகத்திடமே வெளிப்படையாக தெரிவித்துள்ளது.

இந் நிலையில் அடுத்தது போரா? சமாதானமா? என்பதை தீர்மானிக்க வேண்டிய பொறுப்பு ஜனாதிபதி சந்திரிகாவின் கைகளில் தான் தங்கியுள்ளது. ஒருவனுடைய இரு கண்களையும் இறுக்கி கட்டிவிட்டு நடக்கச் சொல்வது போல் அரசாங்கத்தின் அதிகாரங்களைப் பறித்துக் கொண்டு சமாதானத்தை முன்னெடுக்குமாறு பிரதமரி டம் ஜனாதிபதி கூறுவது வேடிக் கையானது.

எனவே நிரந்தர சமாதானத்தை நோக்கிய பாதையில் ஏற்பட்டுள்ள மிக மோசமான பாதிப்புக்களை ஜனாதிபதி உணர்ந்து சமாதானத்தை மீள ஆரம்பிக்கக் கூடிய வழி முறைகளை நடைமுறைப்படுத்த வேண்டும்.

# அனுசரணையிலிருந்து நோர்வே விலகல்
# கைநழுவிப் போகும் சமாதானம்

ஸ்ரீலங்கா ஜனாதிபதி தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும், ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணிக்குமிடையில் ஏற்பட்டுள்ளஅதிகாரப்போட்டி ஸ்ரீலங்கா அரசாங்கத்திற்கும், தமிழீழ விடுதலைப்புலிகளுக்குமிடையிலான சமாதானப் பேச்சுவார்த்தையை தேக்கமடையச் செய்துள்ளது. இரு தரப்பினருக்குமிடையில் அனுசரணையாளராகச் செயற்பட்டு வந்த நோர்வே தரப்பு. ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் சார்பில் யார் பேசுவது என்று ஏற்பட்டுள்ள முரண்பாடுகாரணமாக அனுசரணையாளர் என்ற நிலையிலிருந்து தற்காலிகமாக ஒதுங்குவதாக வெள்ளியன்று பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் அறிவித்திருக்கிறார்.

சமாதான நடைமுறைகளில் தற்போது ஏற்பட்டுள்ள உறை நிலையைப் போக்குவதாயின் ஜனாதிபதிக்கும், பிரதமருக்குமிடையிலான அதிகாரப்போட்டி முடிவுக்கு வருவதுடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் சமாதான நடைமுறைகளை முன்னெடுக்க வேண்டும். ஆனால் ஜனாதிபதி தன்னால் பொறுப்பேற்கப்பட்ட மூன்று அமைச்சுக்களையும் திரும்பி ஒப்படைக்க மாட்டேன் என்று அடம் பிடித்து வருவதுடன் தேசிய அரசாங்கத்தை அமைத்து சமாதான நடைமுறைகளைக் கையாள வேண்டுமென்ற தமது நிலைப்பாட்டையே தொடர்ந்தும் வலியுறுத்தி வருகிறார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவோ மூன்று அமைச்சுக்களையும் திருப்பி ஒப்படைத்தால் தான் தன்னால் சமாதான நடைமுறைகளைத் தொடர முடியும், மீள ஒப்படைக்க ஜனாதிபதி இனங்கா விட்டால் அவரே சமாதான பேச்சுவார்த்தைகளைக் கொண்டு நடத்த வேண்டுமென்று உறுதியாகச் சொன்னார்.

தற்போதைய சமாதான நடைமுறைகளில் பிரதான அனுசரணையாளர் பாத்திரத்தை வகிக்கும் நோர்வே நாட்டின் சிறப்பு சமாதானத் தூதுவர் எரிக்சொல்ஹெயிம் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் ஆகியோர் இவ்வாரம் சிறிலங்காவுக்கும் வன்னிக்கும் விஜயம் செய்து பிரமர், ஜனாதிபதி ஆகியோரைஅரசாங்க தரப்பு சார்பிலும், தமிழீழ விடுதலைப்புலிகளின் தேசியத்தலைவர் வே. பிரபாகரன்

**ஜி.நடேசன்**

அவர்களையும் சந்தித்து கலந்துரையாடிய பின்னர் அனுசரணையாளர் பொறுப்பிலிருந்து தற்காலிகமாக விலகும் அறிவித்தல் விடப்பட்டுள்ளது.

சமாதான நடவடிக்கைகள் முற்றாக முறிவடையாமல் இருப்பதாக போர் நிறுத்த ஒப்பந்தம் கடைப்பிடிக்கப் படுவதுடன் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு தொடர்ந்து செயற்படுமென அறிவிக்கப்பட்டிருப்பது சமாதான நடவடிக்கைகள் எதிர் காலத்தில் தொடரலாம் என்ற நம்பிக்கையை கதைக்காவது தக்க வைத்துள்ளது.

கடந்த வியாழனன்று தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும், நோர்வே அனுசரணையாளர்களுக்கமிடையில் நடைபெற்ற சந்திப்பின் போது தேசியத்தலைவர் வே.பிரபாகரன் புலிகளின் நிலைப்பாட்டை ஐயம் திரிவுக்கு இடமில்லாது உறுதிபட தெளிவாக அறிவித்திருக்கிறார். இது சர்வதேச சமூகத்திற்குமான செய்தியாகும்.


தமிழீழ விடுதலைப்புலிகள் சமாதான நடைமுறைகளில் அர்ப்பணிப்புடனும், இதய சுத்தியுடனும் இருப்பதாகவும், தமிழ் மக்களது அபிலாசைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய தீர்வை சர்வதேச சமூகத்தின் அனுசரணையுடன் சமாதான வழிமுறைகளில் பெறலாமென்ற நம்பிக்கை இன்னமும் எமக்கு உள்ளது. ஆனால் தென் இலங்கையில் ஏற்பட்டுள்ள அதிகாரப்போட்டி அரசாங்கத்தின் சார்பில் எவருடன் பேசுவது என்ற நிலையை ஏற்படுத்தியுள்ளது. எனவே அதிகாரப் போட்டி முடிவு கண்டபின்பே பேச்வார்த்தையைத் தொடர முடியும்.



எனவே அதுவரை சமாதான நடைமுறைகளின் அடிப்படையான போர் நிறுத்த ஒப்பந்தம் முறையாகக் கடைப்பிடிப்பதுடன் படையினரின் கட்டுப்பாட்டு பிரதேசங்களில் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடும் போராளிகளின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப் படவேண்டும். யுத்தம் எம்மீது திணிக்கப்படாதவரை நாம் சமாதான நடைமுறைக்குப் பூரண ஆதரவு வழங்குவோம் என்றும் தலைவர் பிரபாகரன் நோர்வே அனுசரணையாளர்களுக்குத் தெளிவாக அறிவித்திருக்கிறார்.

பிரதமரோ அல்லது ஜனாதிபதியோ சமாதானப் பேச்சுவார்த்தை தாம் தொடர்வோம் என உறுதிமொழி அளிக்காத நிலையில் நோர்வே தற்காலிகமாக ஒதுங்கும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறது.

தமிழீழ விடுதலைப்புலிகள் கடந்த ஏப்ரல் முதல் சமாதான பேச்சுவார்த்தையிலிருந்து தற்காலிகமாக ஒதுங்கியிருப்பதாக அறிவித்திருப்பது தெரிந்ததே. ஆறு கட்டங்களாக நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் முடிவுகள் அமுல் படுத்தப்படவில்லை. இந்த முறையில் சமாதான பேச்சுவார்த்தையில் நாம் கலந்து கொள்வதாயின் அவற்றில் எடுக்கப்படும் தீர்மானங்களை மட்டுமல்ல, வடக்குக் கிழக்கில் இயல்பு நிலையை ஏற்படுத்துவதாக இடைக்கால நிர்வாகசபை நிறுவினால் மட்டுமே மீண்டும் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ளவோமென அறிவித்து விட்டு போர் நிறுத்தத்தை அனுசரித்து வருகிறார்கள்.



இடைக்கால நிர்வாக சபை தொடர்பாக ஸ்ரீலங்கா அரசாங்கம் சமர்ப்பித்த வரைபை நிராகரித்து தமிழீழ விடுதலைப்புலிகள் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை தொடர்பான வரைபை கையளித்த நிலையிலேயே அனுசரணையாளர் என்ற நிலையிலிருந்து விலகுவதாக நோர்வே அறிவித்துள்ளது.

ஸ்ரீலங்காவின் உறுதியான அரசாங்கம் ஏற்படுத்தப்பட்டு அது சமாதான பேச்சுவார்த்தையை மீண்டும் ஆரம்பிக்க விரும்பும் அதேவேளை நோர்வே அரசாங்கம் அனுசரணையாளராக செயற்படுவதற்கு முன்வர வேண்டும். இந்த நிலை ஏற்படுவது அவ்வளவு இலகுவானதாக இருக்காது என்பதை தற்போதய அரசியற்கள நிலைமைகள் நிலை நிறுத்தியிருக்கிறது.

ஜனாதிபதி சந்திரிக்காவின் அரசியல் அதிரடி நடவடிக்கைகள் ஸ்ரீலங்கா அரசாங்கத்தினை நெருக்கடிக்குள் தள்ளியிருப்பதுடன், புலிகளைப் பொறுத்தவரை சாதகமான நிலையை ஏற்படுத்தியிருக்கிறது. புலிகள் சமாதான நடைமுறைகளில் அக்கறையாக இருக்கும் அதேவேளை ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் வசமே இப்போது பந்து இருக்கிறது என்பதை உலகம் மெல்ல மெல்லப் புரிந்து வருகிறது.

மறுபுறம் ஜனாதிபதியின் வீம்புத்தனத்தால் நாடு மிகுந்த நெருக்கடிகளை எதிர் கொள்ளவும் இருக்கிறது. டோக்கியோ மாநாட்டில் இணக்கம் காணப்பட்ட உதவியான 4பில்லியன் அமரிக்க டொலர் உதவி கிடைப்பதற்கு ஸ்ரீலங்கா அரசாங்கம் தாண்ட வேண்டிய தடைக்களும் அதிகரித்து வருகின்றன.

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் சமாதானத்தின் பலாபலன்களைப் பொதுமக்களும் அனுபவிக்கக் கூடியதாக வரவுசெலவுத் திட்டத்தை இம்முறை சமர்ப்பிக்க போவதாக அறிவித்திருந்தது. டோக்கியோ பொதியை எதிர்பார்த்தே இந்த உத்தேசத்தை மேற்கொண்டது.

ஆனால் இன்று நிலைமை எதிர்பாராத திருப்பத்தை அடைந்திருப்பதுடன் நாட்டின் எதிர்காலம் குறித்து விசனம் எழுப்பப்பட்டுள்ளது.

ஜனாதிபதி தனதுஅதிரடி நடவடிக்கைகளை நிறுத்தி பொறுப்பேற்ற அமைச்சுக்களை மீள ஒப்படைக்க வேண்டும். இது எதிர் பார்க்க முடியாதது.

எனவே பாராளுமன்றப் பொதுத் தேர்தல் மூலம் இந்த நெருக்கடி நிலையைத் தவிர்க்க முயற்சிகள் மேற்கொள்ளப்படலாம். ஜனாதிபதி கலைப்பாரா? அல்லது ஐக்கிய தேசிய முன்னணி பாராளுமன்றத்தை கலைக்குமாறு கோருமா என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

போர் நிறுத்த ஒப்பந்தத்திற்கு மட்டும் சமாதான நடவடிக்கைகள் தங்கியிருந்து நீடிக்குமா என்பது ஸ்ரீலங்கா படையினரின் நடவடிக்கைகளில் தங்கியுள்ளது.

விரியும் நாட்களில் எதுவும் நடக்கலாம்.

# மாவீரர் நாள்: உழவும், விதைப்பும் அறுவடைக்கானது

"புதிதாகப்பிறந்த இந்த நூற்றாண்டில் உலகின் தலை சிறந்த கெரில்லாப் போரியல்வாதியாகத் தலைவர் பிரபாகரன் கணிக்கப்படுகின்றார். விடுதலைக்கு எதிராக எழுந்த பெருமலைகளைக் கரைத்துப் போராட்ட வெள்ளத்தை இலக்கு நோக்கிப் பிரவாகிக்கச் செய்யும் விடுதலைப்புலிகளின் ஆதார விசையாக இவரே இயங்குகின்றார். அதிசயிக்கத்தக்க தனது ஆற்றலால் விடுதலைப் போராட்டத்தின் தலைமைத்துவமாக, விடுதலைப்புலிகள் அமைப்பை 25வருடம் வழிநடத்தி உலகின் முதன்மையான கெரில்லாப் போரமைப்பாக விடுதலைப் புலிகளை உருவாக்கியதன் மூலம் இன்று உலகின் கவனம்



தமிழீழத்தை நோக்கித் திரும்பியுள்ளது. அடையப் பெற்ற இந்த உயர்நிலையால் இன்று தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் சர்வதேச அரசியலில் அலட்சியம் செய்யவியலாத பிரச்சினையாகப் பிரசன்னமாகியுள்ளது. வெல்லப்பட முடியாத ஒரு சக்தியாகத் தமிழரின் போராட்ட அமைப்பு விளங்கப்பட்டிருக்கின்றது."

கருத்தூன்றி கவனித்துக் கடமையாற்றுவதன் தேவைப்பாட்டின் தெளிவைத் தரும் வரிகளுடன் (நன்றி:- கு.கவியழகன், 25 வருட ஆயுதப்போர் தடங்கலும்



தடையுடைப்பும், எரிமலை -ஒக்ரோபர் 2001) இவ்வாரக் கட்டுரையினை ஆரம்பிப்போம். வெள்ளி விழாவைக் கடந்து வீறு நடை போடும் விடுதலைப்புலிகள் அமைப்பை வழிநடத்தி, தமிழர்களுக்கு வழித்தடம் வகுத்துச் செல்லும் பெருந்தலைவன் பொன்விழா ஆண்டு வரவுள்ள வேளையிலே, "பொற்காலம்" தமிழர் தாயகத்தில் சாத்தியப்படும் என்று "நேர்பார்வை" கொள்ளுவோம்.

தனி மனித வரலாறு தேச வரலாறாகவும், தேச வரலாறு தனி மனித வரலாறாகவும் ஒப்புவமை கொள்வதன் முழுமையான அர்த்தத்தை எமது மண் விளக்கி நிற்கின்றது. இரு தசாப்தங்களுக்கும் மேற்பட்ட காலத்திலும் சிங்கள தேசத்திலும், தலைப்போடும் சர்வதேச நாடுகளிலும் தலைமைகள் ஆட்சிகள் பல தடவைகள் மாறினாலும், தமிழர் தலைமை ஓரணிப்பட்டு ஒருமுகப்பட்டு நிற்கின்றது. சிங்கள தேசத்தின் இன்றைய நிலையோ இனமும் பரிதாபகரமானது. என்பதை சமகால அரசியல் களநிலவரத்தைக் கொண்டு காணுங்கள். கார்த்திகைத் திங்களின் இறுதி ஏழல் (வாரம் ) வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாக இம் முறையும் வருகின்றது. எங்களது காவல் தெய்வங்களான காவிய

**- துரை - மேகநாதன் -**

நாயகர்களைத் தொழுதேற்றும் நன்னாளில், தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களின் கொள்கை விளக்க உரைக்காக அனைவருமே "வழி மேல் விழி வைத்து" இருக்கிறார்கள்.

*ஈழத் தமிழர் மட்டுமன்றி உலகத் தமிழரெல்லாம்*<br>
*ஒரு தடவை குலுங்கி நிமிரும் நாள்;*<br>
*கனத்த மனங்களுடன் கையில் மலரேந்தி*<br>
*கல்லறைக்குத் தூவும் திருநாள்;*<br>
*கலங்கும் கண்களுடன் தீபமேற்றி,*<br>
*காவிய வீரரை அஞ்சலிக்கும் பெருநாள்;*<br>
*தான் பிறந்த மண்ணையும் மண்ணின்*<br>
*மனிதர்களையும் நேசித்ததனால்*<br>
*போராளியாகப் புறப்பட்டு புனியாகி - புயலாகி*<br>
*களமாடி வீழ்ந்தவர்களின் விழா நாள்"*

(நன்றி:-அங்கயற்கண்ணி) என்று பெருமை பெறும் நாள் நெருங்குகின்றது. எம்மை நாமே "சுய அலசல்" செய்து, தாயக விடுதலைப் பயணத்தில் எமது பணியாற்றலை பங்குபற்றலை வீச்சுடையதாக்க முனைய வேண்டும். மாவீரர் யாரோ என்றால் மரணத்தை வென்றுள்ளோர்கள் என்று மாண்புரைத்து மாவீரர் புகழ் பாடுவோம். "வெற்றி பெற்றுத் தந்து விட்டு நீர் உறங்குகின்றீர்; விடுதலைக்கு முடிதரித்து விட்டு உறங்குகின்றீர்" என்று தமிழீழத் தாயகத்தின் விழுதுகளை வணங்கி மகிழ்வோம்.

நெஞ்சு நிமிர்த்தியதொரு வாழ்வு எம்முன் நீள விரிகிறது என்றால் அதற்காக வாழ்வை வழங்கிப் போனவர்களை நாம் மறந்து விட முடியாது. எமது தாயக விடுதலைப் போராட்டத்தைத் தளர்ச்சியுறாது இறுதி இலக்கு வரையான முன்னோக்கிய பாதையிலே நகர்த்தி வந்த நல்வர்களை, வல்லவர்களைப் போற்றிப் பணிவோம்.

தமது இலட்சிய உறுதியாலும் ஈகங்களாலும், ஈடு இணையற்ற செயல்களாலும் விடுதலைப் பாதையைக் கடந்து வந்த துன்பங்கள், துயரங்களைத் துடைத்தழித்தார்கள். தமிழ் மக்கள் மீதும், தமிழீழத் தாயகத்தின் மீதும், தலைமை மீதும் கொண்ட பற்றுணர்வே அந்த உன்னதமானவர்களைத் தடையுடைத்து சாதிக்க வைத்தது. தன்னலமற்ற செயல்களாலும், தூய்மையான வாழ்வாலும், இலட்சியத்திற்காகத் தமது உயிர்களை அர்ப்பணித்தாலும் மாவீரர்கள் புனிதமானவர்களாகவே பூசிக்கப்படுகின்றார்கள்.

"அவர்கள் பாதம் பட்டதால் எமது மண் புனிதம் பெறுகின்றது. அவர்கள் புதைந்து கிடக்கும் பூமி பலம் பெறுகின்றது. தமிழீழத்தின் உறுதி மிக்க அத்திவாரக் கற்களாக அவர்கள் நிலைக்கின்றார்கள். தமிழீழத் தேசமெங்கும் பரந்து, மண்ணிலும், விண்ணிலும், கடலிலும் எம்மைக் காத்து நிற்கின்றார்கள்.அவர்களின் வாழ்வும் செயலும் எமது இலட்சியப்பற்றை இன்னும் பலப்படுத்துகின்றன." என்று "சூரியப் புதல்வர்கள்" என்ற சிறப்பு வெளியீட்டில் தெரிவிக்கப்பட்டிருப்பதன் யதார்த்தைக் கண்டு கொள்ளுங்கள்.

மாவீரர் வணக்க முறைமை பண்டைத் தமிழரின் தூய பண்பாடாய் மீளவும் தமிழர் தேசத்தில் புத்துயிர்ப்பு பெற்றுள்ளதை மாவீரர் துயிலும் இல்லங்களுக்கான மக்கள் வருகையின் அதிகரிப்பிலும் கண்டறிய முடிகின்றது. "நடுகல் வழிபாட்டு முறைமை" என்ற திராவிடப் பண்பாடு மீள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. இந்திய வன்கர்வு (ஆக்கிரமிப்பு ) படையினருக்குச் சாவலாக அமைந்த, மணலாற்றுக் காட்டிலே விடுதலைப் போராட்டத் தலைமை செயற்பட்ட காலத்திலேயே , வித்துடல்களை விதைகுழிகளில் விதைக்கும் பண்பாடு மீள் எழுச்சி கண்டதாம். தம்மைக் காத்த வனங்களுக்கு வளமாகத் தாம் மடிந்தும் செயற்பட வேண்டும் என்றே போராளிகளின் அங்கலாய்ப்பே "மாவீரர் துயிலும் இல்லங்கள்" தோன்ற தூண்டு கோல் ஆயிற்று

**சிங்கள தேசத்தின் இன்றைய நிலையோ இன்னமும் பரிதாபகரமானது. என்பதை சமகால அரசியல் களநிலவரத்தைக் கொண்டு காணுங்கள்.**

என்று முன்னம் அறிந்தது நினைவிற்கு தூண்டு கோல் ஆயிற்று என்று முன்னம் அறிந்தது நினைவிற்கு வருகின்றது.

*"நாளைய பயிர்விளைய*<br>
*விதையைத் தருவது இன்றையபயிரே*<br>
*இருப்பவர் சிறப்புக்காய் இறப்பவர் இருக்குமினம்*<br>
*அடைந்திடும் மாண்பிற்கு அளவேது; கரையேது?*<br>
*தலைமுறைகள் தலைநிமிரதலைகள்தரும்*<br>
*தலைமுறைகளின்*<br>
*தேசம் கொள் பெருமைக்குதடையேது;*<br>
*குறையேது?*<br>
*மண்ணுக்காய் விழுந்து, மாவீரராய் எழுந்தவர்*<br>
*பல்லாயிரம்*<br>
*அவருக்காய் கரைந்து*<br>
*வாழும் மானிடம் உருகும்;"*

என்னு சு. அரசண்ணா அவர்கள் முன்பொரு தடவை எழுதியது மீள மீள நினைவிற்கு வருகின்றது.

மாவீரர் நாளைத் தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள், "எமது விடுதலைப் போராட்டத்தை ஒப்பற்ற வீரகாவியமாக உலக வரலாற்றில் பொறித்துச் சென்ற உன்னத




மானவர்களை எம் நினைவில் நிறுத்திப் பூசிக்கும் புனித நாள்" என்று விளங்குகின்றமை குறிப்பிடப்பட வேண்டியது. "காலத்தால் அழியாத மாவீரர் கல்லறை கல்லறை அல்ல உயிருள்ளவர் பாசறை" என்ற பாடல் நெஞ்சிலே நெருப்பேற்றச் செய்கின்றது.

மாவீரர் நினைவாக அகவணக்கம் செய்யும் வேளைகளிலே அகமெங்கும் நீக்கமற ஒலிக்கும் வரிகளை இவ்விடத்திலும் மீட்டுப் பார்ப்போம்.

*"கொட்டுண்டு கருகி விழுந்த*<br>
*கொழுந்துகளே இளம் தளிர்களே*<br>
*மொட்டாகி மலர்ந்து கருகிய*<br>
*மோகனங்களே வாலிபங்களே*<br>
*சட்டென்று வீசிய சூறையில்*<br>
*சாய்ந்து கிடக்கும் பழக்குலைகளே*<br>
*வெட்டுண்டு துண்டுகளாகி*<br>
*வீழ்ந்து சிக்கிய சீவியங்களே*<br>
*உங்களை நாங்கள் நினைவு கூறுகின்றோம்.*<br>
*உயிர் கலந்து உணர்வு சேர்கின்றோம்;"*

அண்மைக்கால தேசந் தழுவிய "பொங்கு தமிழ் எழுச்சிகளிலே பொதுச்சுடர் ஏற்றப்படும் பொழுது, அரங்க செயற்பாட்டுக் குழுவினரால் அட்சரப்பிசகின்றி உணர்வு சேர ஓங்கி ஒலிக்கும் இவ்வரிகள்-குறிப்பாக இறுதி இரு வரிகளும் மீள மீள வெவ்வேறு தொனிகளில் ஒலிக்கச் செய்யும் போது எம்மை

**"வெற்றி பெற்றுத் தந்து விட்டு நீர் உறங்குகின்றீர்; விருதலைக்கு முடிதரித்து விட்டு உறங்குகின்றீர்"**

நெஞ்சுருக்க வைத்திருக்கின்றன.

மாவீரர் பெருமை தொடர்பான வரலாற்றுப் பதிவுகளை, ஆவணப்படுத்தல்களை சரிவரச் செய்ய முனைப்புக் காட்ட வேண்டும். மாவீரர் நாளின் மகத்துவத்தை, புனிதத்தை உணர்ந்து சரிவரச் சிறப்பாக எழுச்சியுடன் அனுட்டிப்பது எமது வழித்தடத்தை வலுவுடையதாக்கும்.

தேசியத் தலைவரின் மாவீரர் தின செய்தியை எதிர்பார்த்திருக்கும் எமக்கு "வியாசன்" அண்மைய "உலைக்களம்" ஊடாக,

"........................

........................

*அறுவடை முடித்த வயற்காடு*<br>
*மறுவுழவுக்காகக் கிடக்கிறது.*<br>
*மழைக்காகக் காத்திருக்கிறான் வயற்காரன்*<br>
*உழவும் விதைப்பும் அறுவடைக்கானது*<br>
*விதை நெல்லு பழுதாகாது காத்தல்*<br>
*நமக்கான கடன்*<br>
*காத்திருப்பதில் களங்கமில்லை*<br>
*அறுவடை நமக்காகும் என்றால்"*

என்று உரைத்திருப்பது, எதிர்பார்ப்பைக் கூட்டியிருக்கிறது. விழிப்புணர்ச்சியை, விரைவு படுத்தலை வேண்டி நிற்கும் முக்காலமுணர்ந்த வியாசனின் வரிகள் அல்லவா? இவை?

## போடியார் பொறிவெடி

*ஜனாதிபதி சந்திரிகா பிரதமர் ரணிலும் சந்திப்புக்களை இணங்கியுள்ளனர்.*



அம்மாக்கு அடிக்கடி போய்வரோணும் நெருக்கமான உறவ வளக்கோணும் இந்த ரெண்டயும் அவர் செய்தா எல்லாம் சரிவரும் போல...

# கற்றலுக்கான ஆரோக்கிய சூழ் நிலை இன்றி வாழும் தமிழீழ சமூகம்

இன்றைய எமது சூழலிலே பல இன்னோரன்ன பிரச்சினைகளில் சிக்கித் தவிக்கின்றவர்களாய் எ்ம் வட தமிழீழ மாணவர்களும், தென் தமிழீழ மாணவர்களும் தத்தளித்துக் கொண்டுள் ளனர். இன்றைய சூழ் நிலையில் எம் மக்கள் வாழ்க்கையில் சுமூகமான ஒரு நிலையோ அல்லது போர் ஓய்வடைந்த நிலையில் எம் தமிழர் தாயக பாடசாலைகளில் விமானங்களின் கோரக் குண்டுத் தாக்குதல்களோ ஓய்வடைந்திருக்கலாம். ஆனால் எம் மாணவ சமூகத்தினரிடையே கற்றலுக்கான சூழ்நிலை உருவாகவில்லை. இக் கற்றலுக்கான ஆரோக்கிய சூழ் நிலை உருவாக வேண்டுமானால் முதலில் சூழலில் மாற்றம் உருப்பெற வேண்டும். அது தொடர்ச்சியாக நிலைபெறத் தக்கன வாயும் மாறுதல் பெற வேண்டும். அப்போது தான் எம் தமிழீழ மண்ணில் கற்றலுக்கான ஆரோக்கிய சூழ் நிலை எனும் விருட்சம் எம் மாணவ வளங்களிற்கு நிழல் அமைக்கும்.

இன்று எமது வட தமிழீழ மண்ணிலே அதியுயர் பாதுகாப்பு வலயம் எனும் போர்வையில் எம் யாழ்ப்பாண மண்ணில் 34 வீதம் நிலப்பரப்பினை சிறிலங்கா அரசும் அதனுடைய கூலிப்படைகளும் முற்றுகையிட்டுக் கொண்டு உள்ளனர். இவ் அதியுயர் பாதுகாப்பு வலயத்தினுள்ளும் மற்றும் சில இடங்களிலுமாக 75 பாடசாலைகள் முற்று முழுதான இராணுவக் கட்டுப்பாட்டுடன் தொடர்பான பாடசாலையாகக் காணப்பட்டுக் கொண்டு உள்ளன. இதனுடைய மறைமுகத் தொடர்பு என்ன?

**அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் உள்வாங்கப்பட்ட பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் மாணவனின் உறவினரோ அல்லது ஆசிரியரின் உறவினரோ இறந்தால் கூட அவர்களின் வீட்டுக்குக் கூடப் போக முடியாத துர்ப்பாக்கிய நிலையும் உள்ளது.**

''கடந்த 2002 - 02 - 23 ம் திகதி சிறிலங்கா ஜனநாயக சோசலிச குடியரசு அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான போர் நிறுத்த ஒப்பந்தத்தில் விதி - 2 இயல்பு நிலையைத் தோற்றுவிக்கும் நடவடிக்கை எனும் விதப்புரையில் 2.3 பிரிவில் ''இந்த ஒப்பந்தம் அமுலுக்கு வரும் நாளில் இருந்து எந்தத் தரப்பினராலும் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் பாடசாலைக் கட்டடங்கள் விடுவிக்கப்பட்டு அவற்றின் நோக்கங்களுக்குப் பாவிக்கவென திருத்திக் கொடுக்கப்பட வேண்டும். ஆகக் குறைந்தது இவ் ஒப்பந்த தினத்திலிருந்து 160 நாட்களுக்குள் இந்த நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது. ஆனால் இன்று ஒரு வருடமும் 8 மாதங்க ளிற்கு மேலும் செல்கிறது. மேற்படி ஏன் 75 பாடசாலைகளும் மற்றும் கிழக்கில் உள்ள சில் பாடசாலைகளும் இராணுவத்தினரால் இன்று தற்காப்புக்கவசமாக அமையப்பெற்று பல கஷ்டங்களினை எதிர் நோக்க வேண்டும்? இன்றைய நிலையில் சந்திரிக்காவின் அரசினால் புதிய கல்விச் சீர் திருத்தம் எனும் கொள்கை 1997 ம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. அச் சீர்திருத்தத்தினுடைய முழுமையான . பலாபலனை அறுவடை செய்கின்றார்களா? விடை கேள்விக் குறியாக உள்ளது. எமது வடக்கிலும் கிழக்கிலும் பாரிய அளவிலாக கல்வி வளர்ச்சி அடைந்துள்ளதா? இல்லை. பாரிய மாறுதல்கள் எதுவும் இல்லை. இன்று ஒரு மாறுதல் தெட்டத் தெளிவாகக் காணப்படுகின்றது.

''பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு குண்டு வீச்சு நடத்தலாம், ஷெல் விழலாம், துப்பாக்கி ரவைகள் மாணவர்களின் உடல்களைப் பதம் பார்க்கலாம் எனும் அச்ச நிலை மட்டும் இல்லாதொழிந்துள்ளது''

இன்று நம் வட தமிழீழத்தில் எத்தனை இன்னோரன்ன இடங்களில் எம் மாணவ வளங்களும் ஆசிரிய செல்வங்களும் முகாம்களினைத் தாண்டி பாடசாலைக்குச் செல்கின்றார்கள் தெரியுமா? இதில் குறிப்பாக தென்மராட்சியிலே சில மைல்கள் தூரம் இரு மருங்கிலும் இராணுவ தற்காப்புக் காவலரண்களினைத் தாண்டியே செல்ல வேண்டிய நிலை உள்ளது. இதில் பெண் ஆசிரியர்கள் மாணவிகள் இவ்வாறான சூழலுக்குட்பட்ட பாடசாலைக்குச் சென்று தமது சிறப்பான கற்றல் கற்ப்பித்தல் செயற்பாடுகளினை அமைக்கலாம் என்பது முயல் கொம்பாகவே அமையும்.

மற்றும் இன்று தெல்லிப்பழை யூனியன் கல்லூரியினை எடுத்துக் கொண்டால் அங்கே 100ற்கு 100 வீதம் இராணுவம் செறிந்த சூழலில் தான் இயங்கிக் கொண்டு வருகின்றது. அங்குள்ள மாணவர்களினையோ அல்லது ஆசிரியர்களினையோ எடுத்துக் கொண்டால் அங்குள்ள இவர்கள் பல இன்னோரன்ன கஷ்ட நிலைக்கு உட்பட்டவர்களாய்த் தத்தளிக்கின்றனர்.

ஏன் ஆசிரியர்கள் இணைப்பாட விதானச் செயற்பாடுகள், பரிசளிப்பு விழாக்கள், விளையாட்டுப் போட்டி நிகழ்வுகள், பொதுக் கூட்டங்கள் நடத்த முடியாமல் திணறுகின்றார்கள். அத்தோடு இவ் அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் உள்வாங்கப்பட்ட பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் மாணவனின் உறவினரோ அல்லது ஆசிரியரின் உறவினரோ இறந்தால் கூட அவர்களின் வீட்டுக்குக் கூடப் போக முடியாத துர்ப்பாக்கிய நிலையும் உள்ளது. இன்று தீவகப் பகுதியில் 12 பாடசாலைகளினை உடனே



மூடி விடும் அபாயம் கூட உயர் இராணுவ மட்ட அதிகாரிகளால் திட்டமிடப்பட்டுக் கொண்டு வருகின்றது. இந்நிலையினைப் பார்க்கின்ற போது ஐ. நா. சபையினால் அனைவரும் கட்டாயம் கல்வி பெற உரித்துடையவர் எனும் நிலையும் 1997ம் ஆண்டு புதிய கல்வி சீர் திருத்தத்தில் பிரிவு 3.1.1 கூறப்பட்டுள்ள 5 வயதிற்கும் 14 வயதிற்கும் இடைப்பட்ட சகல பிள்ளைகளும் கல்வியைக் கட்டாயமாக்குதல் பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டு 1998 ஜனவரி மாதம் முதல் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.இந் நடைமுறைகளில் பிள்ளைகளைப் பாடசாலைக்குத் தொடர்ந்து அனுப்ப வேண்டிய தேவை பெற்றோரின் முக்கிய கடமையாகும் எனும் கருத்து அர்த்தமற்றதாய் போயுள்ளதினைக் காணலாம்.

மற்றும் கிழக்கு மாகாணத்தினை எடுத்துக் கொண்டால் கூட கற்றலுக்கான ஆரோக்கிய நிலைக்கு எட்டாத தன்மையுடைய பாடசாலைகள்



பலவும் காணப்படுகின்றன. காரணம் பாடசாலைகளிற்கு முன்பு இராணுவத்தினரால் முகாம் அமைத்துக் கொண்டு காணப்படுதல் (உ+ம்) செட்டிபாளையம் மகா வித்தியாலய பாடசாலை, ஆரையம்பதி மகா வித்தியாலய பாடசாலை, அக்கரைப்பற்று ஆலையடி வேம்பு கண்ணகிபுர வித்தியாலயம், அக்கரைப்பற்று சென்ஜோன்ஸ் பாடசாலை, அம்பாறை கோமாரியில் உள்ள மகா வித்தியாலயம் திருக்கோயில் கள்ளித்தீவு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மற்றும் திருகோணமலை சென் மெதடிஸ்த தேசிய கல்லூரி, மட்டக்களப்பு கல்லாறு மே. மி. த. பாடசாலை புதூர் விக்கினேஸ்வரா வித்தியாலயம், வலையிறவு ஆரம்பநெறி பாடசாலைகள் போன்றவற்றில் இன்னும் பாடசாலைக்கு முன்பு இராணுவ முகாம் அமைக்கப்பட்டுள்ளது. இங்கு கல்வி கற்க வரும் மாணவர்கள் இவ் இராணுவச் சூழலுக்கும் சில பயமுறுத்தல்களிற்கும் உட்பட்டு வருவதால் இன்று தென் தமிழீழத்தில் கூட பல பாடசாலைகள் உணர்வு ரீதியான கற்றல் செயற்பாடு அற்ற பாடசாலையாக செயற்பட்டு வருவதினைக் காணலாம். மற்றும் இப் பாடசாலையில் ஆரம்ப கல்வி பயிலும் மாணவர்கள் இப் பாடசாலைச் சூழலுடன் இடைத் தாக்கமுறும் போது இவர்களிற்கு முன்னிலோ சரி அல்லது முகாமிலோ சரி இராணு வத்தினரை காணும் பட்சத்தில் இவர்களிற்கான பய உணர்வோ அல்லது ஏக்க உணர்வோ இவர்களிற்கும் மனங்களில் மாறா வடுவினையும் ஆளுமைச் சிதைவினையும் உண்டு பண்ணும். ஏனெனில் கடந்த கால யுத்த கொடூரத்தினை நேரில் கண்டு தமது தாயினையோ அல்லது தந்தையினையோ அல்லது உறவினரையோ இழந்த நிலையில் எத்தனை பிள்ளைகள் பாடசாலைக்குச் சமூகம் கொடுக்கும். எனவே இன்றைய நிலையில் இராணுவத்தினருடைய காப்பரண்களோ முகாம்களே பாடசாலைக்கு முன்பு இருப்பதினால் பல தீங்குகளே எம் மாணவர்களுக்கும் எமது சமூகத்திற்கும் ஏற்பட்டுக் கொண்டுள்ளது. இது ஒரு நீண்ட காலப் பாதிப்பினைக் கூட உருவாக்கிக் கொண்டும் உள்ளது.

அத்தோடு மட்டக்களப்பு புதூர் கிராமத்தில் விமானப்படைத் தளத்திற்கான அதியுயர் பாதுகாப்புப் பிரதேசமாக சுமார் 100 ஏக்கரிற்கு மேற்ப்பட்டபரப்பு அரசாங்கத்தினால் வர்த்தமானி பத்திரிகையின் பிரகாரம் மக்களிடம் இருந்து இராணுவ அச்சுறுத்தலுடன் வாங்கப்பட்டு அப் பாதுகாப்பு வலயத்துக்கான வேலிகளும் இடப்பட்டுள்ளன. அவ் வலயத்திற்குள்ளே விக்கினேஸ்வரா வித்தியாலய பாடசாலை அமையப்பட்டுள்ளது. ஆனால் அங்கு கல்வி கற்கும் பிள்ளையினது மனத்தில் கூட கற்றலுக்கான ஆரோக்கிய நலனைப் பெற்று விடாத தன்மையே காணப்படும். ஏனெனில் சூழல் பிள்ளையின் கல்வியில் செல்வாக்குச் செலுத்துகின்றன.

இவ்வாறு எமது வட தமிழீழத்திலும் சரி தென் தமிழீழத்திலும் சரி சில இடங்களில் பிள்ளைகள் இராணுவ முகாம் மறைமுகமான இராணுவ அச்சுறுத்தல், பயம், பீதி, போன்ற இன்னோரன்ன காரணங்களினால் கற்றலுக் கான ஆரோக்கியம் பெறாதவர்களாய் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

''கற்றலுக்கு தனியே புத்தகத்தை மட்டும் நம்பியிருக்கக் கூடாது. அவர்களது மனோ நிலையினையும் பார்க்க வேண்டும். உளவியல் ரீதியான ஆரோக்கிய நிலை தான் கற்ப்பித்தலையும், கற்றலையும் தொடர முடியும்''

எனவே எம் தமிழீழ மண்ணில் கற்றல் சிறப்புற அமைய வேண்டும். இராணுவ முகாம் மாணவர்களின் கல்விக்குத் தடையாகவும், தடுப்பாகவும் அமையும் தன்மை அகல வேண்டும். சுதந்திரமாக எம் தமிழீழ மண்ணில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தையும், இவ் அன்னிய இராணுவத்தின் இத் துர்ப்பாக்கிய நிலையில் இருந்து விடுபட்டு சிறந்த ஆளுமை கொண்ட மாணவர்களையும் அதனோடு அறிவு, திறன், மனப்பாங்கு, தேச பக்தி, விடுதலை உணர்வு மிக்க மாணவர்களாக மிளிர

''அன்னிய இராணுவமே எம் மாணவர்களில் கற்றல், கற்ப்பித்தல்களுக்கு ஆரோக்கிய நிலையினை ஏற்படுத்த இடம் கொடு, வரலாற்று வடுக்களிற்குக் களம் அமைக்காதே''

**- இ. வரதராஜன் -**

# ஜனாதிபதியின் பதவிக்காலம் வரை ஆபத்தில் தொங்கும் ரணில் அரசு!

சிங்களத்தின் அரசியல் தலைமைகளில் ஏற்பட்டுள்ள நிலையற்ற அதிகாரத் தடுமாற்றத்தினால் சமாதான முயற்சிகள் பின் தள்ளப்பட்டுள்ளது.

இப்போதய சூழ்நிலையில் பலம் பொருந்திய ஒரு அதிகார பீடம் ஏற்படும் வரை பேச்சுக்களை முன்னெடுப்பது உசிதமானதல்ல என எண்ணத் தோன்றுகின்றது.

தற்போது ஐ.தேசிய முன்னணி அரசின் அதிகாரங்களை தன் வயப்படுத்தும் சதிமுயற்சியில் ஈடுபட்டு வரும் ஜனாதிபதி கிளைகள் வெட்டப்பட்டு மொட்டை மரமாக அரசை ஆக்கும்



கைங்கரியங்களில் ஈடுபட்டு வருவதாக ஐ.தே.கட்சி அரசின் சிரேஷ்ட அமைச்சர்கள் ஜனாதிபதி மீது பழி சுமத்தத் தொடங்கி விட்டனர்.

இவ்வாறு பல்வேறு சிக்கலுக்குள்ளாகியிருக்கும் அரசியல் கொந்தளிப்புக்களில் இருந்து மீட்சி பெறுவதானால் ஜனாதிபதியின் பதவிக்காலம் முடிவடைய வேண்டும். அதுவரை இதோ கதிதான் என அரசியல் விமர்சகர்கள் அபிப்பிராயம் தெரிவித்து வருகின்றனர்.

அரசுக்கும், ஜனாதிபதிக்குமிடையில் எழுந்துள்ள அதிகார முறுகல் நிலையைத் தணிக்கும் வகையில் நவம்பர்- 12ம் திகதி- பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா ஜனாதிபதியை அவரது ஜனாதிபதி மாளிகையில் சந்தித்துப் பேசினார்.

தேசிய அரசு ஒன்றை அமைப்பது தொடர்பாக ஜனாதிபதியினால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இதனை உடனடியாக மறுத்துக் கூற முடியாத பிரதமர் தமது ஐக்கிய தேசிய முன்னணி அரசில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் கலந்தாலோசனையின் பின்பே தமது நிலைப்பாட்டைத் தெரிவிக்க முடியும் எனக் கூறினார்.

அத்துடன் தற்போதய சூழ்நிலையில் சமாதான் பேச்சுக்களை முன்னெடுக்க வேண்டிய அவசியத்தையும் பிரதமர் ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டினார்.

சர்வதேச சமூகம் இலங்கைப் பிரச்சினையில் அதீத அக்கறை கொண்டுள்ளன. மீண்டும் ஒரு போர் வெடிக்கக் கூடாது. அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் பேச்சுவார்த்தை நடத்தி ஒரு அரசியல் தீர்வு எட்டப்பட வேண்டும் என்பதே சர்வதேச சமூகத்தின் ஒட்டு மொத்தக் கருத்தாகும்.

இத்தகைய ஒரு

**~வேணிதன் ~**

சூழ்நிலையில் ஆட்சி கலைக்கப்படுவதையோ, ஆட்சி மாற்றம் ஏற்படுவதையோ சர்வதேச சமூகம் விரும்பவில்லை என்பதை பிரதமர் ஜனாதிபதியிடம் எடுத்துக் கூறியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிரதமரின் கருத்துக்களைச் செவிமடுத்த ஜனாதிபதி தனக்கும் இவ்வாறான ஒரு அழுத்தங்கள் சர்வதேச ரீதியாக

ஏற்பட்டுள்ளதையும் விளக்கினார்.

இறுதியில் உள்த்துறை, ஊடகத்துறை இரு அமைச்சுக்களையும் மீள ஒப்படைப்பதுடன் படைத்துறை

**சதிமுயற்சியில் ஈடுபட்டு வரும் ஜனாதிபதி "கிளைகள் வெட்டப்பட்டு மொட்டை மர்மாக" அரசை ஆக்கும் கைங்கரியங்களில் ஈடுபட்டு வருகிறார்.**

அமைச்சுப் பதவியை மட்டும் தன் வசம் வைத்திருப்பதுடன் அதனை நிர்வகிக்கும் அதிகாரங்களைப் பிரதமரிடம் வழங்குவதாகவும் ஆலோசனை ஜனாதிபதியால் முன்வைக்கப்பட்டது.

பிரான்ஸ் நாட்டில் இவ்வாறான ஒரு முறை இருப்பதையும் அங்கே சுட்டிக் காட்டினார்.

இதே வேளை படைத்துறை அமைச்சின் அதிகாரங்கள் பிரதமருக்கு வழங்கப்படுவதால் ஒரு வரையறுக்கப்பட்ட அதிகாரமே காணப்படும் என அரசியல் நோக்கர்கள் தெரிவிக்கின்றனர்.

சமாதான உடன்படிக்கையின் பலனாக சிறிலங்கா படை அதிகாரிகளுக்கும் புலிகளுக்குமிடையிலான சந்திப்புக்கள் கலந்துரையாடல்களை நடத்துவதற்கு இந்தப் பிரதமரின் அதிகாரம் வழி வகுக்கும் என

நம்பப்படுகிறது.

எனினும் பிரதமரின் செயற்பாடுகளை உன்னிப்பாக அவதானிக்கத் தொடங்கும் ஜனாதிபதி படைத்துறை அமைச்சின் செயற்பாடுகள் திருப்தி தராதவிடத்து அல்லது கடந்த காலங்களில் கடல்வலயங்களில் ஏற்படும் சர்ச்சைகள் போன்ற ஒருநெருக்கடி நிலமை ஏற்படும் போது படைத்துறை அமைச்சு என்ற

**"படைத்துறை சார்ந்த ஒவ்வொரு நடவடிக்கையும் ஜனாதிபதிக்கு அறிவித்து அவருடைய அங்கீகாரம் பெற்ற பின்னரே அவை செயற்பட சாத்தியக் கூறுகள் உள்ளன".**

வகையில் ஜனாதிபதிக்குப் பதில் சொல்லியாக வேண்டிய ஒரு இக்கட்டான சூழ்நிலைக்கு பிரதமர் தள்ளப்படலாம். அத்துடன் படைத்துறை சார்ந்த ஒவ்வொரு நடவடிக்கையும் ஜனாதிபதிக்கு அறிவித்து அவருடைய அங்கீகாரம் பெற்ற பின்னரே அவை செயற்பட சாத்தியக் கூறுகள் உள்ளன.

இந்நிலையில் இதற்கு பிரதமர் ஆமாப் போடாது அடுத்த வாரம் நடைபெறும் சந்திப்பில் பதில் கூறுவதாக கூறிப்பேச்சை முடித்துக் கொண்டு வந்துவிட்டார். வந்த கையோடு தமிழ்க் கூட்டமைப்பினர் பிரதமரைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

சமாதான முன்னெடுப்புக்கள் எந்த விதத்திலும் பாதிக்கப்படாத வகையில் முன்னெடுக்க வேண்டும். இதற்கு அரசே முழுப் பொறுப்புமே என வலியுறுத்தியுள்ளனர்.

இன்நிலையில் அடுத்தடுத்து

என்ன என்ற அங்கலாய்ப்பு தமிழ்ச் சமூகத்தின் மத்தியிலும் சிங்கள மக்களிடையேயும் எழுந்துள்ளது. இவை ஒரு புறமிருக்க ஜனாதிபதியின் ஆட்சி அதிகாரம்

கலாவதியாகும் மட்டும் ஆட்சியை நடத்த வேண்டிய சூழலுக்கு ஐக்கிய தேசிய கட்சி அரசு தள்ளப்பட்டுள்ளது.

இலங்கையின் ஜனாதிபதி காலம் சென்ற ஜே.ஆர். ஜெயவர்த்தனா வரைந்த அரசியல் யாப்பின்படி உலகின் வேறு எந்த நாட்டின் அரசியலமைப்பின் தலைவருக்குமில்லாத அளவிற்கு அதிகாரச் செறிவு கொண்டுள்ளது. உலக வல்லரசாகத் திகழும் அமெரிக்கா மற்றும் பிரான்ஸ் நாடுகளில் ஜனாதிபதி ஆட்சிமுறை இருந்த போதும் ஜே.ஆரின் வரைபில் உள்ளடக்கப்பட்ட அதிகாரம் அங்கில்லை.

சிறிலங்காவின் ஜனாதிபதி அதியுயர் ஆட்சி மன்றத் தலைவர், நிறைவேற்று அதிகாரி, முப்படைத்தளபதி, அமைச்சரவையின் தலைவர் இவ்வாறான உச்ச அதிகாரங்கள்

வரையப்பட்டுள்ளது.

அந்த வரைபில் 6வருடங்கள் ஒரு ஜனாதிபதியின் பதவிக்காலமாகும். ஒரு நபர் இருமுறை ஆட்சிக்கு வரலாம். தமது ஆறாண்டு பதவிக்காலத்தில் நான்கு வருடங்கள் முடிவடைந்த பின்னர் எந்த நேரத்திலும் தேர்தலை நடத்தலாம்.

தேர்தல் நடைபெறும் வரை ஐக்கிய தேசிய கட்சி அரசு ஆட்சியைக் கொண்டு இழுக்க வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது.

பொதுஜன ஐக்கிய முன்னணியில் அடுத்த ஜனாதிபதி வேட்பாளராக சந்திரிக்கா போட்டியிட முடியாது. ஆறு வருடங்களின் பின் தனது ஆட்சியை நீடிக்கவும் முடியாது. தமது கட்சியில் வாக்குகளை வசீகரிக்கக் கூடியதொரு தலைமைத்துவம் சந்திரிக்காவிற்குப் பிறகு இல்லை. மாறாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா ஜனாதிபதியாகும் சூழ்நிலை தான் உருவாகி வருகிறது. அதுவரை போர் மூழாது பேச்சுவார்த்தைகளைக் கொண்டு

இழுக்க வேண்டி வரும் என ஐக்கிய தேசிய கட்சி அரசு சிந்திக்கிறது.

இவை ஒரு புறமிருக்க ஜனாதிபதியைப் பதவியிலிருந்து அகற்றும் அதிகாரமும் பாராளுமன்றத்துக்கு வழங்கப்பட்டுள்ளது.

மனநிலை கோளாறு, உடல் நலக் குறைவு, அதிகார துஷ்பிரயோகம், பதவிக்கான தகுதியின்மை, லஞ்சம் ஆகிய காரணங்களில் ஏதாவது ஒன்றை நிரூபிக்க முடிந்தால் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்துடன் ஜனாதிபதியைப் பதவியிலிருந்து தூக்கி எறிய முடியும்.

மூன்றில் இரண்டு பெரும்பான்மைப்படி



150பாராளுமன்ற உறுப்பினர்களின் வாக்குகளைப் பெற்று உயர் நீதிமன்றத்தின் ஆதரவுடன் அகற்ற முடியும்.

தற்போது ரணில் அரசால் 129வாக்குகளை மட்டுமே பெறமுடியும். மேலதிகமான 21வாக்குளைப் பெற முடியாத ஒரு கடினமான சூழ்நிலையில் ஜனாதிபதியை அகற்றுவது இயலாத காரியமாகும் என்பது உண்மை.

மறுபுறம் திடீர் என ஆட்சியைக் கலைத்து தேர்தல் ஒன்றை நடத்த ஜனாதிபதி திட்டமிட்ட போதும் சர்வதேச சமூகம் சமாதானத்தில் காட்டும் அதீத அக்கறை நிதி ஒதுக்கீடு விடயத்தில் கொடையாளி நாடுகளின் வலியுறுத்தல் என்பன அதற்கான சூழ்நிலையை மறைத்துள்ளது. எனவே முதளை வாயில் அகப்பட்ட இரை போல ரணில் அரசு இன்னும் இரு வருடங்களுக்கு தடுமாறும் சூழ்நிலையை உருவாக்கியுள்ளது.

## சொன்னாலும் குற்றம்




புளியந்தீவுப் பக்கம் இருக்கிற புனிதமான ஆனைமுகன் ஆலயம் ஒன்றில் போன மாதம் தீபாவளி தினத்தில் வழிபட வந்த பெண்மணி ஒருத்தி கற்பூரத்தைக் கொழுத்தி கை கூப்பி "புந்தியில் வைத்தடி போற்றுகின்றோமே" என்று வணங்கிய வேளையில் "மந்தி போல் பாய்ந்து வந்த அந்தக் கோயில் ஊழியர் ஒருவர்" அந்த பெண்ணுக்கு வாய்க்கு வந்த மாதிரி தகாத வார்த்தைகளால் ஏசினாராம்.

மை பூசி அலங்கரித்த சுவரில் கற்பூரத்த எரிக்காமல் தவறுதலாக இந்தப் பெண் அந்த சுவரின் பக்கத்தில் எரித்ததால தான் அந்த கோயில் பெடியன் நூற்றுக்கணக்கான அடியார்கள் முன் வைத்து திட்டித் தள்ளினாராம்.

ஆலயத்தில் பணி புரிபவர்களுக்கு அடக்கமும் ஒழுக்கமும் தேவை. ஆனால் இந்த ஆலயத்தில் பணி புரிபவர் ஆமி போல் பாய்வதற்கு காரணம் இல்லாமல் இல்லை. இவரின் சகோதரர் அவ்வாறன ஒரு இடத்தில் உள்ளதால் இவருக்கு அவரின் வாடை அடித்துள்ளது எண்டு புளியந்தீவு வினாயகர் பக்தர்கள் கதைக்கிறார்கள்.

# மொழியுரிமைப் போராட்டங்கள் மூலம் தமிழ்மொழி பெற்ற சட்ட அந்தஸ்த்து என்ன?





**1978ம் ஆண்டைய இன்றைய அரசியல் யாப்பு**

**1977ம்** ஆண்டு நடை பெற்ற தேர்தலில் ஐ.தே கட்சி 5/6பங்கு பிரதி நிதிகளைப் பெற்று ஆட்சி அமைத்தது. அதன் பிரதமராக சிங்களம் மட்டும்சட்டத்தின் பிதாமகனான ஜே.ஆர்.ஜெயவர்த்தனா பதவி ஏற்றார். பதவி ஏற்ற கையோடு ஸ்ரீலங்கா அறிமுகமாக்கிய 1972ம் ஆண்டைய அரசியல் யாப்பை மாற்றுவதற்குப் பாராளுமன்றத்தை அரசியல் நிர்ணய சபையாக்கினார். அதன் மூலம் 1978ம் ஆண்டு புதிய குடியரசுத் திட்டம் அமுல் செய்யப்பட்டது. இந்த அரசியல் யாப்பில் ''இலங்கையின் அரசகர்ம மொழி சிங்கள மொழியாதல் வேண்டும்.





**ஜே.ஆரின் அரசே 1983ம் ஆண்டின் ஜுலை 23ம் திகதிக் கலவரத்தை ஏற்பாடு செய்தது. தமிழர் உடமைகள், உயிர்கள், சேமிப்புக்கள் அனைத்தையும் கொள்ளையடித்தும், கொலை செய்தவர்கள். ஜே.ஆரின் ஆட்சியில் தமிழர்களின் பல்வேறு அடக்கு முறைக ளுக்கும் ஒடுக்கு முறைக ளுக்கும் ஆளானார்கள்.**

இலங்கையின் தேசிய மொழிகள் சிங்களமும் தமிழுமாக வேண்டும். அரச கரும மொழியே நாடு முழுவதிலும் நிருவாக மொழி ஆக்கப்படல் வேண்டும். ஆனால் வடக்கு மாகாணத்திலும், கிழக்கு மாகாணத்திலும் தமிழ் மொழியும் நிருவாக மொழி யாகப் பயன்படுத்தப்பட வேண்டும்.

இந்த அரசியல் யாப்பின் மூலம் நாம் தெளிவாகத் தெரிந்து கொள்ளும் ஒரு விடயம் என்னவென்றால், இலங்கை முழுவதும் சிங்களமே அரச கரும மொழியாக பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது. தமிழுக்கு இலங்கை முழுவதும் தேசிய மொழி அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளதுடன் தமிழர்களின் பாரம்பரிய தாயகமான வடகிழக்கில் தமிழுக்கு நிர்வாக மொழி அந்தஸ்தே வழங்கப்பட்டுள்ளது. ஆனால் அரச கரும மொழி அந்தஸ்து வழங்பப்படவில்லை. இந்த அரசியல் யாப்புக் கூட தமிழர்களின் எதிர்பார்ப்புக்களை ஏமாற்றியதே ஒழிய நியாயம் வழங்கப்படவில்லை. இதனால் தமிழர்கள் கொதித்தெழுந்தார்கள். அரசு அடக்கு முறைகளை அள்ளி வீசியது. அது மட்டுமின்றி ஜே.ஆரின் அரசே1983ம் ஆண்டு ஜுலை 23ம் திகதிக் கலவரத்தை ஏற்பாடு செய்தது. தமிழர் உடமைகள், உயிர்கள், சேமிப்புக்கள் அனைத்தையும் கொள்ளையடித்தும், கொலை செய்தார்கள் ஜே.ஆரின் ஆட்சியில் தமிழர்கள் பல்வேறு அடக்கு முறைகளுக்கும், ஒடுக்கு முறைகளுக்கும் ஆளானார்கள். வடமராச்சிப் போர் அதைத் தொடர்ந்து இந்திய அரசின் தலையீடு, அதன் மூலம் இந்திய இலங்கை ஒப்பந்தம், ஒப்பந்தத்தின் பயனாக இலங்கை அரசியல் யாப்பில் 13ம் திருத்தம் கொண்டு வரப்பட்டது. இந்தத் திருத்தத்தின் படி 18ம் பிரிவு ''சிங்களம் அரசகரும மொழியாக இருக்கும். அதேவேளை தமிழும் அரசகரும மொர்ழியாக இருக்கலாம்'' என்ற ஏற்பாட்டைக் கொண்டிருக்கிறது. இருந்தும் சிங்கள மொழிக்கு வழங்கப்படும் அங்கீகாரம் எதுவும் தமிழ் மொழிக்கு வழங்கப்படவில்லை. ஏட்டுச்சுரைக் காயாகவே இன்னுமுண்டு.

1989ம் ஆண்டு ஆர்.பிரமதாசா ஜனாதிபதியாக இருந்தபோது 1978ம் ஆண்டின் அரசியல் திட்டத்திற்கு 16வது திருத்தம் ஒன்றைக் கொண்டு வந்தார். அதன் படி சிங்களமும் தமிழும் இலங்கை முழுவதிலும் அரச கரும மொழியாக இருக்க வேண்டும். வடகிழக்கு மாகாணத்தில் பதிவேடுகள் தமிழில் பேணப்பட வேண்டும். ஏனைய மாகாணங்களில் சிங்களத்தில் பேணப்பட வேண்டும்.

ஒரு மொழியை அரச கரும மொழியாகப் பிரகடனப்படுத்துவதற்கும் நிருவாக மொழியாகப் பிரகடனப்படுத்துவதற்குமி டையில் பாரிய வித்தியாசங்கள் காணப்படுகின்றது. இது வரை பல ஏற்பாடுகள் தமிழ் மொழிக்காகச் செய்யப்பட்டும் ஒன்றும் சிங்கள மொழிக்குச் சமமான மொழி அந்தஸ்தை தமிழ் மொழிக்கு வழங்கவில்லை. சிங்கள மொழியை அமுலாக்க அரசு தமிழ் உத்தியோகஸ்தர்களின் பதவி உயர்வுகள்,நிரந்தர நியமனங்களைத் தடுத்து வைத்திருந்தது. ஆனால் தமிழ் மொழி படிக்க வேண்டும் என்று சிங்கள ஊழியர்களுக்கு எந்த நிபந்தனையும் அரசு அமுல் நடத்தவில்லை. இதுவே சிங்கள அரசு தமிழ் மொழிக்கு வழங்கியுள்ள சம அந்தஸ்தின் அளவு கோலாகும்.

1994ம் ஆண்டு ஆட்சிக்கு வந்த ஜனாதிபதி சந்திரிக்கா அவர்கள் அறிமுகம் செய்த அரசியல் யாப்பு பொதியில் தமிழ் மொழி சம்பந்தமாக பின் வரும் சட்ட முன்மொழிவுகள் 4ம் அத்தியாயத்தில் மிகவும் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. அதாவது ''இலங்கை குடியரசின் தேசிய மொழியாக சிங்களமும், தமிழும், ஆங்கிலமும் இருக்க வேண்டும். குடியரசின் அரச கரும மொழியாக சிங்களமும் தமிழுமிருக்க வேண்டும்.''

1944ம் ஆண்டு மே மாதம் 24ம் திகதி சட்ட சபையில் ஜே.ஆரின் தனிச்சிங்களம் மட்டும் அரசகரும மொழி என்ற தீர்மானத்தை எதிர்த்து அன்று மட்டக்களப்பு சட்ட சபை உறுப்பினரான அமரர் வி.நல்லையா ''இலங்கையின் அரச கரும மொழியாகச் சிங்களமும் தமிழுமிருக்க வேண்டும் என முன்மொழிய அதை அமரர் பண்டாரநாயக்கா வழிமொழிந்து நிறைவு செய்த சட்டத்தை ஒத்த மொழி அந்தஸ்தை சந்திரிக்காவின் அரசியல் பொதி கொண்டிருந்தது. இந்த அரசியல் பொதியில் தமிழரசுக்கட்சி நீண்ட காலமாக வலியுறுத்திய ஒற்றையாட்சி அகற்றப்பட்டு பிரதேசங்களின் ஒன்றியம் என்ற அடிப்படையில் பல்லின மக்களும் வாழும் நாட்டுக்கு உகந்த அரசியல் அறிமுகப்படுத்தப்பட்டது. அது தமிழர்களின் கோரிக்கையை முழுமையாக உள்ளடக்கா விட்டாலும் பிள்ளைச் சோட் டைக்குச் சாணைச் சீலை என்பது போல் அமைந்தது. தமிழர்கள் இதுவரை செய்த

> **''இலங்கையின் அரச கரும மொழியாகச் சிங்களமும் தமிழுமிருக்க வேண்டும் என முன்மொழிய அதை அமரர் பண்டார நாயக்கா வழிமொழிந்து நிறைவு செய்த சட்டத்தை ஒத்த மொழி அந்தஸ்தை சந்திரி க்காவின் அரசியல் பொதி கொண்டிருந்தது.**

தியாகங்களுக்கும் செலுத்திய விலைக்கும் இந்த அரசியல் பொதி பெறுமதியானதல்ல. இந்தப் பெறுமதியற்ற பொதியைக் கூட எதிர்த்துத் தோற்கடித்த ஐ.தே கட்சியினரால் அதை விட வேறு எதைத் தர முடியும் என்பதே இன்றைய யதார்த்தமான கேள்வியாகும்.

**- பூ.ம.செல்லத்துரை -**

இலங்கையில் காலத்திற்குக் காலம் செய்யப்பட்ட மொழி சம்பந்த மான திருத்தங்கள் தெளிவ ற்றிருப்பதும், அரசு தமிழ் மொழியை அமுல் செய்யா மையும் தமிழ் மொழியின் சட்ட அந்தஸ்தைக் கேள்விக் குறியாக்கியுள்ளது. இதற்கு பாராளுமன்றத்திலுள்ள தமிழ் பிரதிநிதிகள் விடை காண்பார்களா?

## கந்தப்போடியும் கலந்தர்லெவ்வையும்

**கந்தர்:~** தேசிய அரசாங்கம் அமைக்க அம்மா கூப்பிடுறாவாமே.........

**கலந்தர்:~** அவ கூப்பிட்டு வாய்க்குமா? ரணிலிட ஆக்கள் இணங்கோணுமே......

**கந்தர்:~** அம்மாட செயலப் பாத்தா சண்டய ஆரம்பிப்பாவு போல கிடக்கு..........

**கலந்தர்:~** அந்த மனிசி எப்பதான் சமாதானத்துக்காக பாடுபட்டவ?...............

**கந்தர்:~** என்னத்துக்காக இந்த மனிசி இப்படி துடிக்கிறாவோ தெரியா!...

**கலந்தர்:~** சனங்கள பலிக்கடாவாக மாற்றத்தான் வேற என்னத்துக்கு....

**கந்தர்:~** ''ஆவதும் பெண்ணாலே அழிவதும் பெண்ணாலே'' எண்டது சரிதான்

## இந்தியாவும் ஈழத்தமிழரும்


# கீழ்த்தரமான பிரசாரங்கள்

திலீபனின் உண்ணா விரதம் தொடர்பான அத்தியாயங்களைக் கடந்து, ஈழத் தமிழருக்கு எதிரான இந்தியாவின் மற்றய துரோக நடவடிக்கைகள் பற்றி விரிவாகப் பார்ப்பதற்கு முன்னதாக, திலீபனின் உண்ணாவிரத நிகழ்வுகள் தொடர்பான அத்தியாயங்களில் தவறவிடப்பட்ட சில விடயங்களைப் பார்த்துவிடுவது பொருத்தமாக இருக்கும் என்று நினைக்கின்றேன்.



திலீபனின் உண்ணா விரதப்போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது, இந்தியா மிகவும் கேவலமான, பிற்போக்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தது. திலீபனின் போராட்டத்தையும், அவனது தியாகத்தையும் கொச்சைப்படுத்தும்படியான பலவித நடவடிக்கைகளில் இந்தியா இறங்கியிருந்தது. இந்திய அரசின் உத்தியோகபூர்வ வானொலி சேவையான 'அகில இந்திய வானொலி' (ALL INDIA RADIO) திலீபனின் உண்ணாவிரதத்தைக் கொச்சைப்படுத்தும் படியான செய்திகளைத் தொடர்ந்து வெளியிட்டு வந்தது. திலீபனைப் பற்றியும், புலிகளின் தலைவரைப் பற்றியும் தவறான கருத்துக்களை தமிழ் நாட்டு மக்கள் மத்தியில் பரப்பும் முயற்சியில், அது முழுமூச்சுடன் இறங்கியிருந்தது. ''மகாத்மா காந்தியும் உண்ணாவிரதம் இருந்தவர்தான். ஆனால் அவர் தனது சகாக்களை உண்ணாவிரதம் இருக்கும்படி கூறவில்லை. மகாத்மாவே நேரடியாக உண்ணா விரதப் போராட்டத்தில் குதித்திருந்தார். ஆனால் புலிகளின் தலைவர் பிரபாகரனோ, தனது சகாக்களை உண்ணாவிரதம் இருக்கும்படி ஆணையிட்டுள்ளார்" என்று அகில இந்திய வானொலி பிரசாரம் செய்தது.

அதேபோன்று, திலீபன் தொடர்பாக, மற்றொரு



வதந்தியும் தமிழ் மக்கள் மத்தியில் திட்டமிட்டு பரப்பப்பட்டது. 'திலீபன் ஏற்கனவே நடைபெற்றிருந்த சண்டை ஒன்றில் காயமடைந்திருந்ததால், அவரது ஈரலில் ஒரு பகுதியும், மற்றய சில உள்ளுறுப்புக்களும் ஏற்கனவே வைத்திய சிகிச்சையின் போது அகற்றியெடுக்கப்பட்டுவிட்டன. திலீபன் இன்னும் சில நாட்கள் மட்டுமே உயிர் வாழ முடியும். அதனால்தான் திலீபன் சாகும்வரையிலான உண்ணாவிரதத்தைத் துணிந்து மேற்கொண்டு வருவதாக' வதந்திகள் பரப்பப்பட்டன. (இந்தியப்படையுடன் ஈழத்திற்கு வந்திருந்த தமிழ் அமைப்புக்களின் உறுப்பினர்கள் இப்படியான வதந்திகளை மக்கள் மத்தியில் பரப்புவதில் அரும்பணியாற்றியிருந்தது குறிப்பிடத்தக்கது.)

அதேபோன்று, திலீபன் மரணம் அடைந்த பின்பும், இந்தியாவின் சகபாடிகளால் மேலும் பல வதந்திகள் மக்கள் மத்தியில் பரப்பப்பட்டன. இறுதி நேரத்தில் திலீபன் தன்னைக் காப்பாற்றும்படி சக போராளிகளிடம் கெஞ்சியதாகவும், ஆனால், புலிகள் திலீபனை வலுக்கட்டாயமாக உண்ணாவிரதம் இருந்து சாகடித்ததாகவும் வதந்திகள் பரப்பப்பட்டன.

திலீபன் புலிகளால் விஷ ஊசி ஏற்றிக் கொல்லப்பட்டதாகவும், தமிழ் மக்கள் மத்தியில் இந்தியாவின் அடிவருடிகளால் வதந்திகள் பரப்பப்பட்டன.

திலீபனின் போராட்டமானது, இந்தியா பற்றி தமிழ் மக்கள் மத்தியில் இருந்த மாயையை உடைத்திருந்தது. இதனைப் பொறுக்க முடியாத இந்தியாவின் உளவுப் பிரிவினரே, இதுபோன்ற வதந்திகளைப் பரப்புவதில் பிரதான பங்கு வகித்திருந்தார்கள். அவர்கள் தமது திட்டத்திற்கு இந்தியப் படைகளின் தயவில் தங்கியிருந்த தமிழ் அமைப்பின் உறுப்பினர்களையும், அவர்களின் குடும்பத்தினர்களையும் பயன்படுத்தினார்கள்.

ஆனால், இதுபோன்ற வதந்திகள் தமிழ் மக்கள் மத்தியில் எந்தவிதத் தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை. இதுபோன்ற வதந்திகள் தமிழ் மக்களை இந்தியாவிற்கு எதிராக மேலும் கோபம் கொள்ள வைத்ததுடன், திலீபன் மீது தாம் கொண்டிருந்த அன்பை மென்மேலும் அதிகரிக்கவும் செய்தது.

சண்டைகளின் போது விழுப்புண் அடைவது புலிகளுக்குப் புதிதல்ல. இதைப் புலிகளுடன் தோளோடு தோள் நின்ற தமிழ் மக்கள் நன்கறிவார்கள். சுமார் ஆறு மாத காலத்திற்கு முன்னர் இடம்பெற்ற ஒரு சண்டையின் போது திலீபன் வயிற்றில் காயமடைந்திருந்தது உண்மைதான். ஆனால் நாட்களை எண்ணிக்கொண்டிருக்கும் அளவிற்கு திலீபனுக்கு உடல்நிலை ஒன்றும் மோசமாக இருக்கவில்லை என்பதை, திலீபனின் வாழ்க்கையில் பின்னிப் பிணைந்திருந்த யாழ்ப்பாணத் தமிழ் மக்கள் நன்கறிவார்கள்.

அத்தோடு, மரணத்திற்கு முன்பதாக திலீபன் ஆற்றியிருந்த உரை, தனது குறிக்கோளில் திலீபன் கொண்டிருந்த உறுதியை வெளிப்படுத்துவதாக இருந்தது.

''நான் என் உயிரினும் மேலாக நேசிக்கும் மக்களே! உங்களிடம் ஒரு பெரும் பொறுப்பை விட்டுச் செல்கிறேன். நீங்கள் அனைவரும் பரிபூரணமாகக் கிளர்ந்தெழ வேண்டும். இங்கு ஒரு மாபெரும் புரட்சி வெடிக்கட்டும். மக்கள் அனைவரும் எழுச்சியடைவார்களாயின் தமிழீழம் உருவாவதை யாராலும் தடுக்க முடியாது. எமது உரிமைகளை நாமே வென்றெடுக்க வேண்டும். இதற்கு வேறு யாருடைய தயவையும் எதிர்பார்க்கக் கூடாது."

> நாம் போராடி இரத்தம் சிந்தி எமது விடுதலையை வென்றெடுக்க வேண்டும், எமக்கு வேறு வழி இல்லை. ஒன்று அடிமைகளாக அழிந்தொழிய வேண்டும், அல்லது போராடிச் சுதந்திரமாக வாழ வேண்டும். இதுதான் எமது அரசியல் தலைவிதி.
>
> – தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன்.

## துரோகங்களின் அத்தியாயங்கள் - 33

**திலீபனின் ஞாபகார்த்தமாக:**

திலீபனின் விருப்பப்படி அவரது உடல் யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடத்திடம் கையளிக்கப்பட்டது. திலீபனின் ஞாபகார்த்தமாக புலிகளின் மருத்துவப் பிரிவினர், 2003 மார்ச் மாதமளவில் வன்னி, நைனாமடுவில் ஒரு வைத்தியசாலையைத் திறந்துள்ளார்கள்.

தியாகி திலீபனின் நினைவு நாள் ஆண்டுதோறும் தமிழ் கூறும் நல்லுலகம் எல்லாம் கொண்டாடப்பட்டு வருகிறது. ''எமது மண்ணின் விடுதலைக்கு யார் போராடுகிறார்களோ அவர்கள்தான் இந்த மண்ணின் மைந்தர்கள்" என்று சொன்ன மண்ணின் மைந்தன் திலீபனின் மறைவு நாள் நினைவாகவே, கிளிநொச்சி சிங்கள இராணுவ முகாம் 26.10.1998இல் புலிகளால் தகர்க்கப்பட்டது.

அதேபோன்று விடுதலைப் புலிகளின் முதலாவது பெண்கள் படை அணித் தளபதி சோதியா தலைமையில் 26.10.1989 அன்று திலீபனின் ஞாபகார்த்த தினத்தன்றே ஸ்தாபிக்கப்பட்டது.

திலீபனைப் பற்றிய தனது ஞாபகத்தை, தமிழீழ அரசவைக் கவிஞர் புதுவை இரத்தினதுரை அவர்கள் கவிதை வரிகளால் வடித்திருந்தார்.

**''என் இனிய திலீபனே**
**ஒரு வார்த்தை.... பேசிவிடு,**
**"தமிழீழம்" என்ற தாரக மந்திரத்தைச்**
**சொல்லிவிட்டு,**
**மீண்டும் தூங்கி விடு**
**மக்கள் சமுத்திரத்தில்**




**மரணித்துவிட்ட வீரனே**


**நல்லூரின் வீதியில் நீ கிடந்ததையும்**
**நாவரண்டு நீ சுருண்டதையும்**
**நாங்கள் மறப்போமா?**

**மரணம் வாழ்க்கையின் முடிவு,**
**உனக்கு....**
**மரணமே வரலாற்றின் தொடக்கம்,**
**நீ.... ஒரு வரலாறு,**
**சரித்திரமே உன் சாவு""**

**என் இனிய திலீபனே**
**நீ கையில் ஆயுதம் ஏந்திய போதும்**
**அருகிருந்து பார்த்துள்ளேன்.**
**நீ..... நெஞ்சில் அகிம்சை ஏந்திய**
**போதும்**
**அருகிருந்து பார்த்துள்ளேன்.**
**எந்த வித்தியாசமும் தெரியவில்லை**
**போராளிகளுக்குரிய போர்க்குணமே**
**உன்னில் தெரிந்தது.**

**திலீபனின் மரணம் ஏற்படுத்திய பிளவு:**

புலிகளுடனான இந்தியப் படையினரின் யுத்தத்திற்குக் கட்டளையிடும் உயரதிகாரியாகக் கடமையாற்றியவர் லெப். ஜெயரல் திபீந்தர்சிங்.
ஈழ மண்ணில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சாதனைகளுக்காக(??) அவருக்கு இந்திய ஜனாதிபதியால் 'சிரோமணி விருது', 'விஷித் சேவா விருது' என்று பல



விருதுகள் வழங்கப்பட்டன. திபீந்தர் சிங் பின்நாட்களில் தனது ஈழ அனுபவம் பற்றி IPKF in Sri-Lanka என்ற தலைப்பில் ஒரு புத்தகம் எழுதியிருந்தார். அதில் திலீபனின்

**- நிராஜ் டேவிட்-**

உண்ணாவிரதம் பற்றியும், எழுதியிருந்தார். திலீபனின் மரணம் பற்றி அவர் இவ்வாறு முடித்திருந்தார். 'யாழ் தமிழ் மக்களிடையே மிகவும் பிரபலமானவர் திலீபன். அவரது மரணம் இந்தியாவிற்கும் ஈழத் தமிழ் மக்களுக்கும் இடையில் மிகப் பெரிய பிளவை ஏற்படுத்தும்படியாக அமைந்திருந்தது.'

(துரோகம் தொடரும்.....)

# தென்தமிழீழத்தில் செழுமையடையும் பொருண்மியத் துறை!

விடுதலைப்புலிகளின் மட்டக் களப்பு அம்பாறை மாவட்ட பொருண்மிய மேம்பாட்டின் செயற்பாடுகள் பெரும் முன்னேற்றத்தைத் தரக்கூடியதாக உள்ளதைக் காணக்கூடியதாய் உள்ளது.

குறிப்பாக கடந்த ஒரு வருட காலத்தில் மட்டக்களப்பு அம்பாறை




மாவட்டங்களில் உள்ள கமக்காரர்களுக்கும், கால்நடைவளர்ப்போருக்கும், மீன்பிடித் தொழில் சார்ந்தவர்களுக்கும், மற்றும் சுயதொழிலில் ஈடுபடக்கூடியவர்களுக்கும் பல்வேறுபட்ட விழிப்பூட்டும் கருத்தரங்குகள், வயல்விழாக்கள், பொருட்காட்சிகள், கல்விச்சுற்றுலாக்கள் என்பவற்றை நடாத்தியுள்ளமை உண்மையிலேயே பாராட்டப்பட வேண்டிய விடயமாகும்.

இங்குள்ள அத்துறை சார்ந்த திணைக்களகங்கள் சில ஏனோ தானோ என்ற நிலையில் பொது மக்களுக்கு எந்தவித பயன்பாடுகளும் இன்றி காணப்படும் நிலையில் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் பல இலட்சம் ரூபாய்களைச் செலவீடு செய்து மட்டக்களப்பு மாவட்டத்தில் இதுவரை காலமும் கண்டிராத விவசாயப்

-பாத்திரன்-

பொருட்காட்சி ஒன்றினைக் கடந்த வருடம் 2002 அக்டோபர் 11ம்திகதி மட்டக்களப்பு இந்துக் கல்லூரி, மகாஜனக்கல்லூரி, ஆகிய இடங்களில் நடாத்தியமையினால் சுமார் ஐம்பதாயிரம் மாணவர்களும், மக்களும் பார்த்துப் பயனடைந்தனர். இப் பொருட்காட்சியின் ஊடாக பொருளாதார மேம்பாட்டிற்கு விழிப்பூட்டப்பட்டது எனலாம்.

இதே போல் மட்டக்களப்பு மாவட்ட கால்நடைவளப்பாளர்களை ஒன்று திரட்டி கரடியனாறு மகாவித்தியாலயத்தில் மாடுவளர்ப்பின் முக்கியத்துவம், பால் உற்பத்தியை எவ்வாறு பெருக்கலாம் என்ற செயலமர்வு கால்நடை உற்பத்தி சுகாதர்ரத் திணைக்கள அதிகாரிகளைக் கொண்டு நடாத்தியமையினால் பல பண்ணையாளர்கள் நன்மையடைந்தனர்.

விவசாயச் செய்கையில் குறிப்பாக நெற் செய்கையை ஜீவனோபாய தொழிலாக மேற்கொள்ளும் பல விவசாயிகளை ஒன்று திரட்டி நாட்டின் பல்வேறுபட்ட இடங்களுக்கு அழைத்துச் சென்று காண்பித்தமையினால் இன்று நெற் செய்கை, மேட்டு நிலப் பயிர் செய்கையில் ஈடுபட்டுள்ள பல விவசாயிகளுக்குப் புதிய தகவல்களும், அநுபவங்களும் கிடைத்துள்ளதாக எம்மிடம் கூறினர்.

விவசாயம், கால்நடைவளர்ப்பு மட்டுமன்றி மீன் பிடித் தொழிலை நம்பி வாழ்க்கை நடாத்தும் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட மீனவர்களை ஒன்று திரட்டி பல கருத்தரங்குகளை நடாத்தியது மட்டுமன்றி ஆழ்கடலில் மீன் பிடிப்பவர்களுக்கான அறிவுரைகளும், நன்னீர் மீன் பிடிப்பாளர்களுக்கான பல வசதிகளையும் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் தொடர்ந்து செய்து வருவதைக் காணலாம்.

கைத் தொழில், சுய தொழில் என்பவற்றை மேம்படுத்தும் நோக்கிலும் யுவதிகளுக்கான தையல் பயிற்சி, ஆடைத் தொழில்களையும், பிரம்பு உபகரணத் தொழில்களையும் இந்த பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் நடத்துவதைக் கண்டாவது இங்குள்ள அரசசார்பற்ற நிறுவன்ங்களும் ஏனைய அரச அமைப்புக்களும் செய்ய வேண்டிய பணிகளையும் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் தான் மட்டக்களப்பில் செய்ய வேண்டிய துர்ப்பாக்கிய நிலையுள்ளது.

இவை அனைத்தையும் விட ''பசுமை'' எனும் காலாண்டு சஞ்சிகையினை கடந்த வருடம் 2002 செப்டம்பர் மாதம் முதல் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினால் சமூக பொருளாதார விஞ்ஞான இதழாக



வெளியிட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த இதழின் ஓராண்டு நிறைவு விழாவும், இரண்டாவது வருடத்தின் சிறப்பு இதழாக வெளியிடப்பட்ட பசுமை வெளியீட்டு விழாவும் கடந்த திங்கட்கிழமை 10 ம் திகதி கரடியனாற்றில் வெகு சிறப்பாக இடம் பெற்றபோது மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானவர்கள் இவ்விழாவில் கலந்துகொண்டமை பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் வளர்ச்சியை மேலும் உறுதிப்படுத்தியதாய் அமைந்தது.

இந்த விழாவில் தலைமை உரை நிகழ்த்திய மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட பொருண்மிய மேம்பாட்டு பொறுப்பாளர் கி.நிஷாம் ''பசுமை'' இதழை எந்த ஒரு ஆசிரியர் பீடமும் இன்றி தாம் சில போராளிகளை மட்டும் வைத்து வெளியிடுவதைப் பற்றியும் விடுதலைப் புலிகளால் எதையும் செய்ய முடியும் என்பதற்கு இது நல்ல உதாரணம் எனவும் கூறினார்.

உண்மையிலேயே இதுவரை ஐந்து பசுமை இதழ்கள் வெளிவந்துள்ளன. அந்த ஐந்து பசுமையிலும் பல ஆக்கபூர்வமான அறிவுசார் விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருப்பது பசுமையின் உயர்வை கோடிட்டுக் காட்டியுள்ளது.

நீரைப்பற்றி, நிலத்தைப்பற்றி, வனத்தைப்பற்றி, வானிலையைப்பற்றி, கமத்தைப்பற்றி, கால் நடைகளைப்பற்றி, மீன்பிடித்துறையினைப் பற்றி, அரசியலைப்பற்றி என எத்தனையோ விடயங்கள் பசுமையில் இடம் பிடித்துள்ளமை பொருளாதார மேம்பாட்டுக்கு உறுதுணையாக அமையும் ஒரு இதழாக பசுமையைக் கருத முடிகின்றது.

**மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட பொருண்மிய மேம்பாட்டு செயற்பாடுகள் இங்குள்ள ஏனைய திணைக்களங்களுக்கும் ஏனைய நிறுவனங்களுக்கும் பாடமாக அமைய வேண்டும்.**

இவ்வாறு பல்வேறுபட்ட நடவடிக்கைகளை மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் மேற்கொண்டு வரும் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் செயல்வடிவம் கொடுத்து பல மாதிரிப் பண்ணைகளை அமைத்துள்ளனர்.

கால்நடைப்பண்ணை விவசாயப்பண்ணை, மீன்வளர்ப்புப் பண்ணை என பல துறைசார் பண்ணைகளில் பல்வேறுபட்ட உச்ச உற்ப்பத்தியை ஈட்டக்கூடிய வகையில் இன்று மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் வளர்ச்சியடைந்துள்ளது.

மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட பொருண்மிய மேம்பாட்டு செயற்பாடுகள் இங்குள்ள ஏனைய திணைக்களங்களுக்கும், ஏனைய நிறுவனங்களுக்கும் பாடமாக அமைய வேண்டும்.

இவர்களின் செயற்பாடுகளைப் பார்த்தாவது இங்குள்ள மக்களின் பொருளாதார மேம்பாட்டை முன்னேற்ற அனைவரும் உழைக்க வேண்டும். இதுவே இன்றைய எதிர்பார்ப்பாகும்.

---

## அலைமகன் எழுதும் பகிரங்கமடல்.



## புத்திரசிகாமணிக்கு! புத்தி வந்ததோ......

**நாடாளுமன்ற உறுப்பினர் புத்திர சிகாமணிக்கு!**

சந்திரிக்கா அம்மாவின் தயவை நாடி நின்ற நீங்கள் தற்போது நல்லதொரு காரியம் செய்துள்ளீர்கள். ஒரு தமிழன் என்பதை நிரூபித்துள்ளீர்கள். பாராட்டத்தான் வேண்டும் உங்கள் காரியத்திற்கு.

கடந்த காலத்தில் பொதுஜன ஐக்கிய முன்னணிக் கட்சியினரின் இனவாதப்பட்டறையில் வளர்க்கப்பட்ட எத்தனையோ எம்:பிகள் தமிழ் இனத்திற்குத் துரோகமிழைக்கின்றனர். ஏன் தமிழனோ சிங்களவனோ தெரியாது. லக்ஷ்மன் கதிர்காமர் செய்யும் துரோகம் தமிழினம் மன்னிக்க முடியாத துரோகம். இவ்வாறான துரோகிகள் குடிகொண்டிருக்கும் பொதுஜன ஐக்கிய முன்னணியில் இருந்து புத்தி வந்தது போல் புத்திர சிகாமணி உதறித்தள்ளி விட்டுத் தமிழ்க் கூட்டமைப்புப் பக்கம் சார்ந்திருப்பது வரவேற்கத்தக்கது பாராட் டத்தக்கது.

எதிர் காலத்தில் தமிழினத்திற்குத் துரோகமிழைக்கும் கட்சிகளின் பின்னால் வால்பிடித்து வயிறு நிரப்பும் கும்பல்களுக்கு ஒரு முன்னுதாரணமாக உங்கள் கட்சி மாற்றம் அமைய வேண்டும்.

சமாதான தேவதையாக உலாவந்த அம்மணி சந்திரிக்காதான் இப்போது அரசியல் புரளியை கிளப்பி உள்ளார். ஆட்சி மாற்றமா? தேர்தலா? அடுத்தது என்ன? என்ற கேள்விக்குப் பதிலளிக்க முடியாமல் ஆட்சியாளர்களைத் திணற வைத்திருக்கும் ஜனாதிபதியின் செயற்பாடுகளுக்கு மேன்மைதங்கிய ஜனாதிபதியின் ஆலோசகர் லக்ஷ்மன் கதிர்காமரும் ஒருவர்தான் என்பது உண்மை.

இவ்வாறான கதிர்காமர் போன்றோர் குடி கொண்டிருக்கும் கட்சியிலிருந்து புத்திரசிகாமணி போன்றோர் வெளியேறுவது தமிழ்த் தேசியத்தின் உரிமையை வென்றெடுக்கும் போராட்டத்தை இன்னும் வலிமைப்படுத்தும் என்பது உண்மை. எதிர் காலத்தில் உங்களின் பங்களிப்பு தமிழ் மக்களின் உரிமைக்காகக் குரல் கொடுக்கும் சக்தியாக மாறட்டும். அதை மீண்டுமொரு தடவை ஞாபக மூட்ட விரும்புகிறேன்.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான சமாதானப் பேச்சுக்களைப் பாதாளத்திற்குத் தள்ளும் வகையில் பொதுஜனஐக்கிய முன்னணி ஆட்சியமைக்க ஐக்கிய தேசியக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்கும் பேரப் பேச்சுக் களிலும் ஈடுபட்டு வருவதாகப் பேச்சுக்கள் அடிபடுகின்றன.

நெருப்பு இல்லாமல் புகையுமா? இப்போது உலாவும் பேச்சுக்களில் உண்மையிருக்கத்தான் செய்யும். அவ்வாறான சூழ்ச்சித்திட்டங்களில் இந்த புத்திரசிகாமணி சிக்கிவிடக் கூடாது. புத்திர சிகாமணி போன்று மற்றோரும் நன்மை பயக்கும் காரியத் தைச் செய்ய வேண்டும்.

-இங்ஙனம், அலைமகன்

# பெண்ணுக்கு அன்பே அழகு



உலகத்திலே அன்பை விட உயர்ந்தது எதுவுமில்லை. நம்மில் பலர் இதை உணரவில்லை. தங்கள் பிள்ளைகளுக்காக கணவனும், மனைவியும் அயராது பாடுபட்டு உழைக்கின்றார்கள். ஆனால் பிள்ளைகளோடு கதைப்பதற்குக் கூட நேரமிருக்காது. பிள்ளைகள் நம்மிடம் எதிர்பார்ப்பது பணத்தை யல்ல பாசத்தைத் தான். நாம் அதனைக் கொடுக்கத் தவறும் போது நாம் அவர்களுக்காகச் சேர்த்து வைத்த சொத்துக்கள் பயனற்றுப் போகும்.

பிள்ளைகள் தங்கள் படிப்பினைப் பற்றியோ அல்லது தங்கள் நண்பர்களைப் பற்றியோ அம்மாவிடம் சொல்ல வேண்டும் என்று எதிர் பார்த்துக் கொண்டிருப்பார்கள். அம்மா வந்ததும் ஆவலோடு தாயிடம் ஓடி வருவார்கள். அம்மாவோ "இப்பத் தான் வேலை விட்டு வந்திருக்கிறேன். என்னைத் தொந்தரவு செய்யாதே" என்று கோபமாகச் சொல்லி விடுவாள். பிள்ளையின் மனம் இந்த நேரத்தில் தான் பாதிப்படைகிறது. தனது அம்மாவைப் பிள்ளை வெறுக்கிறது. அதன் பிஞ்சு மனதிலேயே காயம் ஏற்படுகிறது. பிள்ளையும் வளர வளர அந்தக் காயமும் அதனோடு வளர்கிறது. பின் அதன் எதிர் காலத்தில் பெற்றோரை வெறுக்கும் பிள்ளை களாக மாறி விடுகிறது. பிறகு நாம் எதைத்தான் கதைத் தாலும் பிள்ளைக்கு நம்மில் இருக்கும் வெறுப்பினால் பிழையாகத்தான் தோன்றும். நாம் நன்மைக்குச் சொல்வதெல்லாம் தீமையாகத்தான் தோன்றும். அன்பினை நாம் கொடுப்பதினால் ஒரு போதும் நாம் குறைவடைந்து போக மாட்டோம். அன்பு என்பது அழிக்க முடியாச் செல்வம். எந்தப் பெண் பாசமும் பரிவும் கொண்டு விளங்குகின்றாளோ! அவளே பெண்மையின் அர்த்தம் கொண்டவள் என்பது உண்மை.

எஸ்.எம்.சி.பாரதி

# நட்பு என்றால் எப்படி இருக்க வேண்டும்

* ஒருவரின் இன்பத்திலும் துன்பத்திலும் பகிர்ந்து கொள்வதுதான் உண்மை நட்பு.

* பொறாமை, பொய், சந்தேகம், இவற்றுக்கு அப்பாற் பட்டதுதான் உயர்ந்த நட்பு.

* நண்பிக்கு ஒரு ஆபத்து வரும்போது தன் உயிரையே கொடுக்கத் துணிபவள் தான் நண்பி.

* எத்தனை ஆண்டுகள் பிரிந்திருந்தாலும் நண்பியின் நினைவுகள் மட்டும் மனதை விட்டுப் பிரியக் கூடாது.

* உனது நட்பிற்கு எது தடையாக அமைகிறதோ அதனைத் தவிர்த்து விட்டு, நட்பினை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

*s. மேரிகிறிஸ்ரி, கல்லடி*

# சமையல் பொருட்களின் மருத்துவக் குணங்கள்

* கடுகு - கடுகில் காட்டுக் கடுகு என்று ஒரு வகை உண்டு. வெந்நீரில் இதை அரைத்துப் போட வீக்கங்கள் மறையும். இதன் சாறு காது நோய்களைக் குணப்படுத்தும். இல்லையேல் நெய்யிலிட்டுக் காய்ச்சிப் பற்றுப் போட புண்கள் விரைவில் ஆறும்.


* மிளகு - மிளகில் பற்பொடி செய்துஉபயோகித்து வந்தால் பற்கள் விழாது. மிளகுத் தூளுடன் வெங்காயம், உப்பு சேர்த்து அரைத்துப் பூசி வந்தால் வழுக்கைத் தலையிலும் முடி வளரும். சுக்கு, திப்பிலி, பெருஞ்சீரகம், பாறை உப்பு ஒரே அளவாக மிளகுடன் சேர்த்து உணவுக்குப் பின் கொடுத்தால் அஜீரணம் நீங்கும் வயிற்று வலியும் நீங்கும்.

* பச்சை மிளகாய் - அயோடின் அதிகமுள்ள இதை தூர எறிந்து விடாமல் காய் கறிகளுடன் சேர்த்தே சாப்பிடலாம். வளர்ச்சிக்கும் தசைகள் குறுகி பலம் பெறவும் உதவும். இரத்த அழுத்தமும் அதிகப் படியான கொழுப்பும் குறையும்.

## மருத்துவக் குறிப்புகள்


*காலில் வெடிப்பா? காலில்-குளிர் காலத்தில்- ஏற்படுகின்ற வெடிப்புக்கு ஒரு கரண்டி சூடான விளக்கெண்ணெயில் சிறிது மஞ்சள் பொடி சேரத்து வெடிப்பில் தடவி அரை மணி நேரம் கழித்து காலைக் கழுவினால் போதும் காலை மாலை இரு வேளை இதைத் தொடர்ந்து வந்தால் ,சில நாட்களில் சரியாகி விடும்.

* அடிக்கடி சளிபிடிக்கிறதா? அடிக்கடி சளி பிடித்துக் கொண்டு தும்மல் வருகிறதா? அகத்திக் கீரை ,அகத்திப் பூ இவை இரண்டையும் கொண்டு வந்து நசிக்கி சாறு எடுத்து, அதில்



தேனையும் கலந்து மூன்றுவேளை சாப்பிடுங்கள் போதும் சளி வரண்டு விடுவதுடன் தும்மலும் நின்று விடும்.

# உருளை வடை



## தேவையான பொருட்கள்

உருளைக் கிழங்கு -1/4kg
ரவை (வறுத்து அரித்தது) 3மே.க
சி.வெட்டிய வெங்காயம்-3 மே.க
சி.வெ. பச்சை மிளகாய்-2 மே.க
கறி மிளகாய்த் தூள்-1 மே.க
உப்புத்தூள்- அளவிற்கு
முட்டை-1
தேங்காய் எண்ணெய்-1/4 போத்தல்.

## செய்முறை


உருளைக் கிழங்கை அவித்து கட்டியில்லாமல் நன்றாக நசித்து பாத்திரத்தில் போட்டு வெட்டிய வெங்காயம் , பச்சை மிளகாய், ரவை, கறி மிளகாய்த் தூள், உப்புத்தூள், என்பவற்றைச் சேர்த்து நன்றாகப் பிசைந்து கொண்ட பின்புஅதனுள் முட்டையை உடைத்து விட்டு நன்கு சேர்த்துக் கொள்க. பின்பு இக்குளைத்த கலவையை பதினைந்து சம அளவான உருண்டைகளாக உருட்டி வைத்துக் கொண்ட பின்பு கொதிக்கும் எண்ணெயில் உருண்டைகளை மூழ்கும் வண்ணம்போட்டுப் பொன்னிறமாகப் பொரித்து எடுத்து ஆறிய பின்னர் பரிமாறலாம்.

# பேரீச்சம் பழத்தின் பெருமை

*பேரீச்சம்பழத்தில் விற்றமீன் ஏ-பி-1, பி-2 காபோவைதரேட் சத்து, கொழுப்புச் சத்து, கல்சியம், பொஸ்பரஸ், போன்ற சத்துக்கள் அடங்கியுள்ளது. ஒரு அவுன்சு பேரீச்சம்பழத்தில் 98.4 கலோரி- வெப்பம் உள்ளது. இவற்றில் 70 சத வீதம் குளுக்கோஸ் அடங்கியிரு க்கிறது. இரத்தம் ஊறுவதற்குப் பேரீச்சம்பழம்பெரிதும் உதவுகிறது. மலச்சிக்கல், நீர்க்கோவை, நாவறட்சி, வாயிளைப்பு, இவைகளையும் பேரீச்சம்பழம் குணப்படுத்தும். குடலிலிருக்கும் தீய கிருமிகளின் அழிவிற்கும் இது சிறந்தது.*

*K.யோகேஸ்வரி*

## ரோஜாத் தைலம்





ரோஜாத் தைலம் இனிய மணமுடையதாக இருக்கும். அதே சமயத்தில் அது உடல் சூட்டையும் தணிப்பதோடு, கூந்தலையும் நன்கு வளரச் செய்யும். இதையும் நீங்களே தயாரித்து வைத்துக் கொள்ளலாம்.

200மில்லி ரோஜா இதழ் சாற்றை எண்ணெயில் கலந்து அடுப்பிலேற்றிக் காய்ச்சி , பக்குவமானதும் இறக்கி வடிகட்டி ஆற வைத்து எடுத்து வைக்க வேண்டியதுதான். இதை நாள்தோறும் தடவி வரலாம். நன்கு குளு குளுவென்று இருப்பதோடு, கூந்தலும் நன்கு வளரும்.

## பெண்ணே புரிந்து கொள்

வெள்ளையுடை உனக்கென்று
வேதனை கொள்ளவேண்டாமடி
வெண்மை
வெள்ளையான உன் மனதை
இறைவனிடம் சேர்த்திடுமடி
பொட்டில்லை என்று-நீ
பொருமி விடாதேடி-பாலில்லா
நெற்றிதனில் நீறு இட்டு
இறைவனையே சேர்ந்திடடி!
பூவில்லை உனக்கென்று
வாட்டம் கொள்ளாதடி -பூவெல்லாம்
பூசைக்கே உகந்ததென்று
பூ மாலையாய்ச் சேர்த்திடடி!
நகையலங்காரம் இல்லையென்று -நீ
நலிந்து விடாதடி இவ்வுலகில்
நல்லவர்கள் இல்லையடி நாட்களை
நாணமாய்க் கருதி நீ வாழ்த்திடடி

*உதய அம்பலவாணி*

# பெண்ணின் வளர்ச்சி

விடுதலைப் போராட்டம் ஆரம்பித்த காலப்பகுதியிலே எமது தேசியத்தலைவர் ஆண் போராளிகளை மட்டுமே படையணியில் சேர்த்து வந்தார். அக்காலகட்டத்திலே சிங்கள ஆட்சியாளர் களின் திட்டமிட்ட இன ஒடுக்குமுறை சமூகங்களின் பெண் ஒடுக்குமுறை போன்றவற்றால் ஆழமாகப் பாதிக்கப்பட்டிருந்த பெண்கள் இன்று தலைவரின் வழியிலேயே பெண் ஒடுக்குமுறையைத் தகர்த்து எறிவதற்காக வீரத்தாயின் மடியில் பிறந்த வீரப்புலி வீரர்கள். பெண்கள் இனவெறி பிடித்த சிங்களவனை பூண்டோடு அழித்து நாசமாக்கவென இறைவனால் அனுப்பப்பட்ட அக்கினிக் குழந்தைகள் பெண்கள். மாவீரர்களுக்காக தம் மக்களுக்காக ஜெயித்துக் கொண்டிருப்பவர்கள் வீரப்புலி வீரர்கள். பெண்கள் அகப்பை பிடிக்கும் கையால் ஆயுதம் ஏந்த வைத்தது யார்? ஆம்! அவன்தான் இன வெறிபிடித்த சிங்கள காடையன். விடுதலை இயக்கத்தில் இணைய வேண்டும். விடுதலை மண்ணின் விடிவு காணவேண்டும் என சீறி எழுந்தனர் பெண்கள். தாயிலும் பெரிது தாய் மண் என தமிழீழத்தை நேசித்தனர். பெண்கள் உலகமே வியக்கும் அளவிற்கு உயர்ந்து நிற்கின்றது. பெண்ணினத்தின் வளர்ச்சி ஏன் தெரியுமா? இந்த இன வெறிபிடித்த சிங்களவனின் கொடிய வார்த்தைகளாலும் கொடூரமான செயவாலுமேயாகும். இந்தக் கொடிய சிங்களவன் கொடூரமான வார்த்தைகளைப் பேசுவதையும், கொண்டு சிறையில் அடைப்பதையும், குழந்தையைக் காலால் அடிப்பதையும், வீட்டில் தீயை மூட்டுவதையும், வீட்டை விட்டு விரட்டுவதையும். பார்த்திருந்த பெண்ணினம் குதித்தெளுந்தது. பார் போற்ற போர் புரிந்து சாதனைகள் பல படைத்து உயர்ந்து நிற்கின்றது எம் பெண்ணினம். கடற்கரும் புலியென தரைக் கரும்புலியென வெடித்து சிதறுகின்றது எம் பெண்ணினம். பெண் இனத்தின் செங்குருதி ஆறாய் ஓடுவதைக் காடை வெறியர்கள் காணவில்லை போலும் இவ்வெறியனின் கண்முன்பே பெண்ணினத்தின் உடலில் கந்தகம் சுமந்து தசையைச் சிதறு துண்டுகளாக்கி இன வெறியென தவிடு பொடியாக்கி நாளை பறக்கும் பெண் இனத்தின் தேசியக் கொடி.

*பார்கவி.*

# திருமலை
## விமர்சனம்

சென்னை புதுப்பேட்டையில் மோட்டார் மெக்கானிக் விஜய் ஜாலியான இளைஞன். புத்தாண்டு அன்று ஜோதிகா அவரிடம் பூ கொடுத்து எல்லாமே நல்லா இருக்கும் என்று வாழ்த்துக் கூற ஜோதிகா மீது விஜய்க்கு காதல் மலர்கிறது. ஆனால் ஜோதிகா விஜய்யின் காதலை ஏற்க மறுக்கிறார். இவரது தந்தையோ மிகப்பெரிய அந்தஸ்தில் உள்ள பெரிய மனிதர்.

விஜய்- ஜோதிகாவின் காதலை விரும்பாதவர், ஒரு சூழ்நிலையில் விஜய்மீது ஜோதிகா காதல் கொள்கிறார். ஆனால் அவரது தந்தை காதலை பிரிக்க சென்னையை ஆட்டி வைக்கும் தாதாவின் உதவியை நாடுகிறார்.

விஜய்- ஜோதிகா காதலை அந்த தாதா தடுத்தாரா? என்பதே படத்தின் மீதிக் கதை.

நண்பர்களுடன் கேரம் போர்ட்டு விளையாடும் போது சென்னை தாதாவாக வரும் மனோஜ் ஜெயினின் ஆட்கள் தப்பி விட்டு செல்ல விஜய் அவர்களிடம் கேரம் போர்டுடை உடைத்ததற்கு ரூபாய் வேண்டும் என்று கேட்க அடியாட்கள் மறுக்க அப்போது ஏற்படும் சண்டையிலும் சரி மனோஜ் ஜெயின் இருக்கும் இடத்திற்கே சென்று மிரட்டி விட்டு வருவதும் விஜய்யின் தனி பரிவர்த்தனம்தான். அதோடு ரவுடி ஸ்ததால் காதலை பிரிக்க முடியாது என்று எச்சரிப்பதும், ஜோதிகா வீட்டிற்குச் சென்று ஜோதிகாவை ஏன் திட்டினீங்க என்று அவரது தந்தையிடம் கேள்வி கேட்பதும் ரசிக்க வைக்கிறது.

ஆக்ஷனில் மட்டுமல்ல சென்டிமென்ட்டிலும் தனி முத்திரை பதித்து இருக்கிறார். தாதாவின் ஆட்கள் விஜய்யின் நண்பர்களைக் கடத்திச் செல்வதும், அதற்காக ஆவேசப்படாமல் பொறுமையாக நண்பர்களின் குடும்பத் திற்காகவும், நண்பர்களுக்காகவும் தன்னை விட்டு கொடுத்து மீட்டு செல்லும் காட்சி நெஞ்சில் நிற்கிறது.

அதே போல ஜோதிகாவிடம் காதலைப்பற்றிச் சொல்லும் போது காதலிப்பதாக விஜய்யிடம் பொய் சொல்ல விஜய் ஆவேசமாக பொய் சொல்றே! என்று கத்துவதும் யதார்த்தமான நடிப்பு. சில காட்சிகளில் காதலன் விஜய்க்காக அழுகிறார். இதுதான் அவரது கேரக்டர்

ஆர்ட்டிஸ்டாக வரும் ரகுவரன் அவரது மனைவியாக கௌசல்யா. கதாநாயகனாக விஜய்யிக்கு ஜோடியாக நடித்தவர். ரகுவரனுக்கு மனைவியாகவும், அப்பா



வித்தனமான கிராமிய பெண்ணாகவும் நடித்து இருக்கிறார்.

விவேக் வேலை தேடும் பட்டதாரியாக நடித்து இருக்கிறார். வேலைக்காக இண்டர்வியூக்கு போகும் போது டேக்டைவசன் என்று போர்டு பார்த்த விஜய்யும் விவேக்கை அழைத்துக் கொண்டு சுற்றுவதும் கடைசியில் திருப்பதி வரை போவது நல்ல தமாஷ்.

அதே போல டி.வி.யில் ராசிப்பலன்படி நடக்கும் விவேக் காமெடி ரசிக்க முடிகிறது. கருணாஸ்க்கு காமெடி குறைவு என்றாலும் நினைவில் நிற்கிறார்.

அரசு என்ற பெயரில் தாதாவாக வரும் மனோஜ் ஜெயின் நடிப்பு வில்லத்தனம், விஜய்யின் அறிவுரைகளைக் கேட்டு கத்தியை கீழே போடும் போது கூட இருக்கும் அடியாட்கள் இவரை கொல்ல முயற்சிப்பதும். மனோஜ் ஜெயினை காப்பாற்ற விஜய் மோதும் சண்டைக் காட்சி மெய்சிலிர்க்க வைக்கிறது. படம் பார்ப்பவர்களையும் அடிக்கத் தூண்டிவிட வைக்கிறது. ரமணா இயக்கத்தில் உருவாகி உள்ள திருமலை ஆக்ஷன் கலந்த படம். திருமலை இனி ரசிகர்களின் மலை.

## ஐஸ் பட கதாநாயகன் நடிக்கும் துளி துளியாய்

கல்ச்சர் மீடியா என்ற புதிய பட நிறுவனம் மிகப்பிரமாண்டமான முறையில் தயாரிக்கும் படம் துளிதுளியாய் ஸ்கோப் இப்படத்தில் ஐஸ் படத்தில் கதாநாயகனாக அறிமுகம் ஆன அசோக் கதாநாயகனாக நடிக்கிறார். கதாநாயகியாக முன்னணி நடிகை ஒருவர் நடிக்கிறார். அதற்கான தேர்வு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மற்றும் விவேக், மணிவண்ணன், குஷ்பு, ராஜீவ், மாணிக்கவிநாயகம், ஜெயா, முரளி, ஷகிலா, ஆகியோரும் நடிக்கிறார்கள். பாடல்கள்: யுகபாரதி, பழனிபாரதி, அறிவுமதி, கபிலன், நா.முத்துக்குமார்

இந்திய இளைஞனுக்குள் தீப்பொறியாய் உறங்கிக் கொண்டிருக்கும் கலாச்சார ஏக்கத்தை மையப்படுத்தி உருவாக்கப் பட்டுள்ள கதையே துளி துளியாய். இப்படத்தின் படப்பிடிப்பு இம்மாதம் 6-ம் தேதி பாண்டிச்சேரியில் ஆரம்பமாகிறது. தொடர்ந்து படப்பிடிப்பு தரங்கம்பாடி, காரைக்கால் போன்ற இடங்களில் நடைபெறுகிறது. பாடல்காட்சிகள் மலேசியா மற்றும் சிங்கப்பூரில் படமாக்கப்பட உள்ளது. தொடர்ந்து 50 நாட்கள் படப்பிடிப்பு நடைபெற்று ஒரே கட்டபடப் பிடிப்பாக முடிவடைகிறது துளியாய்

## புது முகம் குட்டி நடிக்கும் டான்ஸ்

திரைப்பட தயாரிப்பாளர், வினியோகஸ்தர், இயக்குனருமான கேயாரின் கதை, திரைக்கதை, வசனம், இயக்கத்தில் மிக பிரமாண்டமான முறையில் நவீன தொழில்நுட்பத்துடன் டான்ஸர் என்ற புதிய படம் தயாராகிறது. ஈரமான ரோஜாவே, வனஜா கிரிஜா, இரட்டை ரோஜா, எனக்கொரு மகன் பிறப்பான், மாயாபஜார், தாலி புதுசு, கும்பகோணம் கோபாலு, விஜயகாந்தின் அலெக்ஸாண்டர், தர்மா போன்ற வெற்றி படங்களை இயக்கிய கேயார் வித்தியாசமான கோணத்தில் புதுமையான கதையம்சத்துடன் கூடிய டான்ஸர் படத்தை இயக்குகிறார்.

கால் இல்லாமல் நடனம் ஆடுகிறார் என்றாலே அனைவருக்கும் முதலில் ஞாபகத்திற்கு வருவது மயூரி படம் தான், திரைப்பட உலகில் முதன் முறையாக டான்ஸர் படத்தில் முற்றிலும் வித்தியாசமாக செயற்கை கால் பொருத்தப் படாமல் ஒற்றைக்காலில் நடனமாடுகிறார். இப்படத்தின் நாயகன் குட்டி.

ஒரு மனிதனின் வெற்றிக்கு உள்ளந்தான் ஊனமாக இருக்க கூடாது. உடல் ஊனம் ஒரு தடையல்ல. தன்னம்பிக்கையும், விடாமுயற்சியும் இருந்தால் ஒருவரால் எந்த லட்சியத்தையும் அடைய முடியும் என்ற கருத்தை வலியுறுத்தும் வகையில் இரண்டு கதாநாயகர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து கதை அமைக்கப்பட்டிருக்கிறது. இசைக்கும், நடனத்திற்கும் முக்கியத்துவம் கொடுத்து எடுக்கப்படும் இப்படத்தில் இனிமையான 6 பாடல்கள் இடம் பெறுகின்றன. வித்தியாசமான சண்டைக் காட்சியும் படத்தில் இடம் பெற உள்ளது.

இப்படத்தில் அறிமுக நாயகன் குட்டி, மாறன் படத்தில் அறிமுகமான ராபர்ட், 5 ஸ்டார் படப்புகழ் நாயகி கனிகா, காக்கா ராதாகிருஷ்ணன், மணிவண்ணன், சின்னிஜெயந்த், இரண்டாவது கதாநாயகி தேர்வு நடைபெறுகிறது.

SONI நிறுவனத்தினரின் புதிய மொடல் லப்டொப் தனிப் பாவனைக் கணினியை ஊடகவியலாளர்களுக்கு மத்தியில் ஒரு மொடல் அழகி வைத்திருக்கின்றார். கார்பனை அடிப்படையாகக் கொண்ட மூலப் பொருட்களை வைத்து வடிவமைக்கப்பட்டிருக்கும் இப் புதிய மொடல் கணனியானது 785 கிராம் நிறையையும்,




மடிக்கும் போது 9.7 mm தடிப்பையும் கொண்டுள்ளது. தற்பொழுது சந்தையிலே உள்ள கணினி வகைகளிலே மிக மெல்லியதாகவும் காணப்படுகின்றது. நவம்பர் மாதத்தில் சந்தைக்கு வரும் VAIONOTE 505 ENTRENC PCG - X 505/SP என்றும் இப்புதியரக கணனியின் விலை 3,238 அமெரிக்க டொலர்கள் ஆகும்.

## வியப்பூட்டும் உண்மைகள்



கடந்த புதன் கிழமை வெலிலில் என்னும் பிரதேசத்தில் வயல் வெளியில் வீழ்ந்து நொறுங்கிய இரட்டை எஞ்சின் ஜெற் விமானத்தின் தோற்றமே இது. விமான நிலையத்திலிருந்து புறப்பட்ட சில நிமிடங்களிலேயே இயந்திரக் கோளாறுக்குட்பட்ட இவ் விமானம் விழுந்து நொறுங்கியதில் விமானி உட்பட நால்வர் காயமடைந்தனர்.

## வாசகர் இதயம்

என் அன்பிற்கினிய தமிழ் அலையே வணக்கம்

நீவாரா வாரம் என் கரம் வந்து கிடைப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன். மேலும் உன் ஒவ்வொரு இதழ்களிலும் வரும் ஒவ்வொரு அம்சங்களும் மிக மிக அருமையானவை. அவை மேலும் அறிவானதாகவும் அமைகிறது. இவை மேலும் மேலும் புதிய புதிய அம்சங்களுடன் வெளி வர வேண்டும் என்று நன்றி கூறி விடை பெறும் நான்.

அ.ரஞ்சி, கதிரவெளி

அக மகிழ்விற்கும் அன்புத் தமிழ் அலையே..... வளர்க வணக்கம்! தென்தமிழீழத்தின் தேன்சிட்டு சிறகு விரித்து -நீ சுமந்து வரும் அனைத்து விடையங்களும் மிக மிக நல்லவை. அவற்றில் கவிதைக் களம் வீர வரலாறு தெரிந்து கொள்வோம். அழியாச்செல்வம், சிறுவர் சிகரம் என பல விடயங்கள் எமை வளர்ச்சிப் படியில் கொண்டு வரும் அலையே! நீ தினமும் என் அன்புக் கரம் வருவதைக் கண்டு அளவற்ற மகிழ்ச்சியடைகிறேன். தென் தமிழ் அலையே உமக்கு கோடி வாழ்த்துக்கள். குவிக்கின்றோம். "நன்றி"

சி. ஜதா

தமிழ் அலையே

ஞாயிறு நிலவாக வந்து என் கரம் முத்தமிடும் தமிழ் அலையே! உனக்கு என் கோடி வந்தனங்கள். உன்னில் வரும் ஆக்கங்கள் வெரி சுப்பர். அதிலும், சிறுவர் சிகரம் சிந்தனையைத் தூண்டுகிறது. குறுக்கெழுத்துப் போட்டி சிந்தித்து மூளையைக் குழப்புகிறது. அளியாச் செல்வம் மூலம் அறிவை ஊட்டுகிறாய். சொன்னாலும் குற்றம் மூலம் இலை மறை காயாய் உள்ளவையெல்லாவற்றையும் வெளி யுலகத்திற்குக் காண்பிக்கிறாய். மொத்தத்தில் உன்னில் வரும் அத்தனை ஆக்கங்களும் அற்புதமானவை. உன் பணி வளர பாராட்டுகிறேன்.

வி. யசோ, மட்டக்களப்பு

என் அன்பிற்கினிய தமிழ் அலைக்கு

நீ வார இறுதி நாட்களில் தாங்கி வரும் அரசியல் களம், மட்டக்களப்பு கல்வி நடவடிக்கையில் எதிர்நோக்கும் பிரச்சினை, சிறுவர் சிகரம், குறுக்கெழுத்துப்போட்டி, என்பன எனை உன்னில் ஒரு அன்பினை ஏற்படுத்தியும் வாசகனாக்கி விட்டது. உன் புகழ் என்றென்றும் வளர வேண்டும். எம் ''தேமதுரத் தமிழோசை உலகெங்கும் கேட்டிட நீ உறுதுணை புரியும் தன்மை போற்றத் தக்கது."

கோ. இந்திரகுமாரி, புதுக்குடியிருப்பு

என் அன்பின் அபிமான அலைக்கு வணக்கம்.


எட்டுத் திக்கிலும் அலையாய் திகழ்ந்து வரும் தமிழலையே.... நீ வாரா வாரம் சுமந்து வரும் ஆக்கங்கள் அனைத்தும் அற்புதமானவை. அதிலும் ஐந்தாம் தர புலமைப்பரிசிலுக்குரிய வினா விடைகள் மாணவர்களுக்கு மிகவும் அறிவூட்டும் ஒரு அறிவலையாய் அமைந்திருக்கின்றது. அலையே நீ தொடர்ந்து வரும் தொடர் நாவல் இவ்வாரத்துடன் முடியும் என்பது கவலையாய் உள்ளது. எனினும் நீண்ட நாவல் ஒன்றை திரும்பவும் தொடர்வீர்கள் என்று மறு வார இதழை எதிர் பார்க்கிறேன். அலையே.....இன்னும் பல அறிவூட்டும் ஆக்கங்களை சுமந்து வரவேண்டுமென்பது என் அவாவாகும்.

எஸ். கல்பனா




# மனிதனாக மாறிய ஆடு

ஒரு சிறிய கிராமத்தில் ஒரு விவசாயி தன் ஆட்டைக் கயிற்றால் கட்டி இழுத்துக் கொண்டு வீட்டுக்குச் சென்று கொண்டிருந்தான். அந்த விவசாயி முட்டாள் என்பதை அறிந்த திருடன் அவன் பின்னாலேயே போய் ஆட்டைக் கயிற்றில் இருந்து விடுவித்து தன் நண்பனிடம் ஒப்படைத்து விட்டு அந்தக் கயிற்றை எடுத்து தன் கழுத்தில் கட்டிக் கொண்டு விவசாயிக்குப் பின்னால்



போய்க் கொண்டிருந்தான். சிறிது தூரம் சென்றதும் திருடன் நடக்காமல் நின்று விட்டான்.

முன்னால்சென்ற முட்டாள் விவசாயி ஆடு வரவில்லையே என்று கயிற்றை இழுத்த போது அந்தத் திருடன் வந்து நின்றான். ஆட்டுக்குப் பதில் ஒரு ஆள்வந்து நிற்பதைக் கண்ட விவசாயி "நீ யார்? என் ஆடு எங்கே?" என்றான். உடனே திருடன், "ஐயா நான்தான் உங்கள் ஆடு! ஒரு சாபத்தால் ஆடாக மாறிய நான் இப்போதுதான் மனிதனாக மாறி இருக்கிறேன்!" என்றான்.

"சாபமா? என்ன சாபம்?" என்றான் விவசாயி. அது ஒரு பெரிய கதை! நான் ஒரு குடிகாரன். நான் என் மனைவியை நாள் தோறும் அடித்துக் கொடுமைப் படுத்தி வந்தேன். கொடுமை தாங்காத என் மனைவி என்னைப் பார்த்து நீ ஆடாகப் போ என்று சாபமிட்டாள். நான் அப்போதே ஆடாக மாறி 'மே மே' என்று கத்தி புல் தரையில் மேய்ந்து கொண்டிருந்தேன். அப்போது ஒருவர் என்னை கல்லெடுத்து துரத்தினார். எனக்கோ நல்ல பசி. நான் மனிதனாக இருந்த போது மதுக் கடைக்குச் சென்று மது அருந்துவேன். எனக்குப் பழக்கமான மதுக்கடை முதலாளியைப் பார்த்து "மே மே" என்று கத்தி என் நிலைமையினைத் தெரிவிக்க முயன்றேன். "அடடே! ஆடு கூட மதுக் கடைக்கு வந்து மது கேட்கிறது பாருங்கடா!" என்று என்னைக் கிண்டல் செய்த அவர் ஒரு தடியை எடுத்து அடித்து விரட்டினார். நான் என் கதியை நினைத்து அழுது கொண்டு காட்டில் திரிந்தேன். அப்போது ஒருவன் என்னைப் பிடித்துக் கொண்டு போய் சந்தையில் நிறுத்தினான். அதன் பின் நீங்கள் வாங்கிக் கொண்டு வந்தீர்கள். சற்று நேரத்துக்கு முன்புதான் என் மனைவி எனக்காக ஆண்டவரிடம் வேண்டிக் கொண்டாள் போலும்! அதனால் நான் மீண்டும் மனிதனாகி விட்டேன் என்றான்.

ஆடாக இருந்த என்னை விலை கொடுத்து வாங்கி விட்டாய். இப்போது என்னை விடுவிப்பதும், விடுவிக்காததும் உன் கையில்தான் உள்ளது என்று கூறினான் திருடன். அதைக் கேட்ட விவசாயி ஐயோ பாவம். நான் உன்னை விடுவிக்கிறேன். "நீ உன் மனைவி மக்களிடம் போய்ச் சேர்ந்து கொள்" என்று கூறி அந்த திருடனின் கழுத்தில் கட்டியிருந்த கயிற்றை அவிழ்த்து விட்டான்.

## நமக்கு வேண்டிய உண்மைகள் மூன்று

* வளர்த்துக் கொள்ள வேண்டியவை. அஞ்ஞானம், உற்சாகம், திருப்தி
* காப்பாற்ற வேண்டியவை மூன்று. செல்வாக்கு, நட்பு, பற்று
* கவனிக்க வேண்டியவை மூன்று. பேச்சு, நடத்தை, செயல்
* மதிப்பளிக்க வேண்டியவை மூன்று முதுமை, மதம், சட்டம்
* விரும்ப வேண்டியவை மூன்று தூய்மை, நேர்மை, கடின உழைப்பு.

இ.இளம்பிறை.

## ஔவை வழியில்

01) அன்புடன் வருகுக்கும் உதவிடுவீா.
02) ஆசானை உயர்வு செய்திடுவீா.
03) இனிக்க இனிக்க பேசிடுவீா.
04) ஈகையில் உயர்ந்து சிறந்திடுவீா.
05) உடலால் உறுதி செய்திடுவீா.
06) ஊக்கம் கொண்டே உழைத்திடுவீா.
07) எளியோர் மகிழ உதவிடுவீா.
08) ஏணி போல் உயர முயன்றிடுவீா.
09) ஐயம் தெளிந்து கற்றிடுவீா.
10) ஒற்றுமை உணர்வை வளர்த்திடுவீா.
11) ஓடி ஆடிப் பழகிடுவீா.
12) ஔவை வழியில் நடந்திடுவீா.

இ.குகநாதன

## கண்டுபிடிப்புகள்

| | | |
|---|---|---|
| 01) குளிர் சாதனப் பெட்டி | ----- | ஜேம்ஸ் கரிசன் |
| 02) ரேடியம் | ----- | மேரி கியூரி |
| 03) டெலி போன் | ----- | அலெக்ஸ் சான்டர் கிரகம் பெல் |
| 04) மின்சாரம் | ----- | மைக்கல் பரடே |
| 05) குளோரோ போம் | ----- | டாக்டர். கே.வை சிம்சன் |
| 06) புகைப்படக் கருவி | ----- | எல். ராகுரே |
| 07) எக்ஸ் கதிர் | ----- | ஹோஞ்சன் |
| 08) விசர் நாய்க்கடி மருந்து | ----- | லூயி பாய்ச்சர் |
| 09) ஊற்றுப் பேனா | ----- | உவாற்மன் |
| 10) கம்பியூட்டர் | ----- | எம்.டூரிங் |
| 11) இலத்திரன் | ----- | ஜே.ஜே தொம்சன் |
| 12) மயக்க மருந்து | ----- | மார்ட்டன், சிம்சன் |
| 13) பாய்ச்சர் முறை | ----- | லூயி பாய்ச்சர் |
| 14) ரெலி விசன் | ----- | ஜோன் லொஜி பெயர்ட் |
| 15) மின் கலம் | ----- | அலெக்சாண்டா வோல்ற்றா |

சிவலிங்கேஸ்வரன் கிருத்திகன், ஆண்டு - 6B புனித மிக்கல் கல்லூரி மட்டக்களப்பு.

## நாமும் பாடுவோம்





அணிலே அணிலே ஓடி வா
அழகு அணிலே ஓடி வா
கொய்யா மரம் ஏறி வா
குண்டுப் பழம் கொண்டு வா
பாதிப் பழம் உன்னிடம்
பாதிப்பழம் என்னிடம்.
கூடிக் கூடி இருவரும்
கொறித்துக் கொறித்து உண்ணலாம்.

தி.ராமச்சந்திரன், தரம் - 01,
மட்/றோ.க.த.க.பாடசாலை, தாளங்குடா.

## திருந்த சில வழிகள்

- ஒருவரின் வாழ்க்கையில் நாம் காணும் தவறுகளை நமது வாழ்க்கையில் ஏற்படாதவாறு தவிர்த்துக் கொள்வது நமது வாழ்வுக்கு வலுச் சேர்க்கும்.
- ஒருவரின் நேர்மையான நடத்தையில்தான் அவரது எதிரிகள் கூட நண்பர்களாக மாறும் விதம் தங்கியுள்ளது.
- சுய நலம், பக்கச் சார்பு என்பன ஒருவரிடம் காணப்படுமாயின் அது அவரின் வாழ்க்கையில் எதிரிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்யும்.
- ஒருவரைப் பற்றி சந்தேகம் கொண்டால்அவரது நற்பண்புமிக்க நல்ல செயல்கள் கூட தீயவையாகத்தான் தெரியும்.
- நாம் நமது வாழ்வில் தேடிக் கொள்ளும் ஒரே பலம் நேர்மையான மனிதர்களின் உள்ளங்கள்தான்.
- சலுகைகளை எதிர் பார்த்து உரிமைகளை விட்டுக் கொடுக்காதீர்கள். சலுகைகளை எதிர் பார்த்து உரிமைகளை விட்டுக் கொடுத்தால் கடைசியில் மிஞ்சுவது அடிமைத்தனம்தான்.

த. மேகராஜா, கிழக்குப் பல்கலைக் கழகம்.

## பொது அறிவு

01) சாஸ் நோயைப் பரப்பும் நுண்ணங்கி
வைரஸ்
02) உலகிலே சிறிதும் ராணுவம் இல்லாத நாடு
கொஸ்ரேறிக்கா
03) கிரேக்க நாட்டு இலக்கியங்களில் வரும் பறவை
பீனிக்ஸ்
04) எரிந்த சாம்பலில் இருந்து உயிர்த்தெழுந்த பறவை
பீனிக்ஸ்
05) இலங்கையில் எழுத்தறிவுள்ளோர் வீதம்
90%
06) உலகில் மிக நீண்ட நதி
அமேசன் நதி
07) யப்பான் நாடு மீது வீசப்பட்ட அணுகுண்டின் பெயர்
ஙிற்றில்வோய்
08) இலங்கையில் உள்ள சுதந்திர வர்த்தக வலயங்கள்
கட்டு நாயக்கா, ஒக்கல, மியகம
09) இலங்கையின் பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையை ஆரம்பித்த வர்கள்
ஆங்கிலேயர்
10) இலங்கையில் அதிக அளவில் மாசடையும் நதி எது
களனி

செ.சத்திய தர்சினி, தரம் - 06
மட் கல்வடி விநாயகர் வித்தியாலயம்

## செயற் கருவிகள்



Binoculors- இரட்டைத் தொலைக்காட்டி தொலைத் தூரத்தைப் பார்க்க உதவுகின்றது.
Stethoscope - இதயத் துடிப்பளவி.
Telemeter - தொலை அளவி. வெகு தொலைவில் நடக்கும் நிகழ்ச்சிகளைப் பதிவு செய்யும் கருவி.
Telescope - தொலைக்காட்டி.
thermometr - வெப்ப நிலை அளவி.
Viscometer - பாகு நிலையளவி.

ச.ரமணன்
கல்லடி
மட்டக்களப்பு.

## விடுகதைகள்

01) தள்ளாடிப் போகும் ஆனால் தடம் மாறிப் போகாது அது என்ன?
02) பூத்த போது மஞ்சள், காய்த்த போது சிவப்பு, பழுத்த போது கறுப்பு அது என்ன?
03) வட்ட வட்டக் குயில்களாம் வாயில்லாக் குயில்களாம் சுற்றுகின்ற போதிலே சுகமான ராகமாம் அது என்ன?
04) எண்ணெய் இல்லை திரியும் இல்லை ஏற்றி வைக்க ஆளும் இல்லை ஆனாலும் வெளிச்சம் வரும் அது என்ன?
05)வளைந்து நெளிந்து போனாலும் வழியைச் சொல்லும் சரியாக அது என்ன?
06) பறந்து திரியும் அதன் படுக்கை மட்டும் தலை கீழ் இருக்கும் அது என்ன?
07) ஊரில் இருந்து வாங்கி வந்த மாட்டுக்கு உரிக்க உரிக்க தோல் அது என்ன?
08) எட்டி நின்று பார்ப்பான் பெட்டியுள் போட்டுக் கொள்வான் அவன் யார்?
09) உலகமெங்கும் படுக்கை விரித்தும் உறங்காமல் அலைகிறான் அவன் யார்?
10) உலகமெல்லாம் திரிவான் அவனை ஒருவரும் கண்டதில்லை அவன் யார்?

விடைகள்
01) ரயில் வண்டி. 02) பேரீச்சம் பழம். 03) இசைத்தட்டு. 04) சூரியன். 05) சாலை. 06) வெளவால். 07) வெங்காயம். 08) கேமரா(புகைப்பட கருவி). 09) கடல். 10) காற்று.

ந.டிலாணி

# 5ம் வகுப்பு புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றும் மாணவர்களுக்கான வினாக்களும் விடைகளும்

## புலமை துரித மீட்டல் 2003
## வினாத்தாள் 04
## பகுதி II

கீழே தபாலகம் ஒன்றில் இவ்வாறான அட்டைகள் தொங்க விடப் பட்டிருந்தன.

| | | |
|---|---|---|
| A உள் நாட்டுக் கடிதப் பகுதி<br>*.சாதாரண கடிதம்<br>*.தபால் அட்டை | வெளிநாட்டுக் கடிதப் பகுதி<br>B | |
| பதிவுத் தபால் பகுதி<br>C | தந்திப் பகுதி<br>D | காசுக் கட்டளை படிவப் பகுதி<br>E |

01. இவ்வாறான கடிதத்தை அனுப்புவதற்குச் செல்ல வேண்டிய பகுதி எது?

02. AIR MAIL இவ்வாறான கடிதத்தை அனுப்புவதற்குச் செல்ல வேண்டிய பகுதி எது?

03. 3.00 POSTCARD இவ்வாறான அட்டையை அனுப்புவதற்குச் செல்ல வேண்டிய பகுதி யாது?

04. REGISTERED POST இவ்வாறான கடிதத்தை அனுப்புவதற்குச் செல்ல வேண்டிய பகுதி யாது?

05. மிக விரைவாக தகவலை அனுப்புவதற்குச் செல்ல வேண்டிய பகுதி எது?

06. பணம் அனுப்புவதற்குச் செல்ல வேண்டிய பகுதி எது?

*. பின்வரும் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடை தருக?

காடும் வயலும் இந்நாளில்
கண்ட படிக்கு அழிவதுடன்
கூடும் குப்பை கூளங்களால்
குடிநீர் கெட்டும் வருகிறதாம்!
நல்ல காற்றைநமக்காக
நாளும் தருகிற நல் மரங்கள்
இல்லையென்று ஆவதனால்

எங்கும் பசுமை அழிகிறதாம்.

கோடிக் கணக்கில் சாலைகளில்
குதித்துப் பாயும் ஊர்திகளால்
ஓடிப் பரவும் நற்காற்று
உலகில் மாறி வருகிறதாம்!

சுற்றுச் சூழல் எப்பொழுதும்
தூய்மையாக ஆனால் தான்
குற்றம் குறைகள் இல்லாமல்
கூடி வாழ வழிசெய்யும்!

07. இப் பாடலின் மையக்கருத்து யாது?

08. இங்கு சூழல் மாசடைய எவை காரணம் என பாடலாசிரியர் குறிப்பிடுகிறார்?

09. இப் பாடலுடனும், சுத்தத்துடனும் சம்பந்தப்பட்ட ஒரு முது மொழி தருக?

10. ஐம் பூதங்களில் இரண்டு எவ்வாறு மாசடைகிறது என கூறப்பட்டுள்ளது. அந்த இரண்டும் எவை? அவை எவ்வாறு மாசடைகிறது எனக் கூறப்படுகிறது?

11. ஒத்த கருத்துச் சொற்கள் தருக?

1.காடு 4.நல்லகாற்று
2.வயல் 5.ஊர்தி
3.சாலைகளில் 6.தூய்மை

12. எதிர் கருத்துச் சொற்கள் தருக?
1.காடு
2.இயற்கை
3.தூய்மை

13. பின்வரும் இயல்பைக் கொண்ட பறவை எது?

*.நியூசிலாந்து நாட்டில் மட்டும் காணப்படும்.
*.ரோமங்கள் காணப்படும்.
*.பூனையைப் போல் கத்தும் நாயைப்போல் உறுமும்
*.மரத்தில் கூடு கட்டாது
*. பூமியைத் தோண்டி முட்டையிடும் அது எது?

14. பின்வரும் இயல்பைக் கொண்ட நாடு எது?
*. சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற கோட்பாடுகள் நிறைந்த நாடு
*. ஐரோப்பாக் கண்டத்தில் உள்ள நாடு
*. இதன் தலைநகர்- பாரிஸ்
*. நாணயம் -யூரோ
*. சனத்தொகை -57.9மில்லியன்
இந்த நாடு எது?

15. பாடசாலை ஒன்றிற்கு ஐந்து மாணவர்கள் வந்த நேர அட்டவணை கீழே காட்டப்படுகிறது?


| மாணவர்கள் | மணி | நிமிடம் | செக்கன் |
|---|---|---|---|
| A | 7.00 | :29 | :20 |
| B | 7.00 | :29 | :19 |
| C | 7.00 | :16 | :16 |
| D | 7.00 | :26 | :17 |
| E | 7.00 | :19 | :09 |

பாடசாலைக்கு 1ம், 2ம், 3ம், 4ம், 5ம் ஒழுங்கு முறையில் வந்தோர் முறையே தருக?

16. இரு எண்களின் கூட்டுத் தொகை 9 அவற்றின் வித்தியாசம்0.5 எனின் அவ் இரு எண்களும் எவை?

*. பின்வரும் வரபை அவதானித்து வினாக்களுக்கு விடை தருக?
ஒரு சந்தையில் ஒரு நாளில் விற்கப்பட்ட மரக்கறிகளின் விபரம் கீழே தரப்படுகிறது

01.கத்தரிக்காய்- A
02.வெண்டிக்காய்- B
03.கரட்- C
04.பீற்றுட்- D
05.புடோல்- E
06.போஞ்சிக்காய்- F




17. சந்தையில் விற்கப்பட்ட காய்வகைகளின் மொத்த நிறை என்ன?


18. சந்தையில் விற்கப்பட்ட கிழங்கு வகைகளின் மொத்த நிறை என்ன?

19. ஆகக் கூடுதலாக, ஆகக் குறைவாக விற்கப்பட்ட பொருட்கள் முறையே எவை?


20. இங்கு விற்கப்பட்ட மரக்கறிகளின் மொத்த நிறையாது?

21. இவ்வரைபு பற்றி நீர் குறிப்பிடும் கருத்துக்கள் தொடர்பாக இரண்டு வாக்கியம் தருக?


*.அட்டவணையைப் பயன்படுத்தி வினாக்களுக்கு விடை தருக.






இவற்றுக்குப் பெறுமானம் காண்க?





*. கீழ் வருவனவற்றிற்கு விடை தருக?

26.

1.இதன்பெயர்
2.முகம்
3.உச்சி
4.விளிம்பு

27.

1.இதன்பெயர்
2.முகம்
3.உச்சி
4.விளிம்பு

28.

1.இதன்பெயர்
2.முகம்
3.உச்சி
4.வளைந்த விளிம்பு


*.கீழே தரப்பட்ட படத்தை நன்கு அவதானியுங்கள்



29. இதன் பெயர் என்ன?

30. A,B,C,D எனக் குறிப்பிடப்பட்டுள்ள பாகங்கள் எவை?

*.கீழே தரப்படும் படத்தை நன்கு அவதானியுங்கள்




31. இதன் பெயர் என்ன?

32. பாகங்களைக் குறிப்பிடுக?

A- B-
C- D-
E- F-
G- H-

கீழே வித்துக்களின் வடிவங்களும் அதற்குரிய இயல்புகளும் எதிரே தரப்படுகின்றது. அவ் வித்துக்கள் மூலம் உருவாகும் தாவரங்கள் எவ்வாறு அழைக்கப்படும் என கீழே தொடர்புபடுத்துக?

வித்துக்கள் இயல்புகள்



33. A- பழத்திற்கு வெளியே காணப்படும் -இதன் ஒரு உற்பத்திப் பொருள் கஜு ஆகும்

34. B- நிலத்திற்குக் கீழே இது விளையும் -கச்சான் என அழைக்கப்படும்.

35. C- முட்கள் போன்ற அமைப்பை உடைய பழத்தினுள் இது காணப்படும் -மெல்லிய தோலை இது கொண்டது.

36. D- ஒரு பழத்தினுள் ஒரு விதை காணப்படும் -காயில் புளிக்கும் பழத்தில் இனிக்கும்

37. E ஒரு பழத்தினுள் அதிகமான சிறுவித்துகள் காணப்படும் -இதில் பெண் இனம் காய்க்கும் ஆண் இனம் பூத்து பூ உதிரும் தன்மை கொண்டது.

38. F- விதையைச் சுற்றி சிறு மயிர்கள் காணப்படும் -காற்றுமூலம் பரவும் தன்மை கொண்டது.

39. G- கொடிகள் மூலம் பரந்து காய்க்கும் -சிவப்பும் கறுப்பும் கலந்த விதை

40. H- இதன் பால் கறி சமைப்பதற்கு உதவும் -எண்ணெய் உற்பத்தி செய்யலாம்

33. A பருத்தி
34. B மா
35. C மரமுந்திரிகை
36. D போஞ்சி
37. E குன்டுமணி
38. F பலா
39. G பப்பாசி
40. H நிலக்கடலை

## விடைகள்

01. A 02. B
03. A 04. C
05. D 06. E
07. சூழலைப் பாதுகாத்தல் / சுற்றாடலைப் பாதுகாத்தல் சூழல் மாசடைதல்
08. குப்பை கூளங்களால், காடழிப்பால், ஊர்திகளால்
09. ''சுத்தம் சுகம் தரும்'' / ''நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்''
10. நீர்- கூடும் குப்பை கூளங்களால்
காற்று- ஊர்திகளினால்
11. 1.கானகம் 4.சுத்தமானவளி
2.கழனி 5.வாகனங்கள்
3.வீதிகளில் 6.பசுமை/சுத்தம்
12. 1.நாடு 2.செயற்கை 3.அசுத்தம்
13. கிவி 14. பிரான்ஸ்
15. C, D, B, A 16. 43/4, 41/4, / 4.75, 4.25
17. 60Kg 18. 46Kg
19. பீற்றுட், கரட் 20. 106Kg
21. 1.கத்தரிக்காயும், புடோலங்காயும் சம அளவில் விற்கப்படுகிறது
2.போஞ்சிக்காய் அன்றுவிற்கப்படவில்லை.
22. 5 23. 12
24. 17 25. 31
26. நான்முகி
1. 4 2. 4 3. 6
27. கூம்பகம்
1. 5 2. 5 3. 8
28. கூம்பு
1. 2. 3.
29. ஸ்பிறேயர் / சிறிவி
30. A- துவாரம் B- அழுத்தி
C- குழாய் D- நீர்
31. மின்மணி
32. A.பெல்மூடி B.சம்மட்டி
C.துளைஆணி D.மெல்லியதகடு
E.இரும்புத்துண்டு F.காவலிடப்பட்ட மின் கடத்தி/ செப்புக்கம்பி
G.மின்கலம் H.ஆளி
33. A பருத்தி
34. B மா
35. C மரமுந்திரிகை
36. D போஞ்சி
37. E குன்றிமணி
38. F பலா
39. G பப்பாசி
40. H நிலக்கடலை

தொடரும்...

ச.ஜெயாகரன்
பழுகாமம் விபு.வித்

வரலாற்றுச் சிறுகதை

# கோகர்ணம்



சோழப் பேரரசின் ராஜப் பிரதிநிதியாகவும், இலங்கை மன்னனாகவும் புலத்தி நகரில் மகுடம் புனைந்து கொண்ட சோழ இலங்கேஸ்வரன் கோணேசப் பெருமானை வழிபடுவதற்காகக் கோகர்ணத்திற்கு விஜயம் செய்கின்றான் என்றும், அச்சமயம் கந்தளாயில் வான்நோக்கி எழுந்துள்ள அவனது இரண்டாவது அரசமாளிகையில் இரண்டொரு திங்களைச் செலவழிப்பானென்றும், அறிந்திருந்த ராஜ ராஜ சதுர்வேதி மங்கலம் ஓர் அழகிய நர்த்தகி போலத் தன்னை அலங்கரித்துக் கொண்டு அரசனின் வருகைக்காக காத்து நின்றான்.

அருள்மொழி வர்மன் என்னும் முதலாம் ராஜராஜன் காலத்தில் இருந்து ஈழத்திருநாட்டின் பேரரசின் தலைநகராகப் புலத்தி நகரம் விளங்கினாலும் கோகர்ணத்தின் மீதே அதன் கவனம் முழுவதும் குவிந்திருந்தது.

இந்தியாவின் வடபாகத்தில் இருந்து விஜயன் என்னும் இளவரசன் தன் தோழர்கள் எழுநூறு பேரோடு இந்த மண்ணில் கால் வைக்கும் முன்பே திரிகூடகிரி, தெட்சண கைலாயமாகவே சிறப்புப் பெற்றிருந்தது. இந்தப் பெருமை காரணமாகவே இத்திருத்தலத்தை திருமூலர் சிவபூமி என்றும், பல்லவர் காலத்தில் தமது பக்திப் பாசுரங்களால் சைவமும் தமிழும் வளர்த்த ஞானசம்பந்தர் குரைகடலோதம் நித்திலம் கொளிக்கும் கோணமாமலை' என்றும் பாடிப் பரவியதை நன்கறிந்திருந்த சோழப் பெருமன்னர்கள் இந்தச் சிவபூமியை காத்துப் பேணுதல் தம் பெருங்கடன் என்றே கருதினர்.

கோகர்ணத்தில் தம் ஆதிக்கக் கொடி பட்டொளி வீசி உயரப் பறந்திட வேண்டுமென்பதில் சோழ மன்னர்கள் கண்ணுங் கருத்துமாய் இருந்தமைக்கு இன்னுமொரு முக்கிய காரணம் இருந்தது. அதுதான் அந்த அழ்குமிகு இயற்கைத் துறைமுகம்.

திரிகோணத்தில் எழுந்து நிற்கும் மலைகளுக்கிடையே திரண்டெழுந்து அலைகளின் மீது பாய் என்னும் சிறகு விரித்துப் பறந்து செல்லும் படகுப் பறவைகளைக் கண்டு மகிழல் சோழ மன்னர்களின் மாலைப்போதின் ஓர் இனிய அனுபவம்தான் எனினும் தமிழகத்துச் சோழ மண்டலக் கடற்கரைக்கு நேர்கிழக்கே உள்ள சீயம் சுமத்திரா, புட்பகம் முதலான தூரகிழக்கு நாடுகளோடு தாம் கொண்டுள்ள வாணிப கலாசாரத் தொடர்புகளுக்காக இந்த இயற்கைத் துறைமுகத்தைத் தமது நேரடிக் கண்காணிப்பின் கீழ் வைத்திருத்தல் அவசியம் என்பதை அந்த மன்னர்கள் தெளிவாகவே உணர்ந்திருந்தனர்.

சோழ சாம்ராச்சியத்தின் ஓர் மண்டலமாக ஈழம் முழுவதும் நிலைத்திருப்பதற்கும், தமது கடல் வாணிபத்தை விஸ்தரிப்பதற்கும் கோகர்ணத்தில் தமது புலிக்கொடி இடையறாது பறந்து கொண்டிருக்க வேண்டுமென்பதில் குறியாக இருந்த ராஜராஜனும், அவனது மைந்தன் கங்கை கொண்ட இராஜேந்திர சோழனும் கோகர்ணத்தின் கந்தளாய், பதவியா ஆகிய ஊர்களில் சதுர்வேதி மங்கலங்களை அமைத்து அவற்றில் தமிழகத்துப் பிராமணர்களை பெரும் எண்ணிக்கையில் குடியமர்த்தியதோடு வேளைக்காரர் அகம்படியார், என்னும் மறவர் படையையும் அங்கு நிறுத்தி வைத்தனர்.

பிராமணர்கள் நிறைந்த அந்தப் பிரம்மதேயம் நானாதேசி வணிகப் பெருமக்களைக் கொண்ட ஒரு பெரும் நகரமாகவே உருவெடுத்தது. பெருங் குறிப் பெருமக்கள் என்னும் பொதுச்சபையினால் நிர்வகிக்கப்பட்ட பிரம்மதேயத்தின் அங்காடிகளில் பொன்னும், பொருளும் சீனப்பட்டும் நிறைந்து வழிந்தன.

எழில் மிகுந்த இந்தப் பட்டினத்தில்தான் சோழ இலங்கேஸ்வரத் தேவன் தனது இரண்டாவது வானுயர்ந்த அரண்மனையை எழுப்பியிருந்தான். பொன்னும் மணியும் பதித்து. பூலோகத்தின் சௌந்தரியமாகவே காட்சி அளித்த அந்த அரசமாளிகையின் நந்தவனத்தில் இருந்து எழுந்த சுகந்தம் கோகர்ணம் முழுவதையுமே சொர்க்க புரியாக்கிக் கொண்டிருந்தது.

புலத்தி நகரிலிருந்து புறப்பட்ட ராஜரதம் இந்த அரண்மனையின் கோபுர வாயிலை அணுகியபோது ஒரு பெரும் மக்கள் கடல், அரசனையும் அரசியையும் சூழ்ந்து கொள்கின்றது. கந்தளாய் பெரும் குறிப் பெருமக்கள் சபையினரால் ஆத்திமாலை அணிந்து வரவேற்கப்பட்ட சோழனும் அவனது பட்டத்துராணியும் தாரை, தப்பட்டை முழங்க அரண்மனையின் உள்ளே அழைத்துச் செல்லப்படுகின்றனர். வாழ்த்து முழக்கம் வானைத் தொடுகிறது.

அன்றிரவு, அரசனின் வருகையின் நிமித்தம் ராஜராஜன் பேரில் கந்தளாயில் எழுந்து நிற்கும் சிவன் கோயில் விழாக்கோலம் பூணுகின்றது. தேவதாசிகள் என்னும் நடனமாதரின் கலைவிருந்தினைத் தனது பட்ட மகிஷியுடன் கண்டு களித்த சோழ மன்னன் அந்தக் கலையரசிகளுக்குப் பொன் மாலைகளைப் பரிசில்களாக வழங்கிப் புளகிதமடைகிறான்.

அடுத்த நாள், ஒரு வித எதிர்பார்ப்போடு கோகர்ணத்தின் காலைப் பொழுது புலர்கின்றது. இதனைப் புரிந்து கொண்டதாலோ என்னவோ பறவைகள் தம் இனிய குரலில் பூபாளம் இசைக்கின்றன. கடல் அலைகள் அதற்கேற்ப தாளம் போடுகின்றன. பூக்கள் என்னும் நகை ஏந்தி நிற்கும் புன்னை, வேங்கை, செண்பக விருட்சங்கள் அந்த அலங்காரஅணிகளை அடியார்கள் ஊடாகக் கோணேசப் பெருமானின் திருவடிகளில் படைக்க ஆயத்தமாகின்றன.

சுகமான இந்தச் சூழலில் கோணேசப் பெருமானின் சந்நிதியில் ஒரு புறம் புரோகிதர்களின் மந்திர ஒலியும், மறுபுறம் மங்கள வாத்தியங்கள் எழுப்பும் இன்னிசை நாதமும் இரண்டறக் கலந்து அந்தச் சந்நிதானம் முழுவதும் ஒருவித பக்திப் பரவசத்தை ஏற்படுத்தி விடுகின்றது.

இந்தப் பக்திப் பரவசத்தினால் முழுமையாக ஈர்க்கப்பட்ட இலங்கை மன்னன் சோழ இலங்கேஸ்வரன் ஓர் சிவன் அடியாராகவே எம் பெருமான் முன் நின்று கொண்டிருக்கிறான். கண்கள் பனிக்க, கைகள் குவிய தனது பட்டத்துராணி சகிதம் அந்தத் திருச்சபை முன் நிற்கும் அவன் வாயிலிருந்து வரும் தேவாரத்தமிழ் பக்தர்களின் காதுகளில் தேனாகப் பாய்கின்றது. சமய குரவர்கள் நால்வரினதும் பிரசன்னம் எம்பெருமான் சந்திதானத்தில் நன்றாகவே உணரப்படுகின்றது.

சிவ வழிபாட்டை நிறைவு செய்து கொண்டு தனது அரண்மனைக்குத் திரும்பிய இலங்கேஸ்வரன் கோகர்ணம் பற்றிய சிந்தனையிலேயே மூழ்கி விடுகின்றான். கோணேசர் ஆலயத்தில் மட்டுமன்றி கந்தளாய், பதவியா ஆகிய ஊர்களில் உள்ள சிவாலயங்களிலும் திருப்பணிகள் மேற் கொள்ள வேண்டும். அத்தோடு கந்தளாய் குளத்தையும், வாசுதேவ, விக்கிரம சோழ வாய்க்கால்களையும் திருத்தி அமைத்து கோகர்ணம் முழுவதையுமே காவிரி சூழ் கழனி நாடாக்க வேண்டுமென்று திட்டமிட்டு அதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளை அவன் மேற் கொண்டிருந்தாலும் கோகர்ணம் பற்றிய அவனது ஆழ்ந்த கவலைக்கு வேறு ஒரு பலமான காரணம் இருக்கவே செய்தது.

சோழர் ஆட்சிக் கெதிராக முதலாம் விஜயபாகு நடத்திக் கொண்டிருக்கும் நாடு தழுவிய கிளர்ச்சியும் தமிழகத்துச் சோழ சாம்ராச்சியத்தில் முதலாம் குலோத்துங்க மன்னன் எதிர் நோக்கும் அரசியல் நெருக்கடிகளும் ஒன்றாக இணைந்து ஈழத்தில் சோழர் ஆட்சிக்கு ஒரு முடிவு கட்டும் சூழ்நிலையை ஏற்படுத்துமேயானால் கோகர்ணத்தின் எதிர் காலம் பயங்கரமாகவே இருக்கும் என்று இலங்கேஸ்வரன் எண்ணியபோது அவன் உண்மையிலேயே உணர்ச்சிவசப்பட்டான்.

பல்லாண்டுகளுக்கு முன்பு கோகர்ணத்தின் 'மணிபுரேஸ்வரம்' என்ற சிவாலயத்தை முற்றாக அழித்தொழித்துவிட்டு அந்த இடத்தில் பௌத்த .விகாரையை அமைத்த மகாசேனர்கள் மீண்டும் இங்கு தோன்றமாட்டார்கள். என்பது என்ன நிச்சயம்? என்று தன்னையே கேட்டுக் கொண்ட இலங்கேஸ்வரன் கோகர்ணத்தை வேற்று இனத்தவரிடமிருந்து பாதுகாக்க வேண்டுமானால் வடக்கே கந்தளாயிலிருந்து தெற்கே வெருகல் வரை தமிழ் நாட்டின் . தமிழ்ப் பெருமக்களை அழைத்து வந்து குடியிருத்துவதே சரியான தீர்வாக இருக்குமென்று அவன் திடமாக எண்ணினான்.

இந்த எண்ணம் உடனடியாகவே செயல் வடிவம் பெற வேண்டுமென்று அவன் ஆணை பிறப்பித்த அச்சணமே கோகர்ணம் முழுவதும் தமிழரும், அவர் நாவில் தமிழும் நடமாடக் கண்ட ஈழமன்னன் சோழ இலங்கேஸ்வரன் எதிர் காலத்தில் எத்தகைய சூழ்நிலையிலும் ஈழ தேசம் எழுந்து நிற்கும், கோகர்ணத்தில் தமிழ்க் கொடி பறக்கும் என்று பரிபூரணமாக நம்பினான்.

அரசனின் இந்த நம்பிக்கையை உறுதிப்படுத்துவது போல கோணேஸ்வரர் ஆலயத்திலிருந்து எழுந்த அந்த இனிய மணி ஓசை இரண்டறக் கலந்து எங்கும் பரந்தது.

- வாகரைவாணன் -

## விறுவிறுப்பான தொடர் நாவல்

# 22 என் கணவன் எனக்கு மட்டும் தான்

பூங்கோதையையும், சுகுமாரையும் மீண்டும் இணைத்து வைத்தது சுதனுக்கு வெடிப்பட்ட சம்பவம்தான் என்றாலும், அவர்கள் பிரிந்திருந்த அந்தக்கால இடைவெளிக்குள் இருவருமே வாழ்க்கையின் தார்ப்பரியங்களை நன்கு அறிந்து கொண்டார்கள். ஆனாலும் பூங்கோதை கணவன் சுகுமாரோடு பேசிச் சிரிக்கக் கொஞ்சம் காலம் பிடித்தது.

மருமகன் மாமி போல வாழ்ந்தவர்கள் பழையபடி கணவன் மனைவியாகி உள்ளம், உடலெல்லாம் பூரிக்கச் சேர்த்து வைத்தவன் அவர்கள் பேரன்தான்.

மூத்தமகன் முரளி அப்பாவாக,



சுகுமார் தாத்தாவாகி விட்டான்.

காலம் நீண்டு கொண்டே போனது.

சுதன் பூரண சுகமடைந்து மீண்டும் அவன் பார்த்த அதே தொழிலில் இணைந்து கொண்டான்.

இந்திரா பல்கலைக் கழகத்திற்குப் போய்வந்து கொண்டிருந்தாள்.

நடந்து முடிந்த கசப்பான சம்பவங்களையெல்லாம் மறந்து பூங்கோதை பிள்ளைகளுக்கும், கணவனுக்கும் பணிவிடைகள் செய்வதில் மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருந்தாள்.

அன்று ஒரு சனிக்கிழமை

பேரன் பிறந்து முப்பத்தியோராம் நாள்.

முரளி ஏற்கனவே வந்து அதுபற்றிச் சொல்லிவிட்டுப் போயிருந்தான்.

மொட்டையடித்து, காதுகுத்தி மருங்கை செய்வதற்கான ஏற்பாடுகள் அங்கே நடைபெற்றுக் கொண்டிருந்தன.

சுதன், தனக்கு ''நேரமில்லை'' என்று தொழிலுக்குப். போய்விட்டான்.

இந்திராவும் தனக்கு ஏதோ முக்கியபாடம் இருப்பதாகச் சொல்லிவிட்டு யூனிவசிற்றிக்குப் போய்விட்டாள்.

காலையிலேயே சுகுமாரும், பூங்கோதையும் பேரனின் மருங்கைக்குப் போக ஆயத்தமானார்கள்.

பேரனுக்காக வாங்கி வைத்திருந்த அழகான பென்ரனோடு கூடிய தங்கச் சங்கிலியைப் பத்திரமாகப் பூங்கோதை எடுத்து வைத்துக் கொண்டாள்.

இருவரும் பஸ்பிடித்து முரளி வீட்டிற்குப் போய்ச் சேர பத்து மணிக்கும் மேலாகிவிட்டது.

மருமகள், கோமதியின் தாய், தந்தை, சகோதரர்கள், அவர்களது நெருங்கிய உறவினர்கள் எல்லோரும் அங்கே குழுமியிருந்தார்கள்.

சுகுமாரையும், பூங்கோதையையும் கண்டதும் எல்லோரும் அவர்களை அன்போடு வரவேற்றார்கள்.

கோமதி மாமி பூங்கோதையைக் கூட்டிச் சென்று உடுப்பை மாற்றுமாறு சொல்லி, இருவருக்கும் மாற்றிக் கட்ட உடுப்புக்க்ளைக் கொடுத்தாள்.

''மூக்குமுழி எல்லாமே அச்சொட்டாக அவங்கட அப்பப்பாவப் போலதான்'' என்று கோமதியின் தாய் பேரனைத் தூக்கி வைத்துச் செல்லம் பொழிந்தாள்.

கோவிலடியில் வைத்து தலைமழிக்க எல்லா ஏற்பாடுகளையும் செய்து விட்டு முரளி ஓட்டோவைப் பிடித்துக் கொண்டு வந்தான்.

அப்போதுதான் தந்தையும், தாயும் அங்கே வந்திருந்தது அவனுக்குத் தெரிந்தது.

''அம்மா கெதிபண்ணிவாங்க!'' என்று பூங்கோதையையும், மனைவி, மாமி ஆகியோரையும் ஓட்டோவில் ஏறச் செய்தான்.

பூப்போல கோமதி மகனை மடியில் வைத்துக் கொண்டிருக்க ஓட்டோ பறந்தது.

எவரையும் நிமிர்ந்து பார்க்காமல் சைக்கிளை எடுத்துக் கொண்டு முரளியும் ஓட்டோவின் பின்னால் சென்றான்.

சமயல் வேலையில் மற்றவர்கள் ஈடுபட்டுக் கொண்டிருக்க கோமதியின் தந்தையும், சுகுமாரும் பேசிக் கொண்டிருந்தார்கள்.

கோமதியின் தந்தை கொஞ்சம் போல சாராயம் குடித்து சிவக்கச் சிவக்க வெற்றிலை போட்டிருந்தார்.

சுகுமாருக்கும் கொஞ்சம் போலாவது குடிக்கவேண்டும் போல தோன்றியது. பெரும் பாடு பட்டு அடக்கிக் கொண்டான்.

''மச்சான், இண்டைக்கு மட்டுமாவது கொஞ்சம் போல எடுங்கவன்!'' என்று அவர் முதன் முறையாக 'மச்சான்' முறைபோட்டு, சாராயபோத்தலையும், கிளாசையும் தூக்கி சுகுமாருக்கு முன்பாக வைத்தார்.

''வேணாம். இவ்வளவு காலமும் நான் குடிச்சதே என்ர வாழ்க்கை பூராவுக்கும் போதும்! இனி நான் அதத்தொடவே மாட்டன். வேணுமென்றால் ஒரு வாய்க்கு வெற்றிலை போடுறன்! அந்த வெத்தில வட்டாவத்தாங்க!'' என்றான் சுகுமார்.

''குடிய நித்தாட்டி வாழ்க்கையில திருந்தின முதல் ஆள் மச்சான் தான். நானும் உடோணுமெண்டுதான் நினைக்கிறனான். முடியுதில்ல!'' என்று அவர் வாய்க்குள்ளிருந்த வெற்றிலைச் சக்கையைத் துப்பி எறிந்துவிட்டு சாராயத்தில் ஒரு சொட்டை ஊற்றிக் குடித்த கையோடு போத்தலையும், கிளாசையும் கொண்டு போய் வீட்டிற்குள் பத்திரமாக வைத்து விட்டு வெளியே வந்தார்.

அவருக்குக் கணக்கான 'கிளிப் பருவம்'

''மச்சான், இருந்து கொள்ளுங்க நான் கோழிய உரிச்சி வெட்டிக் குடுத்துப் போட்டு வாறன்!'' என்றபடி எழுந்தார்.

ஆயிற்று.

அன்று மத்தியானம் வெகு தடபுடலாக மருங்கைச் சாப்பாடு சாப்பிட்டு கலகலப்பாக எல்லோரும் தொட்டிலில் தூங்கும் பையனையே பார்த்து பலதும் பத்தும் பேசிக் கொண்டிருக்கும் போதே பையன் தூக்கம் கலைந்து, அழ ஆரம்பித்தான்.

பூங்கோதை பேரனை அப்படியே அள்ளித் தூக்கி மடியில்வைத்து, ஓ....ரோர்ரோ....! பாடி அழுகையை நிறுத்தி, கையில் வைத்திருந்த 'கழுத்துச் செயினைப் பேரனின் கழுத்தில் போட்டு, அழகு பார்த்து, கன்னங்களில் மாறிமாறி முத்தம் கொடுத்து, அப்படியே கோமதியிடம் தூக்கிக் கொடுத்துவிட்டு, எழுந்தவள், சுகுமாரைப் பார்த்தாள்.

அவனும் அவளைப் பார்த்தான். இருவரும் பார்வையால் ஏதேதோ பேசிக் கொண்டார்கள்.

''பிள்ள, நாங்க வரப்போறம்!'' என்றாள்.

''என்ன மாமி, ஊரார் புறத்தியாரப்போல போப்புறமெண்டு நிக்கிறீங்க?'' என்றாள் மருமகள்.

''வீட்டில இந்திராவும், சுதனும் தனிய இருக்குங்கள். நாளைக்கு அவருக்கும் கந்தோரில ஒரு முக்கியமான வேலயிருக்கு. பிறகு ஒரு நாளைக்கு எல்லாரையும் கூட்டிவந்து ஆறுதலாக நிண்டு போறம்!'' என்று பூங்கோதை சொன்னபிறகு எவரும் எதுவும் பேசவில்லை.

சுகுமாரும், பூங்கோதையும், இங்கே வந்தபோது நிறையப்பேர் இருந்தார்கள். இப்போது முரளியும், கோமதியும், அவள் தாயும் மாத்திரமே நின்று அவர்களை வழியனுப்பிவைத்தார்கள்.

வாழ்க்கையின் அர்த்தங்களை இப்படியான சின்னச் சின்ன விழாக்கள் கூட புரியவைக்கத்தானே செய்கின்றன.

(முற்றும்.)

## நாவலாசிரியர் இவர் தான்



மட்டக்களப்பு அமிர்தகழியைச் சேர்ந்த செ. குணரத்தினம் கவிதை, சிறுகதை, நாவல், மெல்லிசைப்பாடல்கள், நகைச்சுவைக் கட்டுரைகள், வானொலி நாடாகங்கள், உரைச் சித்திரங்கள், என்று நிறையவே எழுதியுள்ளார்.

இதுவரை உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் தனது இலக்கிய ஆக்கங்களுக்காகப் பெற்ற பரிசுகள் நூறையும் தாண்டி விட்டன. 'அமிர்தகழியான்' 'குணாளன்' 'மிதுனன்' இவரது புனைப் பெயர்களாகும். இவரது பத்து நூல்கள் வெளிவந்திருக்கின்றன.

இவர் எழுதிய நாவல்கள் வீரகேசரி, தினகரன், தொண்டன், சுபமங்களா (இந்தியா) போன்ற பத்திரிகைகளில் தொடராக வெளிவந்திருக்கின்றன.

''என் கணவன் எனக்கு மட்டும் தான்'' நாவல் தமிழ் அலைக்காக எழுதப்பட்டது.

வானொலி, ரூபவாஹினி, தனி மேடைகளிலும் இதுவரை ஐம்பதிற்கும் மேற்பட்ட கவியரங்குகளில் தலைமை தாங்கியும்'
பங்கு பற்றியும் உள்ளார். இலங்கை இந்தியக் கூட்டுத் தயாரிப்பான 'பாதை மாறிய பருவங்கள்' என்ற தமிழ்ப் படத்திற்கும் இவர் பாடல்கள் எழுதியுள்ளார்.

'தமிழ்மணி' 'இலக்கியமணி' 'கவிமணி' 'இலக்கியவேந்தனார்' போன்ற பட்டங்களுக்குச் சொந்தக்காரர் வட கிழக்கு மாகாண ஆளுநர் விருதும் பெற்றவர்.

வாழைச்சேனை காகித ஆலையில் எழுதுவினைஞராகக் கடமை பார்த்து ஓய்வு பெற்ற இவர் 'தினக்கதிர்' பத்திரிகையின் முந்நாள் உதவியாசிரியரும, தமிழ் அலையின் இந்நாள் உதவி ஆசிரியருமாவார்.

*(பா.அரியநேத்திரன்)*
முகாமைத்துவப்பணிப்பாளர்

### கண்டு பிடித்து பரிசு பெறும் அதிஷ்டசாலிகள்

1- திருமதி கு.சுகந்தா, புனித சிசிலியா பெண்கள் தேசியப் பாடசாலை, மட்டக்களப்பு.
2- செல்வி ஜெ.தயானி, விமலாவாசா றோட், கொம்மாதுறை செங்கலடி.
3- எஸ்.எம்.-அமிர்தன்(ஆசிரியர்), மட்/குருமண்வெளி சி.ச.ம-வித்தியாலயம், களுவாஞ்சிகுடி
4- செல்வி ந.வித்தியார்த்தனா, மட்/கன்னன்குடா ம.வித்தியாலயம், கன்னன்குடா.

பரிசுக்கான நூல்கள் வெகு விரைவில் அனுப்பி வைக்கப்படும்.

நாவல்- **ஆடித்தீ!**

எழுதுபவர் - ஓ.கே.குணநாதன்

**இது நமது கதை நாம் பட்ட துயரக்கதை**

அடுத்த வாரம் வரை பொறுத்திருங்கள்.

# வியப்பூட்டும் "பெர்முடா" மர்மக் கடல்

இன்றைய நவீன உலகிலே விஞ்ஞானமானது எல்லாத் துறைகளிலும் அதனது கண்டு பிடிப்புக்களையும், சிறந்த கோட்பாடுகளினையும் எந்த ஒரு சம்பவம் நடந்தாலும் அச் சம்பவத்தினது ஆணி வேரினையும் கண்டு பிடித்து மெய்ப்பிற்கும் அளவிற்கு விஞ்ஞானத்தின் பரிணாம வளர்ச்சி வானளாவ உயர்ந்து நிற்கிறது. இருந்தும் இவ் விஞ்ஞான தேடலிற்கும் இவ் விஞ்ஞானிகளி னையே அதிர்ச்சிக்கும் வியப்புக்கும் உண்டாக்கவல்ல பல சம்பவங்களும் இப் புவியிலே நடந்தேறிய வண்ணமும் உள்ளன. இவற்றில் குறிப்பாகப் பறக்கும் தட்டு அதிசயம், கருந்துளை அதிசயம், மர்மக் கடல் போன்றவற்றினைக் குறிப்பிடலாம்.

இவற்றில் இன்று விஞ்ஞானிகளாலும் உலக மக்களாலும் பெரிதும் பேசப்படும் விடயம் மர்மக் கடல். இம் மர்மக் கடற் பகுதியானது உலகிலே இரண்டு இடங்களில் உள்ளது.

1. பெர்முடா முக்கோணப் பகுதி
2. டிராகான் முக்கோணப் பகுதி

இங்கு பெர்முடா முக்கோணப் பகுதியானது அட்லாண்டிக் சமுத்திரத்தில் உள்ள தென் அமெரிக்காவிற்குச் சற்று அண்மித்து உள்ளது. இப் பெர்முடாவில் சுமார் 360 தீவுக் கூட்டம் உள்ளது.(இத் தீவுக் கூட்டத்தில் 20 தீவில் மனிதர்கள் வாழ்கின்றார்கள்.) இதில் பெர்முடா தீவிற்கும் புயூர்டோ ரிகோ என்ற இரண்டு தீவிற்கும் இடையே ஃப்ளோரிடா தீவோடு மானசீகமாக இணைந்தால் ஒரு முக்கோண அமைப்பு உருவாகும். இம் முக்கோண அமைப்பில் உருவான பிரதேசமே பெர்முடா முக்கோணப் பகுதியாகும். அடுத்து ஜப்பானிற்கு கீழ் உள்ள கடற் பகுதியே டிராகான் மர்மக் கடல் பிரதேசமாகும். இவ்விரண்டு பகுதியிலும் தான் இந்த விமானங்கள், கப்பல்கள், பறவைகள் காணாமல் போகின்ற வியப்பூட்டும் அதிசயம் நிகழும் இடங்களாகும்.

இவ் இரண்டு மர்மக் கடல் பிரதேசங்களிலும் 1945ம் ஆண்டு முதல் 1987 ம் ஆண்டு வரை சுமார் 41க்கு மேற்பட்ட விமானங்களும் கப்பல்களும் காணாமல் போயுள்ளதாகத் தரவுகள் கூறுகின்றன.

இதில் பெர்முடா முக்கோணப் பகுதியில்முதல் முதலாக 2ம்உலகப் போரின் போது 1945ம் ஆண்டு 12ம் மாதம் 05ம் திகதி அமெரிக்காவிற்குச் சொந்தமான ஐந்து போர் விமானங்கள் காணாமல் போனது எல்லோருக்கும் அதிசயத்தினையும் வியப்பினையும் ஏற்படுத்தியது. மற்றும் இவ் விமானம் காணாமல் போனதைத் தொடர்ந்து பல பயணிகள் கப்பலும், சரக்குக் கப்பலும் காணாமல் போன சம்பவமும் தொடர்ந்தன.இதன் பின்னே பெர்முடா பகுதி ஆபத்தான பகுதியாகப் பிரகடனப்படுத்தப்பட்டது.

இதே போன்றே 1957 -03-12ம் திகதி அமெரிக்க படைக்குச் சொந்தமான KB 50 ரக விமானமும் மற்றும் 1957- 03 -22 திகதி அதே நாட்டு விமானமான C -97 ரக விமானமும், இப் பெர்முடா கடற் பகுதியில் வைத்துக் காணாமல் போனது. ஆனால் அதனுடைய ஒரு தரவேனும் இன்று வரை கிடைக்காமல் மர்மமாயின.

தொடந்தும் இம் மர்ம வேலைகளின் அத்தியாயம் 1974ல் சோவியற் ரஷ்யாவிற்குச் சொந்தமான கோல்ஃப் II எனும் இரண்டு இலட்சம் டன் எண்ணெய்களோடு வந்த கப்பலும் 1945ம் ஆண்டு 190 டன் மீன்களோடு சென்று கொண்டிருந்த கப்பலும் திடீரென மாயமாக கிழக்கு ஜப்பான் கடலான டிராகான் கடற்பரப்பில் வைத்துக் காணாமல் போனதைத் தொடர்ந்து இப்பகுதியும் "அபாயப் பகுதி" என அறிவிக்கப் பட்டது.

இதே போன்றே 1980ம்ஆண்டு செப்டெம்பர் மாதம் ஒரு லட்சத்து அறுபத்தொன்பது டன் எடை கொண்ட "டெர்பி சைரி" எனும் லண்டன் கப்பலும் அதற்கு முன்னர் இரண்டு லட்சத்து முப்பதாயிரம் டன் எடை கொண்ட லிபேரியா நாட்டுக் கப்பல் ஒன்றும் காணாமல் போயுள்ளன. இவை இரண்டும் காணாமல் போனது இவ் பெர்முடா முக்கோணப் பகுதியில் வைத்து காணாமல் போயின.

**ராஜன்**

மற்றும் 1989 வாக்கில் ஏராளமான அணுகுண்டுகளினைச் சுமந்து கொண்டு சென்ற சோவியற் ரஷ்யாவில் கப்பல் ஒன்றும் மேலும் 13 ஆயிரம் டன் காந்தங்களோடு சென்ற லியோரிய கப்பல் ஒன்றும், 25 ஆயிரம் டன் ஆயுதங்களோடு காணாமல் போன கிரேக்க கப்பலும் இக் கிழக்கு ஜப்பான் கடலான டிராகான் கடற்பரப்பில் வைத்தே காணாமல் போயுள்ளன.

இவ்வாறாக ஏன் இப் பெர்முடா முக்கோணப் பகுதியிலும் டிராகான் கடற்பகுதியிலும் வைத்து கப்பல்களும் விமானங்களும் ஏன் காணாமல் போனது என்பது பற்றிய ஆய்வுகளின்பின். பல காரணங்கள் விஞ்ஞானிகளால் முன்வைக்கப் பட்டன. இவற்றுள்

01. இவ் இரண்டு பகுதியுமே இமய மலையினைக் கூட மூழ் கடிக்கும் அழவிற்கு மிகக் கூடிய ஆழத்தினைக் கொண்டுள்ளது. இக் கடற் பகுதியின் ஆழம் (36, 198அடி) இமய மலையின் ஆழம் 29, 208 அடியாகும்.

02. இரண்டு பகுதியுமே பூமியின் காந்த விசைக் கோடுகள் விசயத்தில் குறிப்பிடத்தக்க மாற்றத்தைக் காட்டுகின்றது. அதாவது வட தெற்கு புவியியல் துருவமும், வட தெற்கு காந்தத் துருவமும் ஒன்றுக்கொன்று ஒத்துப் போவதில்லை. திசைக் குழப்பம் ஏற்படுவதற்கு இதுவே பிரதான காரணமாகும்.

03. பெர்முடா, டிராகான், மர்ம கடல் பகுதிகள் இரண்டுமே பூமியின் நேர் எதிர் கோட்டு பகுதிகளில் அமைந்துள்ளது.மற்றும் இவை இரண்டும் கிழக்கு மேற்காக 20 பாகை நெட்டாங்கு தீர்க்க கோடுகளிலும் வடக்குத் தெற்கு அகலாங்கு 60 பாகை, 120 பாகை கோடுகளிலும் தொட்டுக் கொண்டும் இருக்கிறது.



04. இவ் இரண்டு பகுதி கடல்களுமே குளிர் கடலும் வெப்பக் கடலும் சங்கமிக்கும் பகுதிகளாகக் காணப்படுகிறது. இதனால் அங்கு மின்னோட்டம் ஏற்படும். சூடான நீருக்கு வட திசையும், குளிர் நீருக்கு தென் திசையும் மூலமாக இருப்பதனால் வட தென் துருவ விசையின் மீது இம் மின் விசையின் செயற்பாடு குறிப்பிடத்தக்க அளவில் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. அதாவது இந்த இடத்தில் காந்த விசை அதிகமாக இருக்கும். எவ்வளவு கனமான பொருளையும் இலகுவாக ஈர்ந்தெடுக்கும் வல்லமை இவ் இடத்திற்கு இருக்கும். இவ்வாறான காரணங்களினால் தான் இன்றும் கூட விமானம், கப்பல், பறவைகள் காணாமல் போகும் நிகழ்வுகளும் திசைமாறும் சம்பவங்களும் நடந்தேறிய வண்ணம் உள்ளன.

மேலும் இப் பிரதேசத்திற்குப் போய் மீண்டு தப்பி வந்தவர்களின் அனுபவங்களைப் பார்க்கையில் ஒரு வியப்பூட்டும் சம்பவமாகவே இன்றும் உள்ளது.

அமெரிக்காவினைச் சேர்ந்த கவானிஷி என்ற பைலட் இப் பெர்முடா பகுதியில் பறந்து கொண்டு செல்லும் போது கடைசியாகச் சொன்ன வசனம் விஞ்ஞானிகளை வியப்பில் ஏற்படுத்தியது.

"வானத்தில் ஏதோ நடக்கிறது! வானம் திறந்து கொண்டது." பின் அவரிடம் இருந்து எதுவித செய்தியும் வரவில்லை. இவ்வாறே இப்பகுதியினூடு பயணம் செய்கையில் திசை காட்டும் கருவியில் உள்ள முள் தறி கெட்டு ஆடும். கப்பல் செல்லும் வேகத்தை கட்டுப் படுத்துவது கடினம்.

(தொடர்ச்சி 19ம் பக்கம் பாக்க)

---

போட்டியில் பங்குபெற விரும்புவோர் விடைகளை இடமிருந்து வலம், மேலிருந்து கீழ் என வகைப்படுத்தி ஒரு தபாலட்டையில் எழுதிக் கீழே காணப்படும் முகவரியை வெட்டி ஒட்டி அனுப்பிவைக்கவும். சரியான விடைகளை அனுப்பும் வாசகர்களில் அதிஸ்டசாலிக்கு 100 ரூபா பணப்பரிசும், பாராட்டுப்பெறும் மேலும் 10 பேரின் பெயர் விபரங்கள் அலையிலும் வெளியாகும். விடைகள் வந்து சேரவேண்டிய கடைசித் திகதி 25-11-2003 ஆகும். எங்கே முயற்சி செய்யுங்கள் பார்ப்போம். *முகவரி*

**குறுக்கெழுத்துப்போட்டி-20**
**தமிழ்அலை**
**பிரதானவீதி, கொக்கட்டிச்சோலை**

## குறுக்கெழுத்துப் போட்டி -20

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | | ■ |
| 4 | | | | ■ | 5 |
| | ■ | 6 | | | |
| 7 | 8 | | | ■ | |
| 9 | | ■ | ■ | 10 | |
| ■ | 11 | | 12 | | ■ |
| 13 | | ■ | 14 | | |
| 15 | | ■ | 16 | | |

### இடமிருந்து வலம்

01.மானசீகக் குருவைக் கொண்டு வில்வித்தை கற்றவன்.
04.காட்டை இப்படியுமழைக்கலாம்.
06. நன்நீர் மீன் வகைகளில் ஒன்று. செத்தல் என்று சிலபேர் இதனை அழைப்பர். (குழம்பியுள்ளது)
07. விலை மதிப்புடைய உலோகமொன்று.
09. தமது, தம்முடைய என்னும் பொருள் தரும் சுருக்கச் சொல்ஒன்று. (திரும்பியுள்ளது)
10. ஆண்மயிலிற்கு அழகு சேர்ப்பது.
11.இவைகள் தாறு மாறாக ஒழுங்கின்றி கிடப்பதனாலேயே சிலருக்குத் துன்பங்கள் நேர்வதற்கான பலன் இருப்பதாக சாஸ்திரிகள் கூறுவர். (குழம்பியுள்ளது.)
13.திருமணத்தின் போது இதை மிதிப்பதும் இந்துக் கலாசாரத்தில் ஒரு அங்கமாகும். இறுதி எழுத்து இல்லாமல் வருகிறது.
14.பாதாளம் வரை பாயும் சக்தி படைத்த ஒன்று.
15. ஆவியீர்ப்பு, உணவு தீயாரிப்பு, என்பவற்றுடன் சம்பந்தமான மரத்தின் கூறு. (திரும்பியுள்ளது.)
16. சுவடு என்று சொல்லாமல். (குழம்பியுள்ளது)

### மேலிருந்து கீழ்

01. அமைதியான சூழ்நிலையில் கிடைக்கும் தனிமை.
02. மனச் சஞ்சலத்தைப் போக்கும் சக்தியுடைய இவைகள் 64 உண்டு என்பர். (குழம்பியுள்ளது)
03. பரம்பரை, சந்ததி என்பவற்றைக் குறிக்கும் இன்னொரு சொல்.
05. உருவில் சிறிதாக இருந்தாலும் மணம் வீசும் சிறப்பான மலர். மன்னன் மயங்கும் மலரென்றும் சொல்லலாம்.
08. சபைநடுவே நாகரீகமாகப் பழகும் தன்மை. (குழம்பியுள்ளது)
10. விழாக்கள் நடைபெறும் இடத்திலிருந்து வரவேற்பு நிகழும் இடம் வரை இதைக் கட்டி அலங்கரிப்பர்.
12. நாகம் இது எடுத்து ஆடும் காட்சி அற்புதமானது.
13. மனிதர் ஓய்ந்தாலும் இது ஒருபோதும் ஓய்வு கொள்வதில்லை.

## குறுக்கெழுத்துப் போட்டி 18ற்கான விடைகள்

| இடமிருந்து வலம் | மேலிருந்து கீழ் |
|---|---|
| 01.காட்டுதல் | 01.கார்த்திகேயன் |
| 04. கட்டார் | 02.விளையாட்டு |
| 06.யாதவர் | 03.தகதக |
| 08.கட்டளை | 05.இடர் |
| 09.கேள்வி | 07.வட்டம் |
| 10. வீம்பு | 10.வீரம் |
| 12.ரசிகன் | 11.புத்தி |
| 14.திறம் | 13.பங்கம் |

## பரிசு பெறும் அதிஸ்டசாலி

**கோமளாதேவி நடராஜா**
**265/16, முகத்துவார வீதி,**
**மட்டக்களப்பு.**

## பாராட்டுப் பெறும் அதிஸ்டசாலிகள்

01.பேதகருபன்
மீராவோடைச்சந்தி
கறுவாக்கேணி, வாழைச்சேனை.

02.ரீ.தமிழ்வாணன்
ஆரையம்பதி-02

03.திரு.சி.இளங்கோ(ஆசிரியர்)
மட்/எருவில் க.ம.வி.

04.கு.அருந்தவராசா
முனைக்காடு வி. வி

05.வி.எஸ்.ரி.ராஜா,
தரம் 12 விஞ்ஞானம்,
மட்/ சிவானந்தா தேசிய பாடசாலை.

06.மு. சந்திரசேகரம்
விபுலானந்தா வீதி,
காரைதீவு-01

07.மு.கலைவாணி
ஐயங்கேணி, செங்கலடி

08.திருமதி. சு. பூபாலசிங்கம்
விநாயகர் மட்/ மகாவித்தியாலயம்
கிரான்குளம்.

09.திருமதி.வரதலெட்சுமி-ஞானதேசிகன்
மட்/தம்பலவத்தை க.வி மண்டூர்.

10.திருமதி.ம. நவேந்திரன்
மட்/ பட்டிருப்பு ம.வி(தேசிய பாடசாலை), களுவாஞ்சிக்குடி.

# அணு ஆயுதம் அற்ற உலகம் சாத்தியமா?

- சண் தவராசா -



தனது அணு சக்தித் திட்டங்கள் தொடர்பாகப் பார்வையிடுவதற்கு சர்வதேச கண்காணிப்பாளர்களை அனுமதிக்க ஈரான் இணக்கம் தெரிவித்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. தனது அணு சக்தித் திட்டம் ஆக்க பூர்வமானதே அன்றி ஆயுதப் போட்டா போட்டிக்கானது அல்ல எனவும் அந்நாடு அறிவித்துள்ளது.

இதே வேளை வட கொரியாவில் அணு ஆயுதத் திட்டம் தொடர்பான இரண்டாவது சுற்றுப் பேச்சு வார்த்தைகள் பீஜிங்கில் டிசம்பர் 10 முதல் 13ந் திகதி வரை நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இப் பேச்சுவார்த்தைகளில் வட கொரியாவுடன் அமெரிக்காவும் வட கொரியாவின் அயல் நாடுகளான சீனா, ரஷ்யா, தென் கொரியா, யப்பான் என்பனவும் பங்கு கொள்ளும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.



ஈரான் மற்றும் வட கொரியா ஆகிய நாடுகளின் அணு ஆயுதத் திட்டங்கள் தொடர்பில் அயல் நாடுகளை விட ஆழ்ந்த அக்கறையை அமெரிக்காவே வெளிப்படுத்தி வருகின்றது.

உலகிலேயே முதன் முதலாக அணுக்குண்டினை வெடிக்கச் செய்து பரிசோதனையினை மேற் கொண்ட நாடு என்ற பெருமையை முன்னால் சோவியத் யூனியனே பெற்றிருந்த போதிலும் அந்நாடு என்றுமே அந்த அணு குண்டினைப் பொது மக்கள் மீது பரீட்சித்துப் பார்க்கத் துணியவில்லை. ஆனால் 2ம் உலக மகா யுத்தம் நிறைவு பெற்ற பின்னரும் கூட தனது மமதை காரணமாக யப்பானில் ஹிரோஷிமாவிலும், நாகஷாகியிலும் அணுக்குண்டுகளை வீசி தனது போர்வெறியை வெளிக்காட்டிய பெருமை அமெரிக்காவிற்கே உண்டு.

முறியடிக்க முடியாத ஆயுதமான அணுகுண்டினை தன்னை விட வேறு எவருமே வைத்திருக்கக் கூடாது என்ற அமெரிக்கத் திமிரின் வெளிப்பாடே, இன்று ஈரான் மற்றும் வட கொரியா ஆகிய நாடுகளின் அணு சக்தித் திட்டங்கள் தொடர்பில் அமெரிக்கா கடைப்பிடித்து வரும் கொள்கையாகும்.

தட்டிக் கேட்க ஆள் இல்லாவிட்டாலும் தம்பி சண்டப் பிரசண்டன் என்பது போல் தான் மாத்திரமே அல்லது தனது அடிவருடிகள் மாத்திரமே அணு ஆயுதங்களைக் கொண்டிருக்கலாம் என்பதே அமெரிக்காவின் நிலைப்பாடு.

1970களின் முற்பகுதியில் இந்திரா காந்தியின் அரசாங்கம் இந்தியாவில் முதன் முதலாக அணுகுண்டு வெடிப்புப் பரிசோதனையைச் செய்த போது வெகுண்ட முந்த அமெரிக்கா பதிலுக்குச் செய்ததெல்லாம் தனது நேச நாடான பாகிஸ்தான் அணுகுண்டைத் தயாரிக்க உதவி செய்ததே.

அதே போன்று இஸ்ரேலும் அணு ஆயுதங்களை உற்பத்தி செய்து வருகின்ற போதிலும் அது தொடர்பாக அமெரிக்கா என்றுமே வாய் திறந்ததில்லை. ஈராக்கிய எண்ணெய் வளத்தைக் கொள்ளையிடும் நீண்ட நாள் திட்டத்தின் அடிப்படையில் ஈராக்கில் அணு ஆயுதத் திட்டத்தை ஆராயப் புறப்பட்ட அமெரிக்கா 'இன்று மாபெரும் ஆக்கிரமிப்பை மேற்கொண்டு தனது நீண்ட கால இலக்கை நயவஞ்சகமாக நிறைவேற்றிக் கொண்டமை அண்மைக் கால உதாரணம்.

இதே பாணியில், இந்தியாவிலோ, பாகிஸ்தானிலோ ஏன் இஸ்ரேலில் கூட நடந்து கொள்ள அமெரிக்கா முனையவில்லை. மாறாக வட கொரியா ,ஈரான் போன்ற நாடுகளே அமெரிக்காவின் அந்தக் கரிசனைக்கு உள்ளவையாக உள்ளன.

உலக சரித்திரத்திலே அமெரிக்க இராணுவம் தோல்வி கண்ட முதலாவது நாடு என்ற பிரசித்தம் வியட் நாமுக்கே கிடைத்த போதும் 1953 இல் நடைபெற்ற கொரிய யுத்தத்தில் அமெரிக்கா அடைந்த தோல்வியே உண்மையில் முதலாவது தோல்வி. எதிர் காலத்தில் அமெரிக்கா மண்கௌவப் போவதற்கு முதன் முதலில் பிள்ளையார் சுழி போட்ட நாடு வடகொரியாவே.



அன்றைய தோல்விக்கு வஞ்சந் தீர்க்க விரும்பும் அமெரிக்கா தகுந்த தருணத்தைப் பார்த்துக் காத்திருக்கிறது. அதற்குக் கிடைத்த துருப்புச் சீட்டாக வட கொரியாவின் அணு ஆயுதத் திட்டம் அமைந்து விட்டது. சோவியத் யூனியனின் உடைவின் பின்னர் கம்யூனிச முகாம் பலவீனமடைந்துள்ள நிலையில் வடகொரியாவை இலகுவாக நசுக்கி விடலாம் என அமெரிக்கா எண்ணினாலும், வட கொரியா மக்களின் திட சித்தமும், நேச நாடான சீனாவின் ஆதரவும் இருக்கையில் அமெரிக்காவின் ஆசை என்றுமே நிறைவேறாது என நம்பலாம்.

ஈரான் விடயத்திலும் ரஷ்யாவின் அயல் நாடாக ஈரான் இருப்பதும் அமெரிக்காவின் மிகவும் நம்பத்தகுந்த கூட்டணியான இஸ்ரேலின் சியோனிசக் கொள்கைக்கு ஈரான் தெரிவித்து வரும் உறுதியான எதிர்ப்புமே அமெரிக்காவின் அதீதக் கரிசனைக்குக் காரணமாக இருக்கலாம்.

மேலும் ஈரானில் உள்ள இயற்கை வளங்கள் மற்றும் அமெரிக்காவின் முதல் எதிரியான இஸ்லாமிய தீவிரவாதத்துக்கு தலைமை வழங்கக் கூடிய நாடு என்ற தகுதியை ஈரான் பெற்றிருப்பதும் கூட அமெரிக்காவின் ஈரானிய எதிர்ப்புக் கொள்கைக்குக் காரணமாக இருக்கலாம்.

அணுகுண்டைத் தனது கையில் வைத்துக் கொண்டு ஏனைய நாடுகள் அணுகுண்டை உற்பத்தி செய்வதாக முதலைக் கண்ணீர் வடிக்கும் அமெரிக்காவின் செயற்பாடுகளை உலகின் முற் போக்கு சக்திகள் ஒன்றிணைந்து எதிர்க்க வேண்டும்.

அணு ஆயுதமே இல்லாத உலகமே இருக்க வேண்டும் என்பதே உலகின் பெரும்பாலான மக்களின் பிரார்த்தனை அணு குண்டின் தந்தை என கருதப்படும் ரொபர்ட் ஓப்பன் ஹெய்மர் "அணு குண்டை உலகம் உருவாக்கினாலும் அதனை என்றுமே பயன் படுத்தி விடக் கூடாது". என்று கூறியது எவ்வாறு நிறைவேறாமற் போனதோ அதே 'போன்று அணு ஆயுதமற்ற உலகம்' என்ற பிரார்த்தனை நிறைவேறாது என்பதே இன்றைய உலக நடப்புகள் மூலம் தெரியவரும் விடயமாகும்..

---

### லண்டன் சென்ற

# சென்னை அழகி மேத்தாவுக்கு

## சித்திரவதை, வன்புணர்வு முயற்சி!

பேஷன் ஷோ நிகழ்ச்சிக்காக லண்டன் சென்ற சென்னை அழகி மேத்தாவை பாலியல் வன்புணர்வு புகார் குறித்து அவர் பரபரப்புப் பேட்டி அளித்திருக்கிறார். பூட்ஸ்காலால் என்னை மிதித்து சித்திரவதை செய்தார் என்று கூறியுள்ளார்.

சென்னை அசோக் நகரில் வசிப்பவர் சென்னை அழகி மேத்தா. இவர் கடந்த சிலவருடங்களாக மாடலிங் செய்து வருகிறார்.

மேலும் பல்வேறு அழகிப்போட்டிகளில் இவர் கலந்து கொண்டு இருக்கிறார்.

1998-ம் ஆண்டு இவர் மிஸ் தமிழ் நாடு பட்டமும் 2000-ம் ஆண்டு மிஸ் சென்னை பட்டமும் பெற்றுள்ளார். கடந்த ஆண்டு கொரியா'வில் நடந்த மிஸ் யுனிவர்ஸ் போட்டியிலும் மிஸ் இந்தியா 'சார்பில் கலந்து கொண்டார். மேலும் தனியார் தொலைக்காட்சி ஒன்றில் தில்லானா தில்லான் என்ற நிகழ்ச்சியை நடத்தி வந்தார். லண்டனில் நடந்த பேஷன் ஹேவில் கலந்து கொள்வதற்காக சென்னையைச் சேர்ந்தஅஜித் மேனன், ஜெய்சங்கர் ஆகியோருடன் இவர் லண்டன் சென்றார். அங்கு அவர் தங்கியிருந்த அறையில் அஜித் மேனன் அவரை பாலியல் வன்புணர்வு முயற்சி செய்ததாக கூறப்படுகிறது. இது பற்றி சென்னை திரும்பியதும் மேத்தா பொலிஸில் புகார் செய்து இருக்கிறார்.

லண்டனில் நடந்த சம்பவம் பற்றி மேத்தா நேற்று நிருபர்களிடம் கூறியதாவது,

கடந்த 5ம் திகதி லண்டனில் நடைபெறும் பேஷன் ஷோவிங் கலந்து கொள்வதற்காக 22பெண்களுடன் சென்றேன். நாங்கள் விமானத்தில் புறப்படும் போதே அஜித் மேனன் எனது இருக்கைக்கு அருகே வந்து உட்கார்ந்து கொண்டார். அவரது பேச்சு நடவடிக்கை எனக்குப் பிடிக்கவில்லை. அதனால் நான் அவரை கண்டு கொள்ளவில்லை. பிறகு நான் புத்தகம் படித்துக் கொண்டிருந்தேன். அதை அவர் பிடுங்கிக் கொண்டார். ஹெட்போன் மூலம் பாட்டுக் கேட்டுக் கொண்டு இருந்தேன். அதையும் அவர் பறித்துக் கொண்டார். அவர் என்னிடம் தவறான கண்ணோட்டத்துடன் பேசினார். அதனால் எனக்கு மிகவும் அருவறுப்பாக இருந்தது. மறு நாள் லண்டன் போய்ச் சேர்ந்தோம். அன்றைய தினம் பேஷன் ஷோ ஒத்திகை எதுவும் நடக்கவில்லை. லண்டனில் உள்ள அடுக்குமாடிக் கட்டத்தில் 6வது மாடியில் தங்க வைத்தனர். என்னுடன் 4 மாடல் அழகிகளும் தங்கியிருந்தனர்.

7ம் தேதி காலை அஜித் மேனன் எனது அறைக்கு வந்து என்னிடம் தவறாக பேசத் தொடங்கினார். அவரது பேச்சில் ஏதோ கெட்ட நோக்கம் இருந்ததாக நான் புரிந்து கொண்டேன். எல்லாமாடல் அழகிகளைப் பற்றியும் அவர் கண்டபடி பேசினார். அப்போது அவரது மாமா ஜெயசங்கரும் இருந்தார். திடீரென எனது பின்புறமாகச் சென்று அஜித் மேனன் என்னை பூட்ஸ் காலால் ஓங்கி உதைத்தார். இதனால் நான் நிலை குலைந்து கீழே விழுந்தேன் வெறிப்பிடித்தவர் போல நடந்து கொண்டார். எனது தலைமுடியைப் பிடித்து சுவற்றில் மோதினார். வயிற்றில் ஷூ காலால் மிதித்தார். இதனால் எனது கண், வயிறு, தலை ஆகிய இடங்களில் காயம் ஏற்பட்டது. நடந்த சம்பவத்தை என்னுடன் இருந்த மாடல் அழகிகள் என்ன நடக்கிறது என்று புரியாமல் பயந்து வெறித்து நின்றனர்.



இதையெல்லாம் ஜெய்சங்கர் கைகட்டி வேடிக்கை பார்த்துக் கொண்டே இருந்தார். பின்னர் நான் அஜித் மேனனிடம் இருந்து தப்பிச் சென்று உதவிக்கு மற்றவர்களை அழைத்தேன். அப்போது அவர் என் பின்னாலேயே வந்து லாபியில் இருந்து வெளியே தள்ள முயன்றார். ஆனால் அதற்குள் பொறுப்பாளர்கள் என்னை வெளியே அனுப்ப சம்மதிக்கவில்லை. லண்டனில் குளிர் அதிகம் 3டிகிரி வெப்பம் தான் இருந்தது. அந்தக் குளிரிலும் என்னை படாத பாடு படுத்தினார்.

பின்னர் நான் என் பெற்றோருக்கும், உறவினருக்கும் டெலிபோன் மூலம் தகவல் கொடுத்தேன். லண்டன் நிகழ்ச்சி பொறுப்பாளர்களிடம் இது பற்றிக் கூறினேன். அவர்கள் எனக்குப் பாதுகாப்பு கொடுத்தனர். அதன் பிறகு நான் அங்கிருந்து அன்றைய தினம் விமானம் மூலம் சென்னைக்கு வந்து விட்டேன். அவரிடம் அடிபட்டதில் எனது தலை வீங்கிவிட்டது. கண்அருகிலும் காயம் ஏற்பட்டுள்ளது. இதனால் தனியார் மருத்துவ மனையில் சிகிச்சைக்காக சேர்ந்தேன். பின்னர் பொலிஸ் அதிகாரிகளை சந்தித்து புகார் கொடுத்தேன், அவர்கள் தகுந்த நடவடிக்கை எடுப்பதாகக் கூறியுள்ளனர்.

என்னை கொலை செய்துவிடுவேன். உயிரோடு ஊருக்குத் திரும்ப முடியாது என்று அஜித் மேனன் மிரட்டியதால் அவரிடம் இருந்து தப்பினால் போதும் என்று வந்துவிட்டேன். இதனால் லண்டன் பொலிஷில் புகார் கொடுக்கவில்லை. நான் இதுவரை எத்தனையோ நிகழ்ச்சிகளில் மாடலிங் செய்திருக்கிறேன். இதுவரை இப்படி ஒரு சம்பவம் நடந்தது இல்லை. அஜித் மேனனுக்குக் கெட்ட எண்ணம் அதிகம் இருக்கிறது. அதனால் தான் தவறாக நடக்க முயற்சி செய்கிறார். விமானத்தில் போகும் போது வேறு இருக்கை தான் அவருக்கு ஒதுக்கப்பட்டிருந்தது. ஆனால் இருக்கை அருகே உட்காரும் வகையில் சீட் வாங்கினார். எனக்கும் அவருக்கும் பணப்பிரச்சினை எதுவும் கிடையாது. இதற்கு முன்பு சென்னையில் அவர் நடத்திய நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டு இருக்கிறேன். அப்போதெல்லாம் அவர் இது மாதிரி நடக்கவில்லை. லண்டனில் எனக்கு ஏற்பட்ட கொடுமையால் நான் அங்கு நடந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வில்லை. இவ்வாறு அவர் கூறினார்.

# கவிதைக் களம்

## ஈழத்தாய் சபதம்

—— தந்தை செல்வா

எஸ். கருணானந்தராஜா. (யுகசாரதி)

பாணந்துறையிற் குருக்களை - பெரும்
பாதைக்கு ஊற்றிடும் தாரினுள் - கலி
நாணி குனிந்திடுமாறிலே - ஓ
நாய்கள் புதைத்துச் சிதைத்ததும்
காணக் கண்கூசிடுமாறு எம் - தமிழ்
கன்னியர் ஆடைகள் நீக்கியே
வீணர்கள் வீதியில் விட்டதும் - நெஞ்சை
விட்டு அகன்றிடக் கூடுமோ

இந்த நிலைமை தொடர்ந்திட - தமிழ்
ஈழத்தவர் உளம் நொந்திட
வெந்தழல் மீதினில் நெய்யினைச் - சுடர்
மேலும் பெருகிட ஊற்றல் போல்
எந்தவுலகிலும் ஏற்றிடா - பேர்
இழிவு தரும் கொடுஞ் செய்கையை
சிந்தையில் நாணஞ் சிறிது மற்று அச்
சிங்களர் செய்தல் தொடங்கினர்

கண்ணினிலும் பெரிதாகவே - நாம்
காத்து வளர்த்திட்ட கல்வியில்
மண்ணினை வாரியிறைத்தனர் - அந்த
மாமலராளும் முறைத்தனள்
பண்ணிய பாவங்கள் யாவிலும் - எம்
படிப்பைக் கெடுத்தது போலவே
மண்ணிற் கொடுமை யதில்லையாம் - அதை
மன்னிக்க வேதமுமில்லையாம்

சிங்கள மாணவர் புள்ளிகள் - மிக
சிறிதெனிலும் பல்கலைக் கழ
கங்களிலேயவர் குந்தவும் - நாங்கள்
காட்டினும் திறன் பிந்தவும்
தங்கள் விருப்பப் படியெல்லாம் - வீண்
தரப்படுத்தல் முறை செய்ததும்
பொங்கியெழுந்தனர் வாலிபர் - பெரும்
போரிடவே வழி கோலினர்

## பிரிவதாக இருந்தால் பிரியமாக ஏற்போம்!

ந.யசோதா, பருத்திச்சேனை.

பிரிவுக்குள் புதைந்து புலம்பிக்
கொண்டிருக்கும்
என் பிரிய உள்ளத்தை எப்போது
புரியப் போகிறாய்?
அப்போது நான் பிரிந்திருப்பேன்....
உனக்குள்ளான என் உயிரை விட்டு.
அப்போது உன் கன்னத்தில்
வடியும் கண்ணீர்த் துளிகளை
துடைப்பதற்கு நான் இருக்க
மாட்டேன்!
இப்போது நீ அழுதுவிடாதே!
உனக்காக அழுவதற்கு
என் கண்ணில் நீரில்லை!
கண்ணீரும் கண்களுடன்
கண்கலங்கி நிற்கின்றது
நீ அழப் பிறந்தவனல்ல
ஆளப்பிறந்தவன்!
அதனால் தான் நான் அவதிப்
படுகின்றேன!
நாம் பழகிய நோக்கம் பிரிவாகவோ
பிரிவதாகவோ இருந்தால்,
பிரிவைப் பிரியமாக
ஏற்றுக் கொள்வோம்.



## உன்னைச் சிறையிடுவேன்!



உறவாய் இணைந்தாய்
உயிராய் ஆனாய்!
பாசவலையில் வீழ்த்தினாய்
கனவுகளை வளர்த்தாய்
உறக்கத்தைக் கெடுத்தாய்
கற்பனையில் மிதக்க வைத்தாய்
என்றாவது ஒரு நாள் சிறையிடுவேன் உன்னை
என்னுயிர் முத்தத்தால்!

சி. ஸ்ரீவித்தியா, வந்தாறுமூலை

## கலைக்கூடலை ........ கலகக் கூடலாக்கலாமா?

தம்பிலுவில் ஜெகா



சமாதானம் பேசுகிறது
கொழும்பு மாநகரம்!
கட்சிகள் சில
காதுகளைப் பொத்துகிறது!
காடையர் கூட்டம்
கம்புகளைத் தூக்குகிறது!
சிங்கள கலை இலக்கிய
வெள்ளை உள்ளங்களின்
"ஹிறு அமைப்பு
இலக்கிய இதயங்களுடன்
இணைய வந்தது!
சிங்கள தமிழ் கலைக் கூடல்
சிரித்துக் கொண்டது!

ஒன்றுக்குள் இரண்டைத் தேடும்
ஒரு சில வெறியர்கள்
கலைக் கூடத்தை
கலகக் கூடலாக்கினர்!
பூட்டிய மண்டபத்தில்
பூட்டாத உணர்வுகள்
மேடையேறி வெற்றி கொண்டன.

## பகுத்தறிவு பரவட்டும்

நிலையற்ற வாழ்க்கையே நிலையானது
நினைப்பும் கவலையும் மலையானது
விலையற்ற நிலையாகும் உடலானது
விடிநாள் வேதனைக் கடலானது.
சாவது நிச்சயம் யாமறிவோம்
தருமச் செயல்களை யேமறவோம்
ஆவது இறைசெய லாகட்டும்
அத்துடன் பகுத்தறி கூடட்டும்.

இக்காலம் மாற்றங்கள் எத்தனை
எண்ணியே பாருங்கள் சிந்தனை.
அக்காலம் போன்றில்லை ஆராய்ச்சி
அறிவு விஞ்ஞானம் மேலாச்சி.

தொண்டெனக் கண்டு கோயிலால்
சொந்த நலன்களே கூடலால்
பண்டை யோர்செய லென்பதில்
பகுத்தறி வில்லாத செயலுண்டு.
ஊருக்குள் கோயில் ஒன்றிருக்க
உள்ள பகையாலே வேறொன்று
பேருக்குத் தன்சாதி காட்டியே
பெரும்பய னுறுதலும் போட்டியே.

கலாசூரி விநாயகமூர்த்தி

## பூரண அழகு நிலா!



என்னைப் பிரமனவன்
இடதுகையால் கிறுக்கிவிட்டான்!
உன்னை அவனோ
உயிர்மையில் வலக்கரத்தால்
உயிரூட்டி வைத்தான்!

வானத்தில் வலம் வருவது
கறைபடிந்த நிலவு!
பூமியில் நீ மட்டுமே
பூரண அழகு நிலா.

ஆடவரின் நெஞ்சத்தை
அள்ளியள்ளி எடுக்கிறாய்!
நானுன்னைத் தொட்டால்
நாநூறு வருடம் வாழ்வேன்!

தென்றல்

## மந்தியை நம்பினாலும் மங்கையரை நம்பாதே!



மரம்விட்டு மரம் தாவும்
மந்தியை நம்பினாலும்
மனம்விட்டு மனம் தாவும்
மங்கையரை நம்பாதீர்!

பழகி வந்த புதிய சுகம்
பாதியிலே மறந்தாலும்
எழுதி வைத்த ஓவியம் போல்
என்னுருவம் இருக்கிறதா?

ஜெகநாதன், அரசடித்தீவு.

# தேடலும் பகிர்வும் 15

**இவ்** வாரமும் முதல் பகுதியை தமிழீழப் போரியல் வரலாற்றுப்பதிவு ஆவணம் ஒன்றே அலங்கரிக்கின்றது. சென்ற வாரம் பார்வைக்குக் கிடைக்கவில்லை என்று ஆதங்கப்பட்ட நூலொன்றின் சில பக்கங்களை மட்டும் கடந்த ஞாயிறு பார்க்கக் கிடைத்தது. சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணியின் "நெருப்பாற்று நீச்சலிற் பத்தாண்டுகள்" என்ற போரியல் வரலாற்று நூலே அது. பாடப்பரப்புக்கு வெளியேயான அறிவுத் தேடல் ஆர்வம் கொண்ட நட்பு உள்ளம் ஒன்று இதன் சில பக்கங்களைப் பார்க்கத் தந்தது. வவுனியாவில் நடந்த வெளியீட்டு நிகழ்வைத் தொடர்ந்தே அவ் உள்ளத்துக்கும் இது கிடைத்ததாம்.

ஆசிச் செய்தி, வாழ்த்துச் செய்தி, முன்னுரை, பாராட்டுரை, வெளியீட்டுரை, நன்றியுரை என்பவற்றுடன் நான்கு பெரும் பகுதிகளைக் கொண்டு வெளியான இதிலிருந்து ஒரு சில வரிகளை, உரைகளிலிருந்து நன்றியுடன் பகிர்ந்து கொள்கின்றேன்.

முன்னுரையில் கல்விப் பிரிவுப்பொறுப்பாளர் கு. கவியழகன் குறிப்பிடுவது வருமாறு, "விடுதலைக்காகப் போராடும் தேசத்தில் போர்க்களத்தின் ஒவ்வொரு சம்பவிப்புகளின் வெளிக்கொணர்வும் அதன் வீச்சுக்கும், எழுச்சிக்கும் அடிப்படையானது. அது நிகழ்காலத்தின் எழுச்சிக்கு மட்டுமல்ல, கடந்த காலத்தின் மீட்சிக்கும், எதிர் காலத்தின் வளர்ச்சிக்கும் ஆதார விசையாக அமைவது இன்றையவற்றின் அனுபவத் தொடர்ச்சியாகவே நாளை உருவாகிறது மட்டுமல்ல, இன்றைய பதிவே நாளைய வரலாறாகவும் எழுகிறது. ஆயின், நாளையின் தொடர்ச்சிக்கும் வளர்ச்சிக்கும் வரலாற்றைக் கையளிக்க வேண்டியது இன்றுள்ளவர்களினது வாழ்தலின் பொறுப்பாகும். இத்தகைய உணர்வே இந் நூலுருவாக்கத்திற்கான அடிப்படையைத் தந்தது."

நூலுக்குப் பாராட்டுரை வழங்கிய க.வே. பாலகுமாரன் பின்வருமாறும் குறிப்பிட்டுள்ளார். "நெருப்பாற்று நீச்சலிற் பத்தாண்டுகள் என்பது மிகப் பொருத்தமான தலைப்பு. இதுவரை தாண்டப்பட்ட நெருப்பாறுகளை அறிந்தாற்றான் இனிமேல், தாண்ட வேண்டிய நெருப்பாற்றினை எம்மால் தாண்ட முடியும். அதிலும் குறிப்பாக, சர்வதேசமும் எமது விடுதலைப் போரின் இறுதி வெற்றியைத் தள்ளிப் போட முனையும் இவ்வேளையில் விடுதலை வீரியம் குன்றாது இந்தக் கட்டத்தினையும் நாம் தாண்டி இலக்கினை அடைய ஓர் உந்து சக்தியாக இந்நூல் அமைகின்றது."

வாழ்த்துச் செய்தி வழங்கிய மூத்ததளபதிகேணல் கருணா அம்மான் அவர்கள், "ஒவ்வொரு படையணியும் பெருமை கொள்ளத்தக்க தமது வழித்தடத்தை வரலாறாக்கி, எதிர் காலச் சந்ததியின் கரங்களுக்குச் சேர்ப்பிக்கவேண்டியது அவ்வப்படையணிகளின் தட்டிக்கழித்து விடமுடியாத தார்மீகக் கடமையாகும்" என்று குறிப்பிட்டு இருப்பதையும் நன்றியுடன் பகிர்ந்து கொள்கின்றோம்.

அடுத்த பகுதியான கவிதைப் பகுதியினுள் புகுவோம். சமகாலப் பொருத்தம் கருதிய கவிதைப் பகிர்வு இம்முறை "விடுதலைப்புலிகள்" அதிகாரபூர்வ ஏட்டிலிருந்து நன்றியுடன் பெறப்படுகின்றது.(குரல்-111, புரட்டாதி-ஐப்பசி, 2003) "உங்களுக்கும் வேண்டும் எங்கள் வல்லமைத் தலைவன்" எனுந் தலைப்பில் "செந்தோழன்"எழுதிய கவிதையிலிருந்து சில வரிகளைப் பகிர்கின்றோம்.

"சிறி......லங்கா....மாதா
இப்போது........
கொழும்பில் இருந்து
கோலோச்ச வேண்டுமென்று
நாங்கள்
கோரிக்கை போடவில்லை.

இலங்கை முழுதும்
எங்களிற்கு வேண்டுமென்று
வேண்டுகோள்
விடுக்கவில்லை.
புழுதி படிந்த எங்கள்
பயணங்களிற்கு
முடிவைக் கொடுக்க......

நிலமிழந்தோர்
உறவிழந்தோர்
மனக்காயங்களிற்கு
மருந்து தடவுவதற்கு ஒரு
மார்க்கம் கொடுக்க......

பாதையொன்றை
மட்டுமே
கேட்கிறோம்.......
அவ்வளவு தான்

இதற்கே இவ்வளவு
குத்துக்காரணங்களும்
முட்டுக்கட்டைகளும்
என்றால்
வட்டுக்கோட்டை முடிவு
எட்டப்படுமானால்
என்ன நடக்குமோ?

சிறி.......லங்கா.....மாதா
உனது
புதல்வர்களாலேயே
சரிக்கப்பட்டுக்
கொண்டிருக்கும்

- த.வசந் -

உன் எழுச்சிக்கு
இறுதி உதாரணம்
இந்த இடைக்கால
அரசுக்குப்
போடப்படும்
தடைக்கற்கள்"

சிங்கள ஆங்கில மொழி பெயர்க்கப்பட வேண்டிய அவசியமான, அவசரமான கவிதை வரிகள் அல்லவா இவை?

தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களின்உள்ளத்துச் சிந்தனையிலிருந்து :-

"எமது போராட்ட வரலாறு பல முக்கிய திருப்புமுனைகள் அடங்கிய படிநிலை வளர்ச்சியைக் கொண்டது. இப்படிநிலை வளர்ச்சிக்கு எமது திட்டங்களும் செயற்பாடுகளுமே காரணமாக அமைகின்றன. போராட்டப் புற நிலை யதார்த்தத்தின் தேவைகளையும் எதிர்கால வளர்ச்சியின் அவசியத்தையும் கருத்திற் கொண்டே நாம் எமது திட்டங்களை வகுத்து, அவற்றைச் செயற்படுத்தி வருகிறோம்."

சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் வெளியீடான "நெருப்பாற்று நீச்சலிற் பத்தாண்டுகள்" போரியல் வரலாற்று நூலுக்குத் தேசியத் தலைவர் அவர்கள் வழங்கிய ஆசிச் செய்தியிலிருந்து நன்றியுடன் பெறப்படுகின்றது.

காலத்தால் அழியாத மாவீரர் வரலாறு

# வீரப்புதல்வி 2ம் லெப் முகிலா

பச்சைப் பசேல் என்ற வயல் வெளிகளும் பசுங் கன்று துள்ளி விளையாடும் நெல் மணிகள் கலகலக்கும் பருத்திச் சேனை கன்னங்குடா எனும் கிராமத்தில் தங்கராசா மகேஸ்வரி தம்பதியினருக்கு இரண்டாவது மகளாக வளர்மதி எனும் இயற் பெயருடன் தாய் மடியில் தவழ்ந்தாள். இவளது ஆரம்பக் கல்வியை மட்/ கன்னங்குடா மகா வித்தியாலயத்தில் ஆண்டு-10 வரை கல்வி கற்றாள் முகிலா. இவள் படிப்பு, விளையாட்டு கலைநிகழ்வு, இவைகளில் விட்டுக் கொடுக்க மாட்டாள். இவளுக்கு குட்டிக் கூத்து, நாடகம் என்றால் கை வந்த கலை. இவள் பாட்டுப் பாடி கூத்தும் ஆடி ஆசிரியர்களைச் சிரிக்க வைப்பாள். இப்படியே இவளுடைய பாடசாலை வாழ்க்கை சந்தோஷசமாகக் கழிந்தன.

ஆயினும் கோர வெறி பிடித்த சிங்களக் காடையர்கள் தாய் மண்ணை அழிக்க வலை விரித்த போது தமிழ் மக்களை அழித்தும் இளம் பெண்கள், வாலிபர்கள் வாழ்க்கையிலும் விளையாடினர். எதிரி அதிகரிக்கத் தொடங்கினான். எம் மண்ணில் அவலம் கூடின. இளம் பெண்கள் விதவைகள் ஆயினர். இதைப் பார்த்து .இவள் குருதி கொதித்தது. தலைவனின் பெயரை நெஞ்சிலே நிறுத்தினாள். கொலை வெறி பிடித்த சிங்கள வெறியர்களுக்குச் சரியான பாடம் புகட்ட வேணும், தாய் மண்ணில் அவலம் குறைய வேண்டும், தமிழ் மக்கள் நிம்மதியாக வாழ வேண்டும் என்ற எண்ணத்துடன் தாய் தந்தை சகோதர பாசம் மறந்து 1995ம் ஆண்டு விடுதலை நோக்கி நடந்தாள். மட்டு / 06 எனும் பயிற்சிப் பாசறையில் இவளின் ஆரம்பப் பயிற்சியை முடித்து முகிலா எனும் புனைப் பெயருடன் வெளியேறினாள்.

இவள் 60mm மோட்டார் ரீமில் இணைந்து பல மாதங்கள் திறமை பெற்ற பின் 60mm மோட்டார் இயக்குபவராகச் செயற்பட்டாள். பல களம் கண்டவள் சண்டை என்றால் சலிப்பே கிடையாது. பகைவனை அழிப்பதே இவளின் ஆதங்கம் என்பாள். 60mm மோட்டார் இயக்குபவராக பல வெற்றிச் சமர் புரிந்தாள்.

1997ம் ஆண்டு தென் தமிழீழம் இருந்து வட தமிழிழம் நோக்கி சிறப்புத் தளபதி நிலாவினி அக்கா அவர்களுடன் பயணம் சென்ற போது முகிலாவும் சென்றாள். அண்ணனின் பெயர் இவளது நெஞ்சில் ஆழப் பதிந்தது. பயணம் சென்று கொண்டு இருந்த போது தான் சிங்கள இன வெறி பிடித்தவன் இவளின்




உயிர் குடிக்க காத்து நின்றான். வீதி கடக்கும் போது கயவன் முகிலாவின் உயிர் குடித்தான். காற்றும் ஒரு கணம் வீச மறுத்தது. புல் வெளிகள் அசைய மறுத்தன. பறவைகள், விலங்குகள் முகிலா எங்கே என கேட்டன. ஆனால் முகிலா விழி மூடி விட்டாள். அவள் உடல் கூட எங்கள் கரம் கிடைக்க வில்லை. ஆனாலும் நாங்கள் அழ வில்லை. இவள் மடிய வில்லை. ஆலமர விருட்சமாய் எங்கள் மனதில் வாழ்கின்றாள். பல களம் கண்ட முகிலா இவள் தலைவனை மனதில் நிறுத்தி இன்றும் உறங்குகின்றாள். இவள் தலைவனின் மனதில் ஆழப் பதிந்தவள் தான் 2ம் லெப் முகிலா.

"திசை மாறிப் போகாத பயணங்கள் நினைத்த இலக்கு தவறாது அழித்த பின் மரணங்கள் எல்லாம் மண்ணுக்காய் தியாகங்கள். தமிழீழ மண்ணில் நடக்கின்ற வண்ணங்கள் தொடர்கிறோம் பணிகள். முகிலா காட்டிய வழியில் எங்கள் பணிகள்."

பூவிழி

## "தமிழீழத்தைத் தெரிந்து கொள்வோம்"

(✍ து.கோமளமைந்தன)



237. தமிழீழ மேன்முறையீட்டு முறைமுன்ற நடவடிக்கைச் சட்டத்திற்கமைவாகச் செயற்படும் தமிழீழத்திற்கான மேன் முறையீட்டு நீதிமன்றம் எப்போது ஆரம்பிக்கப்பட்டது?

1993.11.24இல்

238. தமிழீழக் கல்விக் கழகத்தின் தமிழீழக்கல்வி மேம்பாட்டுப் பேரவை முதன்முதல் நடத்திய பொதுப் பரீட்சை ஒன்றில் சித்தி எய்திய மாணவர்களைப் பாராட்டித் தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் 13.02.1993இல் அறிக்கையொன்றை வெளியிட்டுப் பெருமைப்படுத்தினார். அப் பொதுப் பரீட்சையின் பெயர் என்ன?

''தமிழீழப் பொதுக்கல்வித் தேர்வு''

239. மத்திய அமெரிக்க நாடான கொண்டூராசில்'' தெருவன்முறைகளைக் கட்டுப்படுத்த 2003ஆகஸ்டில் மேற்கொள்ளப்பட்ட படை நடவடிக்கையின் பெயர் வடதமிழீழத்தில் சிங்களப்படையினர் மேற்கொண்ட வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கூட்டுப்படை நடவடிக்கையை நினைவூட்டியது. அப்படை நடவடிக்கையின் பெயர் என்ன?

''ஒப்பரேஷன் லிபரேஷன்''

240. 1985அக்டோபர்16இல் வெளியான தமிழக ''தேவி'' வார இதழ் நேர்காணலில் தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் தனது ''அரசியல் குரு'' என யாரைக் கௌரவித்து இருந்தார்?

நேதாஜி சுபாஷ் சந்திரபோஷ் அவர்களை

241. 1985 ஜனவரி 09 இல் எதிரியுடனான மோதலில் வீரச்சாவடைந்த விடுதலைப்புலிகளின் மூத்த யாழ், மாவட்டத் தளபதி யார்?

கப்டன் பண்டிதர்

242. சிறீலங்காப் பாராளுமன்றில் தனிச்சிங்களச் சட்டம் கொணடுவரப்பட்ட போது, ''இரு மொழிகள் ஒரு நாடு; ஒரு மொழி இரு நாடுகள்'' என்று தீர்க்க தரிசனத்துடன் கூறிய இடது சாரி இயக்கத்தின் முன்னோடிகளுள் ஒருவரான சிங்களப் புத்திஜீவி யார்?

கலாநிதி கொல்வின் ஆர்.டி.சில்வா

243. எப்படை நடவடிக்கையின் போது 1992.07.05இல் சிறீலங்கா வான்படையின் ''வை-8'' ரக விமானம் புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டது?

''பலவேகய-2''

244. 1995.06.26 இல் புலிகள் மேற்கொண்ட வலிந்து தாக்குதலில் லெப் கேணல். தர சிங்களப் படை உயரதிகாரி உட்பட 110இற்கும் மேற்பட்ட சிங்களப் படையினர் கொல்லப்பட்டு பாரியளவிலான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டது எங்கு?

யாழ் மண்டைதீவு.

245. சந்திரிகா ஆட்சியின் சிறிலங்கா விமானப் படையினரின் ''கிபீர்'' குண்டு வீச்சாலும், ஆனையிறவுப் படைத்தளத்திலிருந்து ஏவிய ஆட்லறி எறிகணைகளாலும் 29 தமிழர்கள் கொல்லப்பட 60 பேருக்கு மேல் படுகாயமடைந்தனர். இம் மிலேச்சத்தனம் 1998- 06 - 10 இல் எங்கு நடந்தது?

வன்னியின் சுதந்திரபுரம்

246. தமிழீழ விடுதலைப் பேராட்ட வரலாற்றில் மக்களின் உயரிய ஈகங்களையும் நாட்டுப்பற்றையும், சிறிலங்கா - இந்தியப் படையினரதும் ஒட்டுக்குழுக்களதும் மிலேச்சத்தனங்களையும் உண்மைச்சம்பவங்களின் தொகுப்புக்களாக தமிழீழ விடுதலைப்புலிகளின் வெளியீட்டுப் பிரிவினர் ஆவணங்களாக ஆக்கியளித்துள்ளனர். தொகுதி-1 ''அம்மாளைக் கும்பிடுறானுகள்'' எனும் பெயரில் வெளியாகியிருந்தது. தொகுதி -2 எப்பெயரில் வெளியிடப்பட்டது?

''வில்லுக்குளத்துப்பறவை''

(தொடரும்)

## இப்போதும் எம்முடன் இருந்தால் எப்படி இருக்கும்

அலை கடலாய் ஆர்ப்பரித்தீர்கள்
அண்ணன் வழியில் அணி திரண்டீர்கள்
செல்லும் இடமெல்லாம்-வெல்லும் சக்தியை மட்டும்
சொல்லி விட்டுப் பள்ளி கொண்டவரே-
எண்ணி அழுகின்றோம்- எம் மனதுள்ளே.

தமிழர் தேசமெங்கும் தேகங்கள் உருக்கிய
உத்தம தெய்வங்களே
ஆளுக்கொரு ஆலயம் அமைத்து
சந்திக்குச் சந்தி சாதி சண்டை பிடிக்கும்
எம் தேசத்தில் நேசத்தையும் பாசத்தையும்
ஒன்றாக இணைத்து
ஒற்றுமையாக துயில்கின்றவர்களே
எம் தேசத்தின் நாயகர்களே.

கார்த்திகை நாளும் வந்தது
உம்மை எண்ணிக் கண்ணீர் விடத் தொடங்கி விட்டாள்-உன் அன்னை
விம்மி அழுகிறோம் நாமும் எம் தேசத்திற்காக
நீங்கள் பட்ட துன்பங்கள் ஒன்றா இரண்டா
விடியவில்லை உங்கள் இலக்கு
முடியவில்லை எங்கள் பயணம்.

கார்த்திகை நாயகர்களே ஏற்றி நிற்கிறோம் தீபம்
உங்கள் உழைப்பால் தான் எங்கும்நிமிர்ந்து நிற்கிறோம்-
இன்று நீங்களும் உயிருடன் இருந்திருந்தால்
இப் பலத்திற்கு எப்படி இருக்கும்
தலைவன் சொன்னபடி ஈழம் மலர்ந்திருக்கும்.

-இரா- சேனாதிராஜ-

# காத்திரன் பதில்

**காத்திரனே! சிலருக்கு மொட்டைக் கடிதம் எழுதும் தொழிலாக உள்ளது. இவர்களைப் பற்றி என்ன சொல்லலாம்?**

*எஸ்- லவன்-கன்னன்குடா-2*

முகவரி இல்லாத கோளைகள். இவர்கள் நேருக்கு நேர் அபிப்பிராயம் கூற அஞ்சுகிறார்கள்

✞ ✞ ✞ ✞

**அமெரிக்க ஜனாதிபதியும், ஈராக் ஜனாதிபதியும் எதிர்பாராத விதமாக நேரில் சந்தித்தால் யாது நடக்கும் காத்திரனே?**

*ம.நிமலேஸ்வரன்*
*பண்டாரியாவெளி*

இருவருமே முகத்தைச் சுழித்து நிலத்தைப் பார்த்த வண்ணம் மௌனமாகச் சென்று விடுவார்கள்.

✞ ✞ ✞ ✞

**மீண்டும் யுத்தம் வருமா காத்திரனே?**

*-செல்வன்.சின்னத்தம்பி- கன்னன்குடா*

இதற்கு ஜனாதிபதி சந்திரிக்காவும், பிரதமர் ரணிலும் தான் பதில் கூற வேண்டும் தம்பி.

✞ ✞ ✞ ✞

**ஜனாதிபதி திடீரென அதிரடி நடவடிக்கை எடுத்தது என்ன காரணம் காத்திரனே?**

*இ.பவானி*
*மட்டக்களப்பு*

மன நோயின் ஆரம்ப அறிகுறிகளில் இதுவும் ஒன்று தான் அங்கோடயில இருக்க வேண்டியவர்கள் ஆட்சியில இருப்பது மற்றக் காரணம்.

✞ ✞ ✞ ✞

**அன்புக்குரிய காத்திரனே! திருமணத்திற்குப் பின் குடும்பத்தில் பிரச்சினை வந்தால் மனைவி, கணவன் பிரிந்து செல்வது ஏன்?**

*பா.ர்.மதியழகன்-சாஸ்திரியார் வீதி*
*முறக்கொட்டாஞ்சேனை*

புரிந்துணர்வு உடன்படி(டு) க்கை இல்லாமையினால்

✞ ✞ ✞ ✞

**காத்திரனே! ''பெண் புத்தி பின் புத்தி'' என்று சில ஆண்கள் பெண்களின் கருத்துக்கு இடமளிக்கிறார்கள் இல்லையே?**

*கா- கார்திகா - களுவன்கேணி*
*பாலாச்சோலை*

யார் சொன்னது பெண் புத்தி கூர்மையான புத்தி ஆங்கிலத்தில் பின் என்றால் கூர்மை தானே.

✞ ✞ ✞ ✞

**எதிரியை விரைவில் இனம் காண முடியும். ஆனால் துரோகியை விரைவில் இனம் காண முடியாது. இதற்கு உங்கள் கருத்து தென்ன காத்திரனே?**

*பே.பிரபா- தரம்- 12.*
*மட்.அரசடித்தீவு*
*வி. மகா வித்தியாலயம்*

துரோகியை விவேகத்தில் இனம் காணலாம், எதிரியை மன்னிக்கலாம். துரோகியை மன்னிக்க முடியாது

✞ ✞ ✞ ✞

**பெண்ணின் முதல் எதிரி ஆணா? பெண்ணா? காத்திரனே?**

*சிவலிங்கம்- நிலோஜனா*
*மண்டூர்-1*

நாட்டிக்கே முதல் எதிரி சந்திரிக்காவைப் போன்ற பெண்கள் தானே.

✞ ✞ ✞ ✞

**ஒரு தலைக் காதலைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

*-ச.சபேஸ்வரன் ஈச்சந்தீவு*
*நாவற்காடு*

தலைக்குள் ஒன்றும் இல்லாதவரின் காதல் என்று நினைக்கிறேன்.

✞ ✞ ✞ ✞

**அகிம்ஷா வாதத்தைப் போதிக்கும் புத்த பிக்குகள் ஏன் காவி நிற ஆடையைத் தரிக்கிறார்கள் காத்திரனே?**

*-வே.மேஜலா- தம்பலவத்தை*

காவி நிறம் புனித தன்மையைக் குறிக்கும் நிறமாகும் ஆனால் சில போக்கிலிகள் இந்த உடையைத் தரிப்பது தான் தவறு.

**உங்கள் கேள்விகளை:**

**காத்திரன் பதில்**
**தமிழ் அலை**
**கொக்கட்டிச்சோலை**

*எனும் முகவரிக்கு எழுதி அனுப்புங்கள்*


## வாசிக்கின்றீர்களா...?

**தமிழ் பேசும் மக்களின் உணர்வலையான ''தமிழ் அலை'' தினசரியில்............**

| | | |
|---|---|---|
| ஞாயிறு தோறும் | - | வர்ண வாரமலர் |
| திங்கள் தோறும | - | திங்கள் வளம் |
| செவ்வாய் தோறும் | - | சிதைந்த கிராமங்கள் |
| புதன் தோறும் | - | ஆரோக்கிய அலை |
| வியாழன் தோறும் | - | வியாழன் விருந்து |
| வெள்ளி தோறும் | - | ஆன்மீக அலை |
| சனி தோறும் | - | அறிவியல் அலை |

இவைகளுடன் தினமும், சூடான செய்திகள், துணிச்சலான தகவல்கள் , சுவையான சம்பவங்கள், விளையாட்டுக் களம், அலையின் தேடலில், போடியார் பொறி வெடி, இன்னும் பல ஆக்கங்களுடன் மகிழ்விக்கும் ஒரே பத்திரிகை ''தமிழ் அலை'' வாசியுங்கள், வாசித்துப் பயனடையுங்கள். கிழக்கிலங்கையில் இருந்து வெளிவரும் ஒரேயொரு தினசரி

**''தமிழ் அலை''**


# வியப்பூட்டும் ''பெர்முடா...''

*15ம் பக்கத் தொடர்....*

கடலலைகள் கொந்தளித்து சீறும் கடல் நடுக்கத்தால் கப்பல் தத்தளித்து படுவேகமாக கடற் சுழி சுழற்றிபோடும். பின் தொலைத்தொடர்பு சாதனங்கள் முற்றிலும் செயலிழந்து விடும். பின் இவ் பகுதி கடலினைக் கடந்ததும் மீண்டும் இக் கப்பல் இயல்பு நிலைக்கு வரும் என இதில் அனுபவப்பட்டவர்கள் கூறுகின்றார்கள்.

மற்றும் இக் டிராகான் முக்கோண கடலில் ஆபத்துக்களை பற்றி 3000 ஆண்டுகளிற்கு முன்பே பீதி கிளம்பி இருக்கிறது. கி.பி 900 ஆணடில் சுங், யூயான் வம்சத்தினரால் எழுதப்பட்ட காவியம் ஒன்றில்

''அப் பகுதியைக் கடக்கும் போது காற்றடிக்காத காலமாக இருந்தாலும் கப்பல் செல்வது கடினமாக இருந்தது எனவும் வித்தியாசமான ஓசைகள் கேட்கும் எனவும் இக் கடற்பரப்பில் நூற்றுக்கணக்கான மைல்கள் வரை இருட்டிலும் வெளிச்சம் தெரியும் ''எனவும் கூறப்பட்டுள்ளது.

மேலும் ஜப்பானியர்கள் இதனை ''பேய்க் கடல்'' டிராகான் எனும் ஓர் இராட்சத பூனையே இவ் நாஷ வேலைகளினைச் செய்வதாகவும் பண்டைய ஜப்பானியர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

எது எவ்வாறு இருப்பினும் கூட இன்றைய பெர்முடா பகுதியினையும் டிராகான் முக்கோண கடற்பரப்பினையும் எடுத்துக் கொண்டால் இன்னும் ஓர் வியக்க வைக்கும் அதிசயமும் நடந்தேறி உள்ளன. அதாவது அமெரிக்காவில் மேற்கு கரையோரமான பெர்முடாவிலும், ஆசியாவின் கிழக்கு கடற்கரை பகுதியான டிராகன் கடலினை அண்டிய பிரதேசத்திலுமே பல நிலநடுக்கம் எரிமலை வெடிப்பு, இயற்கை அழிவுகள் போன்ற பல இன்னோரன்ன அழிவுச் செயல்களும் நடந்தேறி உள்ளது. இதில் குறிப்பாக

01. 1558ம் ஆண்டில் சீனாவில் ஏற்பட்ட பூகம்பத்தில் மூன்று மாகாணங்களில் இருந்து சுமார் 8 லட்சம் பேர் மரணமாகினர்.

02. 1596ம் ஆண்டில் ஜப்பானில் நடைபெற்ற நில நடுக்கத்தில் ஒரு தீவு மூழ்கிப் போனது. 4ஆயிரம் பேர் மரணமாகினர்.

03. 1737ம் ஆண்டு மீண்டும் ஜப்பானில் 200 அடி உயரமுள்ள கடல் அலைகள் ஜப்பானிய வட கரையை ஆக்கிரமித்தது.

04. 1793ம் ஆண்டு ஜப்பானில் வெடித்த எரிமலையால் 50 ஆயிரம் பேர் புதைந்து போயினர்.

05.1815ம்ஆண்டு இந்தோநேசியாவில் ஏற்பட்ட எரிமலை வெடிப்பில் 36 ஆயிரம் கன சதுர மைல்களை ஆக்கிர மித்தன.

(உலக சாதனை)

06. 1966ல் ஹாவாய் தீவில் வெடித்த எரிமலையில் பல ஆயிரம் மக்கள் மாண்டனர்.

இவைகள் யாவற்றினையும் கொண்டு பார்க்கின்ற வேளையில் இப் பெர்முடா டிராகன் முக்கோண பகுதி அபாயப்பகுதியாகக் காணப்பட்ட போதிலும் இப் பகுதியை அண்டி உள்ள இடங்களிலும் பல இன்னோரன்ன சேதங்கள் இன்றும் கூட ஏற்பட்டுக் கொண்டே தான் இருக்கின்றன. இதற்கான காரணம் யாது என விஞ்ஞானிகள் ஆய்வு நடாத்துகின்ற வேளையிலும் சந்திக்கு வராத சத்தியங்களாகவே உறங்கி கிடக்கின்றன. இதனது மர்மங்கள் முற்று முழுதாகக் கண்டு பிடிக்க முடியாமல் விஞ்ஞானிகளும் முயன்று கொண்டு தான் இருக்கின்றார்கள். முடிவு முயல் கொம்பாகவே உள்ளது.

## மட்டு நகரில் மாவீரர் புகைப்படங்களுக்கு அஞ்சலி செலுத்த முடியும்.

(அரியம்)

மாவீரர் தினத்தை முன்னிட்டு தேச விடுதலைப் போராட்டத்தின் போது வீரம் விளை நிலத்தில் வித்தாகிப் போன மாவீரர்களின் திருவுருவப் படங்கள் அடங்கிய நினைவு புகைப்படங்கள் பொது மக்கள் வணக்கம் செலுத்துவதற்காக மட்டு நகர் அரசடி மகாஜனக் கல்லூரி கலையரங்கில் இவ்வாரம் 20 திகதி தொடக்கம் எதிர் வரும் 27ம் திகதி நண் பகல்12மணி வரை மாவீரர்களின் திருவுருவப் படங்களைப் பொது மக்கள் பார்வையிட்டு அஞ்சலி செலுத்தலாம்.

இப் புகைப்பட கண்காட்சியானது மாவீரர்களின் தியாகங்களை நினைவு கூருவதற்காகவும் மாவீரர்களுக்கு மலரஞ்சலி செலுத்துவதற்காகவும் வைக்கப்பட்டுள்ளது.

இப்புகைப்பட கண்காட்சியை ஒரு வேடிக்கை நிகழ்வாகவோ, களியாட்ட நிகழ்வாகவோ,எவரும் கருதாமல் மண் மீட்புப் போரின் மகா காவியமான மாவீரர்களின் மகத்துவத்தை மனதில் நிறுத்தி அஞ்சலி செலுத்த அனைத்து பொது மக்களையும், பாடசாலை மாணவர்களையும், சகல அரச ஊழியர்களையும் மதத் தலைவர்களையும்,கல்வி நிறுவனங்களின் பயிலுனர்கள், விரிவுரையாளர்களையும், அனைத்து தமிழ் பேசும் மக்களையும் ஏற்பாட்டாளர்களையும் அன்பாக அழைக்கின்றனர்.

## அரசியல் சோதிடம்

இலங்கையில் சமாதானச் சூழல் தோன்றியும் இது இன்னும் ஒரு சரியான முடிவுக்கு வராததும் எடுக்கும் சமாதான முடிவுக்கு எதிர்ப்பும் தடையும் ஏற்படுவதும் தற்போதய அரசியலில் தோன்றியிருக்கும் குழப்ப நிலைகளும், கட்சிகளுக்குள் உண்டான பிரிவுகளும் மாற்றங்களும் எதிர்ப்புமாகும் இது மே மாதம் 30திகதி இருந்து நவம்பர் மாதம் 28திகதி மட்டும் தடுமாற்றமான சூழ்நிலையை உருவாக்கும். நவம்பர் மாதம் 28 திகதிக்குப்பின் அரசியல் குழப்பம் சீராகி மீண்டும் சமாதானப் பேச்சிமுன்னெடுக்கப்பட்டு நிரந்தரமான சமாதானம் மலர வாய்ப்புண்டு. அதனிடையில் நவம்பர் மாதம் 28 திகதிக்குள் பேசும் எந்தப் பேச்சும் கட்சிக்குழப்பங்களும் அரசியல் நெருக்கடியும் மீண்டும் ஒரு யுத்த அபாயத்தை உருவாக்கும். நவ 28 தி.பின் 2004ஆண்டு ஜூலை மாதத்துக்குள் நிரந்தரமான சமாதானம் ஏற்பட வாய்ப்புண்டு. இது கடந்தால் சமாதானம் கேள்விக்குறியாகும்.

*சோதிடர் சிவஹி சு.கு.*
*விநாயகமூர்த்தி குருக்கள்*

## மாவீரர் நினைவஞ்சலி.



| | |
|---|---|
| லெப். கேணல். செந்தூரான் | கறுக்காய்தீவு, |
| லெப். செவ்வந்தி | பூனகரி. |
| லெப். வெடியரசன் | |
| மேஜர். புகழினி (வெற்றிசை) | ஞானிமடம், |
| கப்டன். உதயன் (றங்கராஜ்) | பூனகரி. |
| 2ம்லெப். சிதம்பரன் | |
| லெப். மலரினி (லதா) | மல்லாவி. |
| லெப். நளினி (சுந்தரி) | புதுக்குடியிருப்பு |
| லெப். கேணல். அமுதசுரபி | செம்பியன்பத்து |

***27.11.2003 இல் நினைவாக.***

***த. சிவதாஸன்,***
***காவல் பணிமனை,பழுகாமம்.***

Regd. as a News Paper at the G.P.O.(QD/101/NEWS/2003)

# மலர்தூவி அஞ்சலிப்போம்




தேசவிடுதலைக்காய்
வீரம் விளைநிலத்தில்
வித்துக்களான எங்கள்
முத்துக்களே!
உங்களின் உன்னத தியாகத்தால்
இந்த மண் புனிதமானது
காலத்தால் அழியாத
மாவீரர் தெய்வங்களின்
மாணிக்க கல்லறைகளாய்
வீரம் விளை நிலத்தின்
வெற்றிப் பெரும் வளமாய்
எழுந்து நிற்கும்
துயிலும் இல்லங்களாம்
தரவை தாண்டியடி
மாவடிமுன்மாரி வாகரை
உடும்பன்குளம் (அம்பாறை)
ஆகிய ஐந்து
ஆலயங்களிலும்
மாவீரர் நாளிதனில்
மணியோசை முழங்க
மனதார தீபங்கள் ஏற்றி
மலர் தூவி
அஞ்சலிப்போம்.

— அம்பிளாந்துறை அரியம் —







## இது கார்த்திகை மாதம்!

இது கார்த்திகை மாதம்
கல்லறைகள் நடுவே
ஈழம் கருத்தரித்து விட்டது!
நாளைய கதிரவனின் ஒளியில்
பிரகாசிக்கும்



வெற்றிக்கு உரமிட்ட வேங்கைகளிங்கே
வீரத்தின் விளைநிலம்
மண்ணன்னை மடியினிலே
நெடு மூச்சு விட்டு கனவுகளை சுமந்து
துயில்கின்றார்கள்.
இது கார்த்திகை மாதம்

வே. திருவேல்

# அலையின் பார்வையில்



## இங்கிலாந்து துடுப்பாட்ட வீரர்களை வீழ்த்த முரளிதரன் புதிய திட்டம்

இங்கிலாந்து பேட்ஸ்மேன்களை வீழ்த்த புதிய தந்திரங்களை கையாளப் போவதாக இலங்கை அணியின் நட்சத்திர சுழற்பந்து வீச்சாளரான முத்தையா முரளிதரன் தெரிவித்துள்ளார். இலங்கை அணிக்கு எதிரான 3 டெஸ்ட் போட்டிகளில் விளையாடுவதாக இங்கிலாந்து அணி இலங்கை வருகின்றது.

இந்த பயண த்தின் போது வாகன் தலை மையிலான இங்கிலாந்து அணிக்கு சிக்கலை உருவாக்கும் நோக்கத்துடன் முரளிதரன் இருக்கிறார்.

இந்த தொடர் குறித்து முரளிதரன் அளித்துள்ள பேட்டியில் குறிப்பிட்டு இருப்பதாவது," தற்சமயம் நான் மிகச் சிறப்பாக பந்துவீசி வருகிறேன். எந்தவித சவாலுக்கும் நான் தயாராகி வருகிறேன். கடந்த முறை இங்கிலாந்து அணி இலங்கை வந்திருந்த போது சிறப்பாக விளையாடியது. மீண்டும் இங்கிலாந்து அணி இலங்கை வருகிறது.

இந்த முறை அவர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்துவேன்" என்று கூறினார்.

டெஸ்ட் தொடருக்குப் பின்னர் இரு அணிகளுக்கும் 3ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாட உள்ளன.

1990-களில் இங்கிலாந்து அணி முரளிதரனின் பந்து வீ.ச்சு திணறியது குறிப்பிடத்தக்கது ஆமாம் தற்போது இங்கிலாந்து அணி நல்ல முறையில் தேறி சிறப்பாக விளையாடி வருவது குறிப்பி டத்தக்கது ஆனால் இந்த முறை நியூசிலாந்து அணியின் பேட்ஸ்மேன்களை திணறடிக்கும் புதுவிதமான தந்திரங்களை வலைப் பயிற்சியின் போது கையா ண்டு வருகிறார் முரளிதரன்.

''முன்னேற்றம் என்பது மிகவும் அவசியம் சமீப காலமாக இதற்கான கடின முயற்சிகளை மேற் கொண்டு வருகின்றேன். இது பேட்ஸ்மேன்களுக்கு மிகுந்த சிரமத்தை கொடுப்பதாக உள்ளது.'' என்று கூறிய முரளிதரன் இங்கிலாந்து அணிக்கு எதிரான தொடர் சாவாலானதாக இருந்தாலும் இலங்கை அணி தொடரை வெல்லும் என்று உறுதியுடன் கூறினார்.



''நாங்கள் நல்லமுறையில் பேட்டிங் செய்தால் தொட ரை வெல் வோம். அதே சமயம் இங்கிலாந்து அணியும் நல்ல முன்னேற்றம் அடைந்துள்ள து. ட்ரெஸ்கோதிக, வான் மற்றும் கிராஹம் தோர்ப் ஆகியோரைக் கொண்ட வலுவான பேட்டிங் வரிசையைக் கொண்ட அணியாக இங்கிலாந்து அணி உள்ளது. இங்கிலாந்து அணி பலவீனமாக இருப்பது என்றால் பௌலிங் தான். கேடிக், கா.்.ப் இல்லாமல் இருப்பது இங்கிலாந்து அணிக்கு பலவீனமே ஏனெனில் இந்த இருவரும் ரீவர்ஸ் ஸ்விங் வீசக் கூடியவர்கள்'' என்று கூறிய முரளிதரன் 82டெஸ்ற் போட்களில் விளையாடி 459 விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளார். டெஸ்ற் கிரிக்கெட்டில் அதிக விக்கட்டுக்களை வீழ்த்தியவர்கள் பட்டியலில் முதலிடத்தைப் பெறும் முனைப்பிலும் முரளிதரன் இருப்பதில் குறிப்பிடத்தக்கது அடுத்த 10 மாதங்களில் 14டெஸ்ற் போட்டிகளில் விளையாடவுள்ளது இதனால் மே.இ.தீவுகளின் வால்ஷ் ஏற்படுத்தியுள்ள 519 விக்கெட்டு உலக சாதனை முரளிதரனுக்கு எட்டும் தூரத்தில் இருப்பது குறிப்பிடத்தக்கது.

''என் வாழ்க்கையில் முதல் முறையாக பதற்றத்துடன் தொடரை துவக்குகின்றேன். ஏனெனில் தற்சமயம் எல்லோரும் சாதனை பற்றியே பேசுகிறார்கள். வால்ஷின் 519 விக்கெட்டு சாதனை அல்லது நான் 600 விக்கட்டுக்களை வீழ்த்தும் சாதனையை பற்றியே எல்லோரும் பேசுகின்றனர். எனவே இதற்கு சற்று பதற்றமாக உள்ளது. இது பற்றி நான் நினைப்பதில்லை. ஆனால் சில சமயங்களில் இந்த விசயம் என்னுடைய ஞாபகத்திற் கு வந்துவிடுகின்றது.அப்போது பதற்றம் ஏற்பட்டு விடுகின்றது"



ஜெனிவாவில் 20, நவம்பர், 2003 அன்று ஏலம் விடுவதற்காக அளிக்கப்பட்டிருக்கும் மிகப்பெரிய, உள் வெடிப்புக்களற்ற இரட்டை நிற வைரமே இது. 103.83 கரட்ஸ் நிறையுடைய வைரமாகும். இதன் பெறுமதி 8,000,000 அமெரிக்க டொலர் என மதிப்பிடப்பட்டுள்ளது.



ஹேரில் என அமைக்கப்படும் ஒரு வகை கடல் மீன் நீர நாய் ஒன்றின் வாய்க்குள் மறையும் இக்காட்சி ஜேர்மனின் பேர்லின் உள்ள மிருகக் காட்சி சாலையில் படமாக்கப்பட்டது.

இப்பத்திரிகை கொக்கட்டிச்சோலை நித்தி பதிப்பகத்தில் 16-11-2003 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.